
janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi janasakthitholaikatchi



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 86 | 2023 டிசம்பர் 10 - டிசம்பர் 16 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 36




# மழை, வெள்ளத்தில் மிதந்த சென்னை!

# புயல், மழையால் பாதிப்பு ஏன்?

**மிக்ஜாம் புயல் மழை சென்னையைப் புரட்டிப் போட்டுள்ளது. இரண்டு இரவுகள், ஒரு பகல் தொடர்ச்சியாகப் பெய்த மழையால் சென்னை மாநகரம் ஒட்டுமொத்தமாக முடங்கிவிட்டது. சென்னை விமான நிலையம் இழுத்து மூடப்பட்டது. சென்னைக்கு வந்து செல்கிற ரயில்கள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டன.**


சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகை

தாழ்வான பகுதிகளில் அடுக்குமாடி குடியிருப்பு வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்கள், தீப்பெட்டி போல வெள்ளநீரில் அடித்துச் செல்லப்படும் காட்சிகளும் அண்ணா சாலையில் கரைபுரண்டு ஓடும் வெள்ள நீரும் சமூக ஊடகங்களில் வைரலாகின. மறுபுறம் புயல் மழை பாதிப்பு ஏற்பட்ட பகுதிகளில் இரவு பகல் பாராமல் தீயணைப்புத் துறையினர், பேரிடர் மீட்புத் துறையினர், மின்துறை ஊழியர்கள், மாநகராட்சி ஊழியர்கள் பணி செய்து மக்களை காத்தனர்.

மக்களைத் தங்க வைப்பதற்காக மசூதிகள், சர்ச்சுகள் திறக்கப்பட்டன. மழை வெள்ளம் மக்களின் இயல்பு வாழ்க்கையை அச்சுறுத்தினாலும் அன்பும் ஆற்றலும் நிறைந்த மனித மனங்கள் வெள்ளப் பாதிப்பை வென்றன.

கடந்த 47 ஆண்டுகளில் இல்லாத மழைப் பொழிவை சென்னை தற்போது சந்தித்துள்ளது. ஆனாலும் உயிர் இழப்புகளும் பொருள் இழப்புகளும் பெருமளவிற்கு தடுக்கப்பட்டிருப்பது ஆறுதலான செய்தியாகும்.

### இயற்கை வெள்ளம்:

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், "வரலாறு காணாத பெருமழை கொட்டித் தீர்த்துள்ளது. மீனம்பாக்கம் 43 செ.மீ, பெருங்குடியில் 46 செ.மீ மழை பதிவாகி உள்ளது. பல இடங்களில் தண்ணீர் தேக்கம் ஏற்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது தற்போது 'மிக்ஜாம்' புயலால் ஏற்பட்டுள்ள மழையின் அளவு அதிகம். 2015ஆம் ஆண்டு கடந்த ஆட்சியில் நடந்த வெள்ளப்பெருக்கில், நுங்கம்பாக்கத்தில் 29.4 செ.மீ மழை பதிவாகியுள்ளது. மீனம்பாக்கத்தில் 34.5 செ.மீ மழை பதிவாகியுள்ளது.

இதனை ஒப்பிட்டு பார்க்கையில் தற்போது பெய்துள்ள மழை மிக, மிக அதிகமாகப் பதிவாகியுள்ளது. 2015 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தில் 199 பேர் உயிரிழந்தனர். தற்போது அதைவிட அதிகமான மழை பெய்தும் 9 பேர் மட்டுமே உயிரிழந்துள்ளனர். ஆனால் இந்த உயிரிழப்புகளும் ஏற்பட்டிருக்கக் கூடாது. இதற்காக மிகவும் வருந்துகிறேன். 2015ல் ஏற்பட்டது செயற்கை வெள்ளம், இது இயற்கை வெள்ளம். செம்பரம்பாக்கம் ஏரியில் திடீரென நீர் திறந்துவிடப்பட்டதே அன்று வெள்ளம் ஏற்பட காரணம். அடையாற்றில் ஒரு லட்சம் கன அடி தண்ணீர் திடீரென்று திறக்கப்பட்டது. வெள்ளம் ஏற்பட இது முக்கிய காரணமாக இருந்தது. ஆனால் அரசு எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையால் கடந்த 4 நாட்களில் செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்த நீரை முன்கூட்டியே திறந்துவிட்டதால் இத்தகைய பெருமழையை ஓரளவு சமாளித்துள்ளோம்" என்று கூறியுள்ளார்.

முதலமைச்சரின் இந்தக் கூற்றில் உண்மை இருப்பதை மறுப்பதற்கில்லை. அதேநேரம் மழை பெய்து கொண்டிருக்கும்பொழுதே திட்டமிட்ட வகையில் திமுகவுக்கு எதிரான கருத்துக்களை ஆர்எஸ்எஸ், பாஜகவினர்

தொடர்ச்சி 16 ஆம் பக்கம்





## பேரிடர் இழப்புகளை ஈடுகட்ட உதவ வேண்டும்

### ஒன்றிய அரசுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

பேரிடர் இழப்புகளை ஈடுகட்ட ஒன்றிய அரசு உதவ வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு

தமிழ்நாட்டின் தலைநகர் சென்னை பெருநகரையும், அதன் சுற்றுவட்டார புறநகர் மாவட்டங்களையும் புரட்டிப் போட்ட மிக்ஜம் புயல் 05.12.2023 அன்று ஆந்திர மாநிலம் பாபட்லா பகுதியில் தீவிரப் புயலாக மாறி கரையைக் கடந்தது.

வங்கக் கடலில் காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக உருவான காலம் முதல், மிக்ஜம் புயலாக கரையைக் கடந்த காலம் வரை சென்னை பெருநகரிலும், அதன் புறநகர்களில் தொடர்ந்து பெய்த கனமழையால் பெரும் பகுதிகளில் தண்ணீர் தேங்கி மக்கள் இயல்பு வாழ்க்கை பாதித்துள்ளது. பருவ கால மாற்றத்தையும், புயல் எச்சரிக்கை தகவலையும் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு மேற்கொண்ட தடுப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளால் பாதிப்பின் கடுமை குறைந்துள்ளது. முதலமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்களும், தலைமைச் செயலாளர், மாநகராட்சி ஆணையர் உள்ளிட்ட உயர் அலுவலர்கள் தொடங்கி, தூய்மைக் காவலர்கள் வரை நிவாரணப் பணிகளில் ஈடுபட்டதும், முகாம்கள் அமைத்து, உணவு வழங்கப்பட்டதும் பாதிக்கப்பட்டவர்களை ஆற்றுப்படுத்துவதாக அமைந்தது.

சிறு, குறு தொழிலகங்கள், வணிக நிறுவனங்கள், புத்தக வெளியீட்டு நிறுவனங்கள் வெள்ளம் புகுந்த காரணத்தால் பெரும் சேதாரத்தை சந்தித்துள்ளன. சாலைகள், பாலங்கள், நீர் தேங்கும் பகுதிகளை சீரமைத்து மேம்படுத்தும் பணிகள் என ஏராளமான பணிகளை குறிப்பிட்ட கால எல்லைக்குள் செய்து முடிப்பது தான் மக்கள் மறுவாழ்வுக்கு உதவியாக அமையும். இதற்கான ஏற்பாடுகளை செய்ய 6 ஆயிரத்து 230 கோடி ரூபாய் நிதி உடனடி தேவை என மதிப்பிட்டு ஒன்றிய அரசிடம் நிதி கேட்டு முதலமைச்சர் கடிதம் மூலம் முறையிட்டுள்ளார். தமிழ்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மக்களவையில் வலியுறுத்தியுள்ளனர்.

பாஜக ஒன்றிய அரசு ஜிஎஸ்டி வரி முழுவதையும் எடுத்துக் கொண்டு வஞ்சித்து வருவது போல், இந்த இயற்கை பேரிடர் காலத்திலும் தமிழ்நாட்டை வஞ்சித்து விடக் கூடாது. தமிழ்நாடு அரசு கோரியுள்ள நிவாரண நிதியை பேரிடர் கால உதவியாக ஒன்றிய அரசு உடனடியாக முழுமையாக வழங்கி உதவ வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு பிரதமரை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் தெரிவித்துள்ளார்.

கட்சிக் கடிதம்

## அலைகடல் மீது தொலையும் வாழ்க்கை 3



# இவைதான் இலங்கை காட்டும் நல்லெண்ணமா?



போர்க்குணம் மிக்க தோழர்களே!

**நல்லெண்ண அடிப்படையில் நமது நாட்டுக்குச் சொந்தமான, தமிழ்நாடு மாநில எல்லைக்கு உட்பட்ட கச்சத் தீவை மாநில அரசிடம் கூட கலந்து ஆலோசிக்காமல், கருத்துக் கேட்காமல், தமிழ்நாட்டு மீனவப் பெருமக்களின் கருத்தறியாமல், தன்னிச்சையாக ஒன்றிய அரசு இலங்கைக்கு தாரை வார்த்தது.**

நமக்கு நல்லெண்ணம் இருக்கின்றது. நமது நேச நாடு என்று கூறி பெருமைப்பட்டுக் கொள்ளக்கூடிய இலங்கை, நேசத்துடன் நடந்து கொண்டதா? இன்று நடந்து கொள்கிறதா?

சிங்கள அரசு, குறிப்பாக ராஜபக்சே குடும்பத்தினர் அரசாட்சியில் இருந்த போது, இலங்கையை உருவாக்கியதில் பெரும் பங்கு வகித்த தமிழ் மக்களை அழித்தொழித்தனர். இனப்படுகொலையை மேற்கொண்டனர்.

போர் நின்றுவிட்டது. எஞ்சிய தமிழர்களில் ஒரு பகுதியினர் அங்கேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இன்னொரு பகுதி தமிழர்கள் இந்தியா உட்பட உலக நாடுகள் பலவற்றிலும் அகதிகளாக அல்லல்பட்டு வருகின்றனர். தங்களின் தாய் நாட்டுக்குச் சென்று வாழ முடியாத அவலத்திற்கு ஆளாகியுள்ளனர். குடியுரிமை அற்றவர்களாக, அனாதைகளாக ஆக்கப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளைக் காரணம் காட்டி, தமிழ்நாட்டு மீனவர்களையும் அவர்களின் படகு மற்றும் தொழிலுக்குரிய வலைகளையும் பறிமுதல் செய்து பாழ்படுத்தி வந்த இலங்கை கடற்படை, இன்றும் தனது அட்டூழியத்தை, அராஜகத்தை மேற்கொள்வது ஏன்?

நல்லெண்ணம் என்பது நமக்கு மட்டும் தான் சொந்தமா?

இலங்கை நட்பு நாடு என்கிற காரணத்தால், அண்டை நாடு என்கிற காரணத்தால், அந்நாடு கடும் பொருளாதார நெருக்கடிக்கு ஆட்பட்டபோது, இந்தியா தனது ஆதரவுக் கரத்தை நீட்டியது.

இலங்கை மக்கள் இன பேதம் ஏதுமின்றி, ராஜபக்சே அரசுக்கு எதிராக ஒன்றுபட்டுப் போர் புரிந்ததைக் கண்டோம்.

வீதிகள் தோறும் போராட்டம் நடைபெற்றது. கட்டுக்கடங்கா போராட்டமாக வெடித்தது. கடல் சீற்றத்தையும் தாண்டி மக்கள் சீற்றம் அடைந்தனர். எரிமலையாய் கொதித்து எழுந்தனர். நாட்டின் எஜமானர்களாகத் திகழ்ந்த ராஜபக்சே சகோதரர்கள் துண்டைக் காணோம், துணியைக் காணோம் என ஓட்டம் பிடித்தனர். அண்டை நாடுகளுக்குச் சென்று அடைக்கலம் புகுந்தனர்.

துப்பாக்கிகளில் தோட்டாக்களை நிரப்பிக் கொண்டு, சீருடையுடன் மக்களை முறைத்துப் பார்த்தபடியே, மிரட்டும் பார்வையுடன் வலம் வரும் ராணுவம் என்ன ஆனது?

இலங்கைத் தமிழ் மக்களை பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் என்று கூட பார்க்காமல், இரக்கம் காட்டாமல், காக்கை குருவிகளை சுடுவது போன்று சுட்டுத் தள்ளிய சிங்கள ராணுவம் எங்கே போனது?

தடிகொண்டு தாக்கும், துப்பாக்கிகள் கொண்டு சுட்டுப் பொசுக்கும் இலங்கை காவல்துறை எங்கே போனது?

தரைப்படை, கப்பற்படை, விமானப்படை என முப்படைகளைக் கொண்டு தமிழ் மக்களின் ரத்தம் சுவைத்தவர்கள் எங்கே போனார்கள்?

மக்கள் கொதித்து எழுந்தால், எப்படையும் மக்களை வெல்ல முடியாது என்பதற்கு பல நாடுகளின் உதாரணங்கள் உண்டு. அண்மையில் இலங்கை மக்களின் எழுச்சியையும் கண்டோம்.

இலங்கை கடும் பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகி அரிசி, பால், ரொட்டி என அனைத்து அத்தியாவசிய பொருட்களின் விலையும் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு உயர்ந்து, மக்களின் வாழ்க்கை நிலை கடைக்கோடிக்குச் சென்றது. இலங்கை அரசு பிற நாடுகளிடம் கையேந்தும் நிலைக்கு உள்ளான போது, நமது இந்திய அரசு உதவிக்கரம் நீட்டியது. உணவுப் பொருட்கள் மருந்துகள் என பெருமளவிற்கு இலங்கைக்கு அனுப்பியது.



ஒன்றிய அரசு மட்டுமல்ல, தமிழ்நாடு அரசு குறிப்பாக முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் நமது மாநிலத்தின் சார்பாக கப்பல் நிரம்ப அரிசி உட்பட உணவுப் பொருட்கள், மருந்துகளை நல்லெண்ண அடிப்படையில் அனுப்பி வைத்தார்.

இலங்கை மக்கள் மீது நமக்கு நிரம்ப நல்லெண்ணம் இருக்கின்றது. நமது அணுகுமுறை வெறுப்புணர்வுடன் இல்லை.

ஆனால், இது நமக்கு மட்டும் தானா? இலங்கை அரசுக்கு அத்தகைய நல்லெண்ணம் வேண்டாமா?

இலங்கை அரசுக்குத் தெரியாமல், இலங்கை அரசுக்கு கட்டுப்படாமல் தன்னிச்சையாக இலங்கை கடற்படை செயல்பட்டு வருகின்றதா?

இன்றைக்கும் தமிழ்நாட்டு மீனவர்கள் தாக்கப்படுகின்றனர். படகுகளை பறிமுதல் செய்கின்றனர். மீன் வலைகள் பறிமுதல் செய்யப்படுகின்றன ஏன்?

தங்களுடைய தொழில் மீன்பிடிப்பது, இத்தொழிலைத் தவிர்த்து வேறு தொழிலை கடலில் மீனவர்கள் செய்திட இயலுமா?

தங்கள் வயிற்றுப் பிழைப்புக்காக ஆழ்கடலுக்குச் சென்று மீன்களைப் பிடித்து கரைக்கு கொண்டு வந்து சேர்க்கின்றார்கள்.

கடலில் வாழும் மீன்களில் இந்திய மீன், இலங்கை மீன், பாகிஸ்தான் மீன், சீனா மீன் என்று இல்லை.

கடலில் வாழும் மீன்களுக்கு எந்த நாடும் உணவு அளிக்கவில்லை. எந்த நாடும் தங்களுக்குரிய மீன்கள் என்று சொந்தம் கொண்டாட முடியாது.

ஆனால், இலங்கை கடற்படை செய்து வருகின்ற அட்டூழியங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. தங்களின் வயிற்றுப் பிழைப்புக்காக கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும் தமிழ்நாட்டு மீனவ பெருமக்களை சுட்டுத் தள்ளுவது, காயப்படுத்துவது, இரும்புக் கம்பிகளால் அடிப்பது, தடி கொண்டு தாக்குவது, 'இந்திய வேசி மகனே' என எழுதக் கூசும் சொற்களில் கண்டபடி திட்டுவது, படகில் பட்டொளி வீசிப் பறக்கும் தேசியக்கொடியை அவிழ்த்து குண்டியை துடைக்க சொல்லி துன்புறுத்துவது, திருக்கை மீனின் மல வாய்க்குள் புணர்வு கொள்ளச் சொல்லி மகிழ்வது, மீனை முள்ளோடு முழுதாய் வாய்க்குள் அழுத்தி, ரணமாகி வழியும் ரத்தத்தைக் கண்டு மகிழ்வது, சக மீனவனோடு ஓரினச் சேர்க்கை செய்யச் சொல்லி துன்புறுத்துவது, தந்தை மகனை தகாத செயல் செய்யச் சொல்லி துப்பாக்கி முனையில் துன்புறுத்துவது, குளிர் பதன பனிக்கட்டிகளில் ஆடையின்றி உருட்டி விடுவது, கடலுக்குள் தூக்கிப்போட்டு விளையாடுவது, படுக்க வைத்து நெஞ்சில் ஏறி மிதிப்பது, முகத்தில் காரி உமிழ்வது, நமது மீனவர்கள் பிடித்த மீன்களை மட்டுமல்ல, அவர்கள் அணிந்துள்ள ஆடைகள்,மோதிரங்கள்,கைக்கடிகாரங்கள் என அனைத்து உடைமைகளையும் அபகரித்துக் கொள்வது, அவர்கள் இடுப்பில் அணிந்துள்ள அரைஞாண் கயிற்றை அறுத்தெறிவது, நடுக்கடலில் விமானத்திலிருந்து வெடிகுண்டுகளை வீசி படகுகளை உடைப்பது, படகுகளை பறித்துச் செல்வது போன்ற கொடூரங்களை இலங்கை கடற்படையினரும் விமானப் படையினரும் இரக்கமற்ற முறையில் செய்து வருகின்றனர். இவைதான் இலங்கை அரசு காட்டும் நல்லெண்ணமா?

ஒன்றிய அரசு தமிழ்நாட்டு மீனவர்களை இந்தியக் குடிமகனாக ஏற்க மறுக்கின்றதா? தமிழ்நாட்டு மீனவர்கள் இந்திய பிரஜைகள் இல்லையா?

காஷ்மீரில் தீவிரவாதிகளின் தாக்குதலில் இந்தியக் குடிமகன் ஒருவர் பலியானால், ராணுவம் கொண்டு பதில் தாக்குதலில் ஈடுபடும் ஒன்றிய அரசு..

தேசத்தின் எல்லைகளில் ராணுவத்தை நிறுத்தி மக்களைப் பாதுகாக்கும் ஒன்றிய அரசு..

அண்டை நாடுகளில் ஊடுருவலுக்கு எதிராகப் போர் தொடுத்து, எதிரிப் படைகளை எதிர்கொள்வதோடு அகப்பட்டவர்களை சுட்டு வீழ்த்துவதுடன், நமது நாட்டு இராணுவ வீரர்களையும் பலி கொடுத்து, வீரமரணம் எய்திட்ட வீரர்களை அழகான பெட்டியில் வைத்து, விமானத்தில் சொந்த ஊருக்கு இராணுவ வீரர்களுடன் அனுப்பி வைத்து, இராணுவ மரியாதையுடன் அடக்கம் செய்யும் ஒன்றிய அரசு..

இலங்கை என்ற இன்னொரு நாடு, நமது நாட்டு மீனவர்களை சுட்டுக் கொல்வதை ஒன்றிய அரசு வேடிக்கை பார்ப்பது ஏன்? தமிழ்நாட்டு மீனவர்கள் இந்திய குடிமக்கள் இல்லையா?

(தொடரும்)

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)

மாநிலச் செயலாளர்

## அவ்வளவு புனிதமானதா அமலாக்கத்துறை?

# பொறிக்குள் சிக்கிய எலி!



டி.எம்.மூர்த்தி

**இந்தியாவையே சுத்தப்படுத்த வந்த புனிதர் படைபோல அமலாக்கத் துறையை, மோடி பக்தர்கள் சிலாகித்து வாய்நீளம் காட்டுவது உண்டு. அவர் பிடிபட்டார், இவர் பிடிபட்டார், எவர் பயந்து ஓடுகிறார் என்றெல்லாம் வர்ணனையும் செய்வார்கள்.**

அந்தப் படையின் புனிதர் ஒருவர், 20 லட்சரூபாய் வாங்கும்போது கையும் மெய்யுமாய் பிடிபட்டிருக்கிறார்.

சுரேஷ்பாபு என்ற ஒரு டாக்டர் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் பணிபுரிகிறார். அவரது துணைவியாரும் டாக்டர். தனியார் மருத்துவமனை வைத்திருக்கிறார். அங்கும் சுரேஷ்பாபு நோயாளிகளை பார்க்கிறார். வருவாய்க்கு மீறி சொத்து சேர்த்த வழக்கில் ஏற்கனவே மாநில அரசின் லஞ்ச ஒழிப்புத்துறை அவர் மீது விசாரணை நடத்தி இருக்கிறது.

அங்கித் திவாரி என்ற 40 வயதுடைய வயதுடைய அதிகாரி, சென்ற ஏப்ரல் மாதம் தான் மதுரை அமலாக்க துறையின் மண்டல அலுவலகத்துக்கு பணி மாற்றம் செய்யப்பட்டுள்ளார். அவர் இது மாதிரியான விவரங்களை மோப்பம் பிடித்து கண்டறிபவர் போலும்.

சுரேஷ்பாபுவை மதுரை அலுவலகத்திற்கு விசாரணைக்கு வரவழைத்து இருக்கிறார். பிரதமர் மோடியிடமிருந்து அறிவுறுத்தல் வந்திருப்பதாகவும், இந்தக் கோப்பை மூட வேண்டும் என்றால் 3 கோடி ரூபாய் தர வேண்டும் என்றும் மிரட்டி இருக்கிறார். கடைசியில் 51 லட்சம் ரூபாய் என்று பேரம் படிந்திருக்கிறது.

முதலில் 20 லட்சம் ரூபாய் வாங்கியவர், மீதியை கொடுக்குமாறு விரட்டியுள்ளார். தான் கறக்கப்படுவதை அறிந்த அந்த டாக்டர் மாநில காவல்துறைக்கு தகவல் தெரிவித்துவிட்டார்.

லஞ்ச ஒழிப்புத்துறை, 20 லட்சம் ரூபாய் தொகைக்கான ரூபாய் நோட்டுகளில் ரசாயனம் தடவித் தர, அதனை நடுவழியில் சாலையிலேயே வாங்கிக் கொள்ள அங்கித் திவாரி வந்திருக்கிறார். டாக்டரின் காருக்கு முன்னால் தன் காரை நிறுத்தி, டிக்கியை திறந்து பணத்தை தனது காரில் வைக்குமாறு திவாரி கூற, அதன்படியே நடந்தும் உள்ளது.


டாக்டரின் காரின் முன்புறத்தில் பொருத்தப்பட்டுள்ள கேமராவில் இவை அனைத்தும் பதிவாகி வருவதை, அந்த வேட்டைப் புலி அறிந்திருக்கவில்லை.

அதன் பிறகு திண்டுக்கல், கொடைக்கானல் நெடுஞ்சாலையில், 25 கிலோ மீட்டர் தூரத்துக்கு அந்த காரை விரட்டிச் சென்று, கடைசியில் ஒரு சுங்கச்சாவடியில் மடக்கிப்பிடித்து, மறுக்க முடியாத சான்றுகளோடு மாநில லஞ்ச ஒழிப்புத்துறை திவாரியை கைது செய்திருக்கிறது.

இது போல அவர் இன்னும் பலரை மிரட்டி வந்ததாக தெரிகிறது. தமிழ்நாடு சட்டப்பேரவை தலைவர் எம். அப்பாவு அவர்களுக்கு அமுலாக்க துறையின் சார்பில் பேசுவதாக கடந்த மூன்று மாத காலமாக மிரட்டல் வருவதாக, அவரே தெரிவித்து இருப்பதாக செய்திகள் கூறுகின்றன.

அமைச்சர்களையும், அரசியல் தலைகளையம் உருட்ட முடிந்த தம்மை, என்ன செய்தாலும் எதிர்த்து கேட்க நாதியே இல்லை என்ற தைரியம் அந்தப் பரமசிவன் கழுத்துப் பாம்புக்கு! கடைசியில் தமிழ்நாடு காவல்துறை வைத்த பொறியில், தேங்காய் துண்டுக்கு ஆசைப்பட்ட எலி போல போய் விழுந்தது!

தமிழ்நாட்டில் தலையெடுக்க முடியாத நிலையில், தம்மை எதிர்த்து நிற்பவர்களை அரசியல் ரீதியாக பழிவாங்க, அமலாக்கத்துறை வருமான வரித்துறை ஆகியவற்றை பாஜக பயன்படுத்துகிறது என்று திராவிட முன்னேற்ற கழகம் உள்ளிட்ட பல கட்சிகள் பேசி வருகின்றன.






இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், 'ஜனசக்தி'யிலேயே விரிவான கட்டுரை எழுதியிருக்கிறார்.

திவாரியை கைது செய்ததோடு மட்டுமல்லாமல், அமலாக்கத்துறையின் மதுரை மண்டல அலுவலகத்தை 10 மணி நேரத்துக்கு லஞ்ச ஒழிப்புத்துறை சோதனை போட்டுள்ளது. காவல்துறை உள்ளிருக்கும் போதே, அமலாக்கத்துறை அதிகாரிகள் இந்திய துணை ராணுவத்தை முழு ஆயுதங்களோடு அங்கு வரவழைத்திருக்கிறார்கள்! 2024 தேர்தலில் வெற்றி பெற்றால், மாநில காவல்துறையினரை சுடக்கூட செய்வார்கள்.

காவல்துறை அத்துமீறி நுழைந்ததாகவும், தீய நோக்கத்தோடு தேடுதல் வேட்டை நடத்தியதாகவும், மிக நுட்பமான தகவல்களை எல்லாம் சேகப்படுத்தியதாகவும், அவர்கள் மீது முதல் தகவல் அறிக்கை (எஃப்ஐஆர்) பதிவு செய்ய வேண்டும் என்றும் தமிழ்நாடு காவல்துறை தலைவருக்கு, அமலாக்கத்துறை மனு தந்துள்ளது.

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகத்தில், தலைமைச் செயலாளர் அலுவலக அறைக்குள்ளேயே நுழைந்து தேடுதல் வேட்டை நடத்திய போது அமலாக்க துறைக்கு இந்த ஞானம் வந்திருக்கவில்லை போலும்!

ஆர்எஸ்எஸ் ஸால் நன்கு கட்டமைக்கப்பட்டுள்ள வலதுசாரிகளின் துடிமக்குழு (டிஜிட்டல் குரூப்) இந்தக் கைதைக் கண்டித்து துடியாய்த் துடிக்கிறது. "ஒன்றிய அரசின் அமலாக்கத்துறை மீது மாநில அரசு நடவடிக்கை எடுக்க அதிகாரம் உண்டா? தேவை என்றால் மத்திய புலனாய்வு புலனாய்வுத் துறையிடம் அல்லவா சொல்லி இருக்க வேண்டும்" என்கிறார்கள்.

இது பற்றி ஏற்கனவே கேரள உயர்நீதிமன்றம் ஒரு தீர்ப்பு அளித்திருக்கிறது. டெல்லி ஸ்பெஷல் போலீஸ் எஸ்டாப்ளிஷ்மெண்ட் (டிஎஸ்பிஇ) சட்டத்திலோ அல்லது ஊழல் தடுப்புச் சட்டத்திலோ, ஒன்றிய அரசின் பணியாளர் மீது ஊழல் குறித்த புலன் விசாரணையை மாநிலக் காவல்துறை நடத்தக்கூடாது என்று சொல்லப்படவில்லை. மத்திய புலனாய்வுத்துறை அல்லது மத்திய விஜிலென்ஸ் துறை அல்லது வேறு ஏதேனும் ஒன்றிய அரசின் முகமை மட்டும்தான் ஒன்றிய அரசு பணியாளர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எந்த நிபந்தனையும், எந்தச் சட்டத்திலும் இல்லை என்று அது கூறுகிறது.

"நாங்கள் இந்த வழக்கை மத்திய புலனாய்வுத் துறையிடம் எதை முன்னிட்டும் ஒப்படைக்கப்போவதில்லை. சட்டரீதியான முடிவுதான் ஏற்படும். அமலாக்க துறை மற்றும் லஞ்ச ஊழலில் ஈடுபட்டவர்கள் அனைவரையும் நீதியின் முன் நிறுத்துவோம்" என மாநில லஞ்ச ஒழிப்புத்துறை கூறியிருக்கிறது.

வழக்கம் போலவே பாஜக மாநில தலைவர் அண்ணாமலை, "இது ஒரு தனிப்பட்ட நபரின் தவறுதான்; ஒட்டுமொத்தமாக அமலாக்க துறையே இவ்வாறு தான் இருக்கிறது என்று சொல்வது மிகவும் தவறு" என்று சாடி இருக்கிறார்.

திமுக எம்பி ஒருவர் வடக்கு தெற்கு குறித்து பிரித்துப் பேசியதற்கு, அது தனி நபரின் பேச்சு என்றில்லாமல், திமுக தலைவர் கூட அல்ல, இந்தியா கூட்டணி தலைவர் ராகுல் காந்தி பதில் சொல்ல வேண்டும் என்று இந்த மேதை பேசியது இப்போது அவருக்கு நினைவு வரவில்லை போலும்!

அமலாக்கத்துறை தமிழ்நாட்டின் 10 மாவட்ட ஆட்சியர்களுக்கு அழைப்பாணை (சம்மன்) அனுப்பியது. "விசாரணைக்கு அழைத்தால் போக வேண்டியது தானே, மடியில் கனமில்லை என்றால் வழியில் ஏன் பயம்" என்று அருள்வாக்குச் சொன்னார் அஇஅதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார். இப்போது அந்த தரப்பில் இருந்து யாரும் வாயைத் திறக்க காணோம். அந்த அழைப்பாணையை நீதிமன்றம் தடை செய்திருக்கிறது.

ஆர்எஸ்எஸ் நடத்தும் வார இதழான "ஆர்கனைசர்", இது பற்றிக் கட்டுரை வெளியிட்டுள்ளது. 'இந்த நிகழ்வு ஒரு திருப்பங்கள் நிறைந்த திகில் கதை போல இருப்பதாகவும், திமுக அமைச்சர்கள் மீது துடிப்பாக அமலாக்கத்துறை மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை மட்டுப்படுத்த திமுக அரசு நடத்தும் திட்டமிட்ட செயல்' என்றும் அது வர்ணிக்கிறது.

"இந்த 'நாடகத்தின்' அடுத்த காட்சி மதுரை மண்டல அலுவலகத்திலேயே தேடுதல் வேட்டை நடத்தும் அளவுக்கு போயிருக்கிறது. சர்ச் வாரண்ட் கூட தரவில்லை" என அது அங்கலாய்க்கிறது.

ஜெய் கிருஷ்ணன் என்ற 'அரசியல் நோக்கரி'ன் கருத்தை அது பிரசுரித்து இருக்கிறது. அந்தப் 'பிரபல நோக்கர்' எங்கு இருக்கிறார் என்று தமிழ்நாட்டில் யாருக்கும் தெரியாது!

"இது அமலாக்க துறையின் புகழை மங்கச் செய்வதற்காக திமுக எடுத்துள்ள எதிர் நடவடிக்கை உத்தியாகும். செந்தில் பாலாஜி, எ.வ.வேலு, பொன்முடி, ஜெகத்ரட்சகன் போன்றவர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை திமுகவை எரிச்சல் படுத்தி இருக்கிறது

நீண்ட மற்றும் கடுமையான போருக்கு இரு தரப்பும் தயாராகி வருவதால், இது மோதலை தீவிரப்படுத்த வழிவகுக்கும்" என்று அவர் சொன்னாராம்.

அந்த 'நோக்கர்' சொன்னாரோ இல்லையோ, இதுதான் ஆர்எஸ்எஸ் கருத்து என்று எடுத்துக் கொள்ளலாம்.

வம்புசண்டைக்குத்தான் போகக்கூடாது. வந்த சண்டையை விட்டு விடத் தேவை யில்லை.

தொடர்புக்கு: 7397130367

### அமலாக்கத்துறையின் அத்துமீறல்

- மதுரை கிளை அலுவலகத்தில் பறிமுதல் செய்யப்பட்டது ஆவணங்கள் பட்டியலிடப்பட்டு, அதில் அமலாக்கத்துறையில் துணை இயக்குனர் பிரிஜேஷ் பெனிவால் கையொப்பம் பெறப்பட்டுள்ளது.
- லஞ்ச ஒழிப்புத்துறை காவலர்கள் சீருடையோ,பேட்ஜோ அணிவதில்லை என்பது நாடறிந்தது.
- சட்டவிரோதமாக சோதனை நடத்தியதாகவும்,சீருடை அணியாமல்,பேட்ஜ் இல்லாமல் வந்ததாகவும் அமலாக்கத்துறை புகார் செய்துள்ளது வியப்பளிக்கிறது.
- சோதனை நடந்துகொண்டிருந்த போது, ,அமலாக்கத்துறையின் வழக்கறிஞர்கள் என்று பொய் சொல்லி பிஜேபி வழக்கறிஞர் பிரிவு நிர்வாகிகள் அந்த அலுவலக வளாகத்தில் இருந்தனர்.
- பிஜேபி வழக்கறிஞர்களை வெளியேறுமாறு சொன்னதற்கு, கூடாது என்று அமலாக்கத்துறை அதிகாரிகள் வரிந்து கட்டிக்கொண்டு சண்டைக்கு வந்தனர்
- சோதனை தொடங்குவதற்கு முன்பே, பிஜேபி வழக்கறிஞர் பிரிவு நிர்வாகிகளான அய்யப்பராஜ் மற்றும் கணேசன் மதுரை அமலாக்கத்துறை அலுவலகத்திற்குள் வந்து விடிய விடிய இருந்திருக்கிறார்கள்.
- அதுபற்றிபிஜேபிக்கு அழைத்தபுகாரில் அமலாக்கத்துறைஏதும்குறிப்பிடவில்லை.
- சட்டத்திற்கு புறம்பாக ஆயுதப்படை போலீஸாரை மட்டுமின்றி, பிஜேபியினரையும் அழைத்து அமலாக்கத்துறை அப்பட்டமாக அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டுள்ளது.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 86 இதழ் 36

## தேர்தல் ஆணையத்துக்கு நேரவிருக்கும் கதி!

பரபரப்பாக நடந்து முடிந்த ஐந்து மாநில தேர்தலுக்குப் பின் நாடாளுமன்றத்தில் குளிர்காலத் தொடர் கூட்டம் டிசம்பர் நான்காம் தேதி தொடங்கியுள்ளது.

இந்தி இதய பகுதியில், இரண்டு மாநிலங்களில் இருந்த காங்கிரஸ் ஆட்சியை அகற்றியதோடு, மத்திய பிரதேசத்தில் தனது ஆட்சியை பாஜக தக்கவைத்துக் கொண்டு உள்ளது.

தேர்தல் முடிவுகளுக்கு பின்பு பிரதமர் மோடி ஆணவத்தின் உச்சியில் நின்று பேசியிருக்கிறார். எதிர்க்கட்சிகள் தமது எதிர்மறையான அணுகுமுறையை கைவிட்டு நேர்மறையாக அரசாங்கத்துடன் ஒத்துழைப்பு தர வேண்டும்; அவர்கள் தருவதில்லை என்று அந்த பேச்சு செல்கிறது.

ஆளுங்கட்சிக்கு மாற்றாக மக்கள் வாக்களித்து தேர்ந்தெடுத்த கட்சிகள் எதிர்த்தே பேசக்கூடாது; ஆளுங்கட்சிக்கு ஆமாம் போட வேண்டும் என்பதே அவரது எதிர்பார்ப்பு. அந்தக் கட்சிகளோடு கலந்தாலோசித்து ஒரு பொதுக் கருத்தை உருவாக்குவது ஜனநாயகத்தின் அடித்தளம் என்பதை பாஜக ஏற்க தயாராக இல்லை.

ஜனநாயகத்தின் அடிகட்டுமானமாக, ஒன்றிய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும் சுதந்திரமான தேர்தல் நடத்துவது இந்திய தேர்தல் ஆணையத்தின் கடமையாகும்.

ஒன்றிய அமைச்சரவையின் பரிந்துரைப்படி, பிரதமர் முன்வைக்கும் அதிகாரிகளை தேர்தல் ஆணையராக இந்திய குடியரசு தலைவர் நியமிப்பது வழக்கமாக இருந்தது.

இந்த முறை சரியல்ல என்று பாஜக ஏற்கனவே தெரிவித்திருந்தது. அன்றைய பிரதமர் மன்மோகன் சிங்குக்கு, 2.6.2012ம் தேதி பாஜகவின் அன்றைய தலைவர் எல்.கே.அத்வானி ஒரு கடிதம் எழுதினார். அதில் “இது மக்களிடையே நம்பிக்கையை உருவாக்காது” எனக் கூறி மாற்று முறை வேண்டும் என வலியுறுத்தி இருந்தார்.

2014 இல் பாஜக ஆட்சிக்கு வந்த பின்பும், இந்த முறையை மாற்றாமல் அப்படியே கடைப்பிடித்து வந்தார்கள்.

தலைமைத் தேர்தல் ஆணையரும் இதர இரு தேர்தல் ஆணையர்களும் ஒளிவு மறைவு இன்றி தேர்வு செய்யப்பட வேண்டும். அவர்கள் அரசியல் சார்பற்றவர்களாக, சுதந்திரமானவர்களாக இருக்க வேண்டும். இது பற்றிய ஒரு சட்டத்தை நாடாளுமன்றம் நிறைவேற்றும் வரையில், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஆகிய மூவரை கொண்ட குழு தேர்தல் ஆணையர்களை தேர்வு செய்யும் என்று உச்ச நீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகளை கொண்ட அமர்வு 2.3.2023ம் தேதியன்று உத்தரவிட்டிருந்தது.

நாடாளுமன்றத்தின் இந்தக் கூட்டத் தொடரில், “தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் இதர தேர்தல் ஆணையர்கள் (நியமனம், பணி நிபந்தனைகள், பணிபுரியும் காலம்) சட்டம், 2023” என்ற மசோதா விவாதிக்கப்பட இருக்கிறது. பெயரளவுக்கு எதிர்க்கட்சிகளை பேசவிட்டு, ஆளுங்கட்சி தனது எண்ணிக்கை பலத்தால் சட்டங்களை நிறைவேற்றி வந்திருக்கிறது.

உச்ச நீதிமன்ற தீர்ப்பின் நோக்கங்களுக்கு ஏற்ப, ஒளிவு மறைவின்றி ஆணையர்களை தேர்வு செய்வதற்கான முறைமையை ஏற்படுத்துவது அரசின் முக்கிய கடமையாகும். ஆனால் அந்த நோக்கத்துக்கு எதிராக, தனக்கு அடி பணிந்து நடக்கும் வகையில் தேர்தல் ஆணையத்தை வைத்துக் கொள்வதற்காக, உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி அமுலில் இருக்கும் முறையை மாற்றி, இந்த மசோதா வரையப்பட்டுள்ளது.

இதன் 7 வது பிரிவின்படி, பிரதமர் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் பிரதமரால் நியமிக்கப்படும் கேபினட் அமைச்சர் ஒருவர் ஆகியோரை கொண்டதாக தேர்வுக் குழு இருக்கும். உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி இனி தேர்வுக்குழுவில் இருக்க மாட்டார். மூவரில் இருவர் ஆளுங்கட்சியை சேர்ந்தவர்கள் என்பதால், எதிர்க்கட்சித் தலைவரின் கருத்து நிராகரிக்கப் பட்டுவிடும்.

மசோதாவின் தற்போதைய வடிவம், ஜனநாயகத்தை வேரறுப்பதாகவும், ஒரு கட்சி ஆட்சியை ஏற்படுத்துவதற்கு உதவி செய்வதாகவும் அமைந்துள்ளது.

வரவிருக்கும் பொது தேர்தலுக்கு ஓரிரு மாதங்கள் முன்னதாக, தேர்தல் ஆணையரான அனுப் சந்திர பாண்டே 2024 பிப்ரவரி மாதத்தில் ஓய்வு பெறுகிறார். இந்த மசோதா நிறைவேற்றப்பட்டால், தனக்கான ஒருவரை பாஜக அந்த இடத்தில் நியமனம் செய்யும்.

ஒன்றிய, மாநில அரசுகளை தேர்வு செய்வதற்கான தேர்தல் ஆணையத்தை உருவாக்கும் முறை குறித்த இந்த முக்கியமான மசோதாவைப் பற்றி, இதர தேசிய அல்லது மாநிலக் கட்சிகள், மாநில அரசுகளிடம் மோடி அரசு கலந்தாலோசிக்கவில்லை. விரிவான பொது விவாதத்திற்கு உட்படுத்தவும் இல்லை.

இந்தியாவின் கூட்டாட்சி முறைமைக்கு பாஜக எள்ளளவும் மதிப்பளிக்கவில்லை. ஜனநாயக விழுமியங்களுக்கும் அரசியலமைப்பு சட்டத்தின் உயிர் நாடிக்கும் எதிரானதாக இது புனையப்பட்டுள்ளது.

இதனை எதிர்த்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உயிர்ச்சத்துடன் வாதத்தை வைப்பார்கள் என நம்பலாம். ‘இந்தியா’ கூட்டணி, உருவ அளவில் அல்லாமல், உணர்வு பூர்வமாக உருவாக வேண்டிய கட்டாயத்தை இந்த மசோதாவும் வலியுறுத்துகிறது!

# வங்கிச் சேவை மக்களுக்காக
# பர்வானா நூற்றாண்டு

இந்த ஆண்டின் நவம்பர் 3ம் நாள், வங்கிப் பிரிவின் பெரும் தொழிற்சங்கத் தலைவர் தோழர் ஹெச். எல். பர்வானா அவர்களின் நூற்றாண்டினை அடையாளப்படுத்துகிறது. அவர் நினைவையும் வங்கித் துறை வரலாற்றிற்கு அவரது பங்களிப்புகளையும் நாம் நினைவு கூர்வோம்.

வங்கிச்சேவைநலன்களுக்காகத்தனதுவாழ்வை அர்ப்பணித்தார்; சுரண்டல், உரிமை மறுப்புகள், வாழ்க்கை தேவைகளில் குறைபாடு மற்றும் அவமதிப்புகளில் உழன்ற வங்கி ஊழியர்களை அவற்றிலிருந்து விடுதலை பெறச் செய்ய அவர் பாடுபட்டார். அவரது கண்ணோட்டம் மற்றும் அசாதாரணமான தலைமைப் பண்புகள் வங்கி ஊழியர்களை என்றென்றும் ஊக்கப்படுத்தும்! அவர் விட்டுச் சென்ற மரபை அந்த ஊழியர்களில் ஆயிரக் கணக்கானோர் நிறைவேற்றுவது திண்ணம்!

### நூற்றாண்டு விழா

ஹெச். எல். பர்வானா நூற்றாண்டைக் கொண்டாட நாக்பூரில் உள்ள பர்வானா பவனில் கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் டி ராஜா விழாவைத் தொடங்கி வைத்தார்.

பர்வானா பஞ்சாப் ஏழை நடுத்தரக் குடும்பம் ஒன்றில் பிறந்தார். விடுதலைப் போராட்டம், மறைந்த லாலா லஜபதி ராய் போன்ற அதன் தலைவர்கள், பகத் சிங்கால் பெரிதும் ஈர்க்கப்பட்டார். ஜாலியன் வாலாபாக் படுகொலை அவரிடம் மிக ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. மேலும் படிக்க வேண்டும் என்ற பெரு விருப்பம் இருந்தாலும், அவர் கல்வியை விடுத்து வேலைக்குச் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. தொழிற்சங்கத் தலைவரான அவரது சகோதரரால் ஊக்கப்படுத்தப்பட்ட அவர் வங்கியில் ஒரு சங்கத்தை அமைத்தார். அவரது வாழ்வில் அந்தத் தொடக்கம், அவர் இறுதி மூச்சுவரை முடிவில்லாது நீடித்தது.



வங்கித் தொழிலில் தொழிலாளர் வர்க்கத்தைத் திரட்டிய போது நாட்டின் வளர்ச்சிக்கான சக்தி, மக்கள் சார்புடைய வங்கிப் பிரிவின் வலிமை மற்றும் விரிவாக்கத்தைப் பெரிதும் சார்ந்து இருக்கும் என அவர் தொடக்கத்திலேயே புரிந்து கொண்டார். அத்தகு முறைமையை ஏற்படுத்த வங்கிகள் தேசியமயத்தை நோக்கிய நடவடிக்கைகள் கட்டாயம். மேலும், நிதிசார்ந்து அனைவரையும் (வளர்ச்சியில்) உள்ளிணைப்பதை உறுதி செய்ய, வங்கி தேசியமய நிகழ்முறையின் முக்கிய முன்னெடுப்பு முயற்சிகளில் ஒன்றாக, மேலும் மக்களை அதில் ஈடுபடுத்த வேண்டிய தேவையை அவர் கண்டார்.

தொடர்ச்சியான முயற்சிகளுக்குப் பிறகு, 1969 ஜூலை 19ல் 14 வங்கிகள் அரசால் தேசியமயமாக்கப்பட்டன. அந்த வங்கிகள் நாட்டின் மிகப் பெரிய தனியார் வணிக வங்கிகள் ஆகும். தேசியமயமாக்கல் நிகழ்முறை, ‘வங்கித் தொழில் நிறுவனங்கள் 1969 அவசரச் சட்டத்’தின் மூலம் நிறைவு பெற்றது. 50 சதவீதத்திற்கும் அதிகமான பங்கு உரிமையை வைத்திருக்க முடிவு செய்யப்பட்டது. விரைவில் இரண்டாவது கட்ட நடவடிக்கையாக 1980 ஏப்ரல் 15ல் அப்போதைய அரசு 200கோடி மூலதனத்துடன் கூடிய மேலும் 6 தனியார் வங்கிகளைத் தேசியமயமாக்கியது.

வங்கிகள் தேசியமயத்திற்கு வெறும் 30 ஆண்டுகளுக்கு முன், இரண்டாம் உலக யுத்தத்தின்போது ஏறத்தாழ பல நாடுகளில் நிதிப் பிரிவு நிறுவனங்கள் முழுமையும் நட்டத்தில் மூழ்கின. அதன் விளைவாய் முதலாளித்துவ நாடுகள்தான் தங்கள் நாடுகளில் தேசியமய நிகழ்முறையைத் தொடங்கின. இதில் இந்தியாவும் விதிவிலக்கல்ல. ஆனால் இங்கு பொருளாதார ஏகபோகத்தையும் கட்டுப்படுத்துவதற்காகவும்கூட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

வங்கிகள் கிராமப்புறப் பகுதிகளுக்குப் பரவ வேண்டிய தேவையும் மற்றொரு உண்மை. அப்போது பெருநகரங்களில் மட்டுமே வங்கிகள் இருந்தன. 1968வரை எல்லா வங்கிகளும் தனியாரிடம், தொழிலதிபர்களால் ஏகபோகமாக இருந்தன; தனியார் வங்கிகள் வழங்கிய கடன் வசதியில் தொழில்துறைக்கான பங்கு, 1951க்கும் 1968க்கும் மத்தியில், 34 சதவீதத்திலிருந்து 64 சதவீதமாக இரண்டு மடங்கானது: அதே நேரம், மொத்தக் கடனில் 2 சதவீதத்திற்கும் குறைவாகவே விவசாயப் பிரிவு கடன் வசதியைப் பெற்றது. வங்கித் துறை மீதான மக்களின் நம்பிக்கை மிகவும் கீழ் மட்டத்தில் இருந்தது அது இந்தியாவில் வங்கிகள் விரிவாக்கத்திற்கு முக்கிய தடைக் கல்லாக இருந்தது.

கிராமப்புறப் பகுதிகளின் விதியை வங்கிகள் தேசியமயம் மாற்றியது. நகரங்களிலிருந்து வங்கி கிளைகள் சிறு நகர்களிலும், கிராமங்களிலும் திறக்கப்படலாயின. தேசியமயம் அதனளவில் முழுமையான வங்கிப் பிரிவையும் முன்னுரிமை அடிப்படையில் மாற்றியது.

இந்தியப் பொதுத்துறை வங்கிக் கிளைகளில் சுமார் 800 சதவீதம் சேமிப்புகள் அதிகரித்தன; வங்கிகள் வழங்கிய முன்பணம் (கடன் தொகைகள்) பிரம்மாண்டமாய் 11ஆயிரம் சதவீதம் தாவிப் பாய்ச்சலில் அதிகரித்தன. வங்கிகள் அளித்த மொத்தக் கடன் வசதியில் சிறுதொழில் நிறுவனப் பிரிவுகள் பெற்ற பங்கு, ஜூன் 1968ன் 6 சதவீதத்திலிருந்து 1973 ஜூனில் 12 சதவீதமாக அதிகரித்தது. ஒட்டுமொத்த நிகரக் கடன் மற்றும் சேமிப்பில் கிராமப்புறப் பகுதிகளின் பங்கு, சீரான முறையில் அதிகரித்து வந்ததைப் பதிவிட்டுள்ளன.

ஹெச். எல். பர்வானா போன்ற வங்கித் தொழிற்சங்கத் தலைவர்களின் படைவரிசை, நரேஷ்பால், பிரபாத்கர், சுதின் பிஸ்வாஸ், தாரகேஷ்வர் சக்ரவர்த்தி மற்றும் பலருடன் எழுந்து நின்று தேசியமயமாக்கல் நிகழ்முறையைப் பாதுகாத்தனர்.

இன்று காட்சி மாறியுள்ளது. 2023 மார்ச் மாதம் முடிய பொதுத் துறை வங்கிகளின் மொத்த நிகர செயல்பாட்டு லாபம் 2,28,414 கோடியாக இருந்தது. வாராக் கடன் கணக்குகளுக்காக ஒதுக்கீடு செய்தது போக நிகர லாபம் 1,00,814 கோடிகளாகும். இவ்வாறு வங்கிகளின் லாபத்தில் பெரும் பகுதி அதாவது 56 சதவீதம் வங்கி வாராக் கடன் அல்லது கடன் ரத்து தள்ளுபடிக்காக விரையமாகச் செல்கிறது. இவ்வாறு வங்கிகளில் உள்ள மக்களின் பணம் பெருநிறுவனக் குழுமங்கள் திரும்பக் கட்டாத கடன் தொகை மூலம் அவர்களால் கொள்ளையடிக்கப்படுகிறது.

எவ்வாறு வங்கி ஊழியர்களைத் திரட்டி தேசியமயத்திற்காகத் தோழர் பர்வானா போராடினாரோ, அவ்வாறு நாம் இப்போது, அவர் உயர்த்திய ஏஐபிஇஏ பதாகையை உயர்த்தி பொதுத்துறை வங்கிகளைப் பாதுகாக்க தோழர் பர்வானா நூற்றாண்டில் சபதமேற்போம்! போராட்டக் களம் அழைக்கிறது, தயாராவீர்!

வாழ்க தோழர் பர்வானா புகழ்!

**தமிழில் நீலகண்டன்,**



# ஐந்து மாநில தேர்தல்: பெற்றதும் கற்றதும்!



த.லெனின்

**சமீபத்தில் நடந்து முடிந்த 5 மாநில தேர்தல்களில் நான்கிற்கு டிசம்பர் 3 ஆம் தேதி முடிவுகள் அறிவிக்கப்பட்டது. தெலுங்கானாவில் வெற்றி பெற்ற காங்கிரஸ் ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் மற்றும் சத்தீஸ்கர் ஆகிய மூன்றில் தோல்வியைச் சந்தித்தது.**

இக்கட்சி ராஜஸ்தான் மற்றும் சத்தீஸ்கர் ஆகிய இரண்டு மாநிலங்களில் பதவியில் இருந்தது, மற்ற இரண்டில் பிரதான போட்டியாளராக இருந்தது.

ஒப்பிடுகையில், பாஜக இரண்டு மாநிலங்களை காங்கிரஸிடமிருந்து பறித்து, மத்தியப் பிரதேசத்தைத் தக்க வைத்துக் கொண்டது, அங்கு அது தனது இடங்களை அதிக வித்தியாசத்தில் அதிகரித்தும் கொண்டது

2022 டிசம்பரில் ஹிமாச்சலப் பிரதேசம் மற்றும் 2023 மே மாதம் கர்நாடகா ஆகிய இரண்டு மாநிலத் தேர்தல்களில் பிஜேபியை தோற்கடித்த பிறகு, இந்தி பேசும் மாநிலங்களில் காங்கிரஸ் மிகவும் மோசமாக செயல்பட காரணம் என்ன?

### தேர்தல் யுக்தியில் தவறிய காங்கிரஸ்

கர்நாடகாவில் முழுமையாக வெற்றி பெற்றதால் தென் மாநில வெற்றி, பாஜகவை தோற்கடிப்பதற்கான திறனை பெற்றுவிட்டதாக நம்பி, அக்கட்சியை திருப்தி அடையச் செய்தது. தனக்கு சவாலாக இருந்த கர்நாடகாவில், சித்தராமையாவுக்கும் டி.கே.சிவகுமாருக்கும் இடையேயான உட்பகையை புறந்தள்ளிவிட்டு, சிறப்பான பிரச்சாரத்தை காங்கிரஸ் நடத்தியது. மறுபுறம், பாஜக பிளவுவாத இந்துத்துவ அரசியலோடு எதிர்கொண்டது.

அதன் பிரச்சாரம் பெரும்பாலும் பல முனைகளில் நடந்தது. கர்நாடகா தேர்தல் வி பாஜகவை எழுப்பியது என்பதே உண்மை. அதன் தேர்தல் யுக்தி ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் மற்றும் சத்தீஸ்கரில் தடையற்ற இந்துத்துவ பிரச்சாரத்தை நடத்தியது.

இதற்கு நேர்மாறாக, ராஜஸ்தான் மற்றும் சத்தீஸ்கரில் காங்கிரஸ் உட்பூசல்களை எதிர்கொண்டது, அதே நேரத்தில் மத்தியப் பிரதேசத்தில் பிஜேபி அரசாங்கத்திற்கு எதிரான ஆட்சிக்கு எதிரான எதிர்ப்பைப் தனக்கு சாதகமாக்க அதனால் முடியவில்லை.

மூன்று மாநிலங்களிலும், இரண்டு தற்போதைய முதல்வர்கள் (ராஜஸ்தானில் அசோக் கெலாட், சத்தீஸ்கரில் பூபேஷ் பாகேல்) பசு பாதுகாப்பு அரசியல் மற்றும் ராமாயண நிகழ்ச்சிகளை நடத்தினர் கட்சியின் முக்கிய தலைவர்களான கமல்நாத் மற்றும் மத்தியப் பிரதேசத்தில் திக்விஜய சிங் ஆகியோர் கட்சி வகுத்த திட்டத்தைப் பின்பற்றாமல் தங்கள் சொந்த பிரச்சாரங்களை நடத்தினர். அத்தோடு பாஜக வழியில் சென்று மென்மையான இந்துத்துவ அரசியலை முன்வைத்தது. அதுவும் கமல்நாத் ஒருபடி மேலே சென்று இந்தியா இந்து நாடு என்றார். சனாதானம் குறித்து பாஜக நிலைபாட்டை பிரதிபலித்தார். எல்லாவற்றிற்கும் மேலாக இந்தியா கூட்டணி கட்சிகளோடு கூட்டணி அமைத்து தேர்தலை எதிர் கொள்ளாதது பெருத்த அடியை கொடுத்து விட்டது.

ராஜஸ்தானில் 16% வாக்குகளை இந்திய கூட்டணியின் இதர கட்சிகளான இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, ஆம் ஆத்மி, சமாஜ்வாடி கட்சி, ஆசாத் சமாஜ்வாடி, பழங்குடியின கட்சிகளும் பெற்றன. அத்தோடு பகுஜன் சமாஜ்கட்சி மேலும் 2% வாக்குகளை பிரித்ததாலும் பாஜக எளிதில் வென்றது என்பதே உண்மை.

அதேபோல, மத்திய பிரதேசத்தில் காங்கிரஸை விட 7% வாக்குகளை கூடுதலாக பெற்ற பாஜக 163 இடங்களில் வென்றது. காங்கிரஸ் 66 இடங்களில் நின்றது. பாரத் ஆதிவாசி கட்சி 1 இடத்தில் வெற்றி பெற்றது. இங்கு சமாஜ்வாடி, ஆம் ஆத்மி, சிபிஐ, சிபிஎம், ஆசாத் சமாஜ் கட்சி வாக்குகளை பிரித்தன. பழங்குடி தொகுதிகளில் ஆதிவாசி கட்சி வாக்குகளை பிரித்ததால், பாஜக 12 இடங்களில் வெற்றி பெற்றது.

சத்தீஸ்கரில் பாஜக 46% வாக்குகளை பெற்று 55 இடங்களில் வென்றுள்ளது. காங்கிரஸ் 42% வாக்குகளை பெற்று 35 இடங்களும் வென்றன. இங்கு கூட்டணி அமைக்கப்படாத காரணத்தால் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒரு தொகுதியில் 2 வது இடத்தையும், பல தொகுதிகளில் கணிசமான வாக்குகளையும் பெற்றதுடன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, ஆசாத் சமாஜ் மற்றும் பழங்குடி கட்சிகள் தனித்து களம் கண்டதால் காங்கிரஸ் இப்பெரும்தோல்வியை அடைந்தது.

பிறகு மூன்று மாநில வெற்றிக்கு பிறகு, நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி மூன்றாவது முறையாக வெற்றி பெறுவதை யாராலும் தடுக்க முடியாது என்ற பிரச்சாரத்தை கார்ப்பரேட் ஊடகங்களும் பாஜகவினரும் மேற்கொண்டு வருகின்றனர்.

பாஜக எதிர்ப்பாளர்கள் மனமுடைந்து போகின்றனர். ஆனால் இது உண்மையா? என்றால் இல்லை என்று நாம் சொல்ல முடியும். உளவியல் ரீதியாக எதிரணியினர் பலகீனமானவர்கள் என்பதை மையப்படுத்தி அவர்களது மன உறுதியை குலைத்து தாங்கள் சுலபமாக வெற்றி பெறலாம். அதாவது சண்டை துவங்கும் முன்பே எதிர் அணியினரின் மன வலிமையை சிதைப்பது என்ற யுக்தியை தான் பாஜகவும் சங்கப் பரிவார அமைப்புகளும் இன்று பிரச்சாரமாக முன்னெடுக்கின்றனர்.

நான்கு மாநிலங்களில் அனைத்துக் கட்சிகளும் பெற்ற மொத்த வாக்குகளையும் சேர்த்தால், வெற்றிச் சங்கு ஊதிக் கொண்டிருக்கும் பாஜகவுக்கு மொத்தம் 4,81,33,463 வாக்குகளும், காங்கிரஸுக்கு கிடைத்த 4,90,77907 வாக்குகளும் பெற்று



### உலகமய கொள்கைகளை அம்பலப்படுத்த தவறிய காங்கிரஸ்:

பாஜக ஆட்சியால் ஒன்றியத்தில் அமல் படுத்தப்பட்ட மக்கள் விரோத, உலகமய நடவடிக்கைகளை காங்கிரஸ் அம்பலப்படுத்த தவறியது. உதாரணத்திற்கு தேர்தல் நடந்து முடிந்த பெங்களூர் மற்றும் ஹைதராபாத் பெருநகர முடிவுகளை எடுத்துக் கொண்டாலே உண்மை விளங்கும். இந்த இரண்டு பெரு நகரங்களிலும் காங்கிரஸ் மிகக் குறைந்த இடங்களை பெற்றது. அதுவும் உலக அளவில் பல பன்னாட்டு நிறுவனங்கள் அமைந்துள்ள பெங்களூரில் பாரதிய ஜனதா வெற்றி பெற்றதும் ஹைதராபாத்தில் பி ஆர் எஸ், ஒவைசி மற்றும் பாஜக வெற்றி பெற்றிருப்பதும் காங்கிரஸ் குறைந்த இடத்தையே பெற்றது.

மக்கள் பெரும் சுமையோடு சந்தித்து வரும் விலை உயர்வு குறிப்பாக சமையல் எரிவாயு பெட்ரோல் டீசல் மற்றும் உணவு மருத்துவ விலை உயர்வுகளை முறையாக மக்களிடம் எடுத்துச் சொல்வதில்காங்கிரஸ் சுணக்கும் காட்டிவிட்டது.

சமீபத்திய சட்டமன்றத் தேர்தல்களைப் பற்றி பிரதமர் "ஹாட்ரிக்"வெற்றி என்று கூறியபோது , அதனையே அனைத்து ஊடகங்களும் வழிமொழிந்தன .அதன்

தோல்வியை தழுவியது.

அதாவது, இந்த 4 மாநிலங்களில் ஒட்டுமொத்தமாக பாஜகவை விட காங்கிரஸ் 9.5 லட்சம் வாக்குகள் அதிகம் பெற்றுள்ளது. இன்றைய அனைத்து விவாதங்களும் காங்கிரஸை பாஜக முற்றிலும் அழித்துவிட்டதாக பரப்பப்படுகிறது.இந்தி பேசும் மூன்று மாநிலங்களில் பாஜக வெற்றி பெற்ற இடங்களின் எண்ணிக்கையைப் பார்த்தால்,

உண்மையில் வாக்கு சதவீதத்தில் பெரிய வித்தியாசம் இல்லை.

ராஜஸ்தானில் பாஜக 41.7% வாக்குகளும், காங்கிரஸ் 39.6% வாக்குகளும் பெற்றுள்ளன. வித்தியாசம், 2% மட்டுமே. சத்தீஸ்கரில் 4% வித்தியாசம் பாஜகவுக்கு 46.3% வாக்குகளும் காங்கிரஸுக்கு 42.2% வாக்குகளும் உள்ளன. மத்தியப் பிரதேசத்தில் மட்டும் வித்தியாசம் 8%க்கும் அதிகமாக உள்ளது. பிஜேபி 48.6% வாக்குகளும், காங்கிரஸுக்கு 40% வாக்குகளும் கிடைத்தன.

மூன்று மாநிலங்களிலும் தோல்வியடைந்தாலும், காங்கிரஸ் 40% அல்லது அதற்கு மேற்பட்ட வாக்குகளைப்

> **சத்தீஸ்கரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நின்ற 12 தொகுதிகளின் வாக்கு விவரம்:**
> 1. கோண்டா – 29,040
> 2. தண்டேவாடா – 9217
> 3. சித்ரகோட் – 5051
> 4. நாராயண்பூர் – 5606
> 5. சாம்ரீ – 3156
> 6. மஸ்தூரி – 2235
>
> உட்பட மொத்தம் 60,901 வாக்குகளை பெற்றுள்ளது.

பெற்றுள்ளது, அங்கிருந்து மீண்டு வருவது மிகவும் கடினமான ஒன்றல்ல

இந்தி பேசும் மூன்று மாநிலங்களிலும் பாஜக பெற்றுள்ள ஒட்டுமொத்த முன்னிலையை ஒரே ஒரு தெலுங்கானா மட்டுமே ஈடுகட்டுகிறது. தெலுங்கானாவில் காங்கிரஸ் கட்சிக்கு 39.4% (92 லட்சத்துக்கும் அதிகமான) வாக்குகளும், பாஜக 13.9% (32 லட்சத்துக்கும் குறைவான) வாக்குகளும் பெற்றன.

வடகிழக்கு மாநிலமான மிசோரத்தை எடுத்துக் கொண்டால் கூட 20% வாக்குகளை வாங்கிய காங்கிரஸ் ஓரிடத்தில் மட்டும் வெற்றி பெற்றுள்ளது ஆனால் 5% வாக்குகளை பெற்ற பாஜக இரண்டு இடத்தில் வெற்றி பெற்றிருக்கிறது. இந்த மோசமான தேர்தல் நடைமுறையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

### பாஜகவின் தொடர் வெற்றி கட்டுக் கதைகள்

கடந்த 2018ல் இந்த மூன்று மாநிலங்களிலும் பாஜக தோல்வியடைந்தது. ஆனால், 2019 லோக்சபா தேர்தலில் பா.ஜ.க.வின் தோல்வி உறுதி என்று அப்போது பிரதமரோ, ஊடகங்களோ கூறவில்லை. நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றபோது, இந்த மூன்று மாநிலங்களிலும், இந்தி பேசும் மற்ற பகுதிகளிலும் பாஜக அமோக வெற்றி பெற்றது.

அதேபோல், 2003ல் இந்த மூன்று மாநிலங்களிலும் காங்கிரஸ் தோல்வியடைந்த நிலையில், சில மாதங்களுக்குப் பிறகு 2004ல் நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் பெரும் வெற்றியைப் பெற்றது. இதன் பொருள், சட்டசபை மற்றும் மக்களவை தேர்தல்களின்

தொடர்ச்சி 7ஆம் பக்கம்

## வினாடி - வினா

1 ஒரு மேகத்தின் சராசரி எடை எவ்வளவு?

2 விழும் மழைத்துளியின் சராசரி வேகம் என்ன?

3 இடி எதனால் ஏற்படுகிறது?

4 அமில மழை என்றால் என்ன?

5 உலகின் மிகப்பெரிய மழைக்காடு எது?

6 மழைப்பொழிவை அதிகரிக்க மேக விதைப்புத் திட்டத்தை உருவாக்கிய முதல் நாடு எது?

விடைகள் 12 ஆம் பக்கம்



# இந்திய வியட்நாம் மக்கள் நட்புறவு 11 வது விழா

**சென்னையில் இந்திய வியட்நாம் மக்கள் கலை நிகழ்ச்சி 02.12.2023 அன்று மாலை நடைபெற்றது.**

இந்திய வியட்நாம் மக்கள் நட்புறவு 11 வது விழா மற்றும் இருநாட்டு கலைஞர்கள் பங்கேற்கும் கலை நிகழ்ச்சி சென்னை, தி நகர், சர் பிட்டி தியாகராயர் கலையரங்கில் நடைபெற்றது.

இவ்விழாவிற்கு உலக சமாதானக் கவுன்சிலின் தலைவர் பல்லப்சென் குப்தா தலைமை தாங்கினார்.

“எப்சோ”வின் அகில இந்திய பொதுச் செயலாளர்கள் ஆர்.அருண்குமார் மற்றும் ஹர் சந்த் சிங் முன்னிலை வகித்தனர்.

“ எப்சோ” வின் மாநில பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் வரவேற்புரையாற்றினார்.

தமிழ்நாடு அரசின் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் ,மாண்புமிகு மா.சுப்பிரமணியன் விழா துவக்க உரையாற்றினார்.

வியட்நாம் இந்திய நட்புறவுச் சங்கத்தின் துணைத் தலைவரும், வியட்நாம் சோஷலிச குடியரசின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹ மின் ஹியு சிறப்புரையாற்றினார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், சி.ஐ.டி.யு மாநிலத் தலைவர் அ.சௌந்திரராஜன்,தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் மாநில துணைத் தலைவர் ஆ.கோபண்ணா, சட்ட மன்ற உறுப்பினர்கள் மயிலை த.வேலு,ஜெ.கருணாநிதி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், மாண்புமிகு பி.கே.சேகர்பாபு நிறைவு உரையாற்றினார்.

எப்சோ தமிழ்நாடு மாநில பொதுச் செயலாளர் ஐ.ஆறுமுக நயினார் நன்றியுரையாற்றினார்.

திரைப்படக் கலைஞரும் எழுத்தாளருமான என்.கொற்றவை நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.



மாலை ஐந்து மணிக்கு கிங் இன்ஸ்டியூட் பூஞ்சேரி மாமல்லபுரத்தில் உலக சாமாதன கவுன்சில் தலைவர் பல்லவ்சென்குப்தா தலைமையில் நடைபெற்றது. ம.முருகன் வரவேற்புரை ஆற்றினார்.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் மாநில துணை செயலாளர் தோழர். மல்லை சிஏ.சத்யா, கிங்ஸ் இன்ஸ்டிடியூட் தாளாளர் டேவிட் கே.பிள்ளை, சமாதான ஒருமைப்பாட்டு கழகத்தின் மாநில செயலாளர் டாக்டர் ஜீ ஆர்..இரவிந்திரநாத் ஆகியோர் பேசினார்.

வியட்நாம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தோழர். ஹ மின் ஹியூ வியட்நாம் குடியரசு கட்சி நிரைவுரையாற்றினார். இந்த



இவ்விழாவில், இந்திய வியட்நாம் கலைக் குழுவினரின் கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

**செங்கல்பட்டு:** அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டு கழகம் கிமிறிஷிலி இந்திய – வியட்நாம் மக்கள் நட்புறவு 11வது விழா மற்றும் இந்திய வியட்நாம் குழுவினரின் கலை நிகழ்ச்சிகள் 5. 12 .23 செவ்வாய் நிகழ்வில் நெறி ஆளுகை செய்தார் டாக்டர் ஆர்.சாந்தி. விழாவில் இந்திய கம்யூனிஸ்டு மாவட்ட செயலாளர் ஏ.ராஜ்குமார், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் மாவட்ட செயலாளர் பாசு.பாரதி அண்ணா, மாநில குழு உறுப்பினர் சங்கர், உலக சமாதான ஒருமைப்பாட்டு கழகத்தின் மாவட்ட செயலாளர் அரி, தலைவர் செல்வமணி, கலை இலக்கிய பெருமன்றத்தின் மாவட்ட துணை தலைவர் தோழர் நா.வீரமணி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி மாவட்ட குழு உறுப்பினர் கேவி.சேகுவேராதாஸ் மாற்றுத்திறனாளி சங்க மாவட்ட செயலாளர் பி.அன்பரசு மாதர் சங்கத்தின் மாவட்ட தலைவர் என்.புஷ்பராணி மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி –மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி முன்னணி தோழர்கள் பங்கேற்றனர்.

## பாலன் இல்லத்தில் வரவேற்பு

வியட்நாம் கலைஞர்களுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலக் குழு அலுவலகமான பாலன் இல்லத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

வியட்நாம் இந்திய நட்புறவு சங்கம் சார்பில், வியட்நாம் சோசலிச குடியரசின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹமின் ஹியு தலைமையில் 25 கலைஞர்கள் சென்னை வந்துள்ளனர். அவர்களுக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு அலுவலகமான பாலன் இல்லத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கலைஞர்களை வரவேற்று உரையாற்றினார். வியட்நாம் கலைஞர்களுக்கு தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்ட், தோழர் சிங்காரவேலரின் சிலைகள் பரிசளிக்கப்பட்டன. வியட்நாம் கலைஞர்கள் சார்பாக ஹமின் ஹியு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களுக்குப் பரிசளித்தார்.

கட்சியின் மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு, மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், டாக்டர் ஜி.ஆர். ரவீந்திரநாத், ஏ.ஆர்.சாந்தி, கட்சியின் மாவட்டச் செயலாளர்கள் வெங்கடேஷ் வேம்புலி, எஸ்.கே.சிவா, பா.கருணாநிதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



# அமலாக்கத்துறையின் பணம் பறிக்கும் செயலுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

அண்மை சில மாதங்களாக அமலாக்கத்துறை தமிழ்நாட்டின் பல பகுதிகளில் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு செய்தி பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது.

இந்த நிலையில் 01.12.2023 திண்டுக்கல் பகுதியில் அமலாக்கத்துறை அதிகாரி, மருத்துவர் ஒருவரை மிரட்டி பணம் பறித்த குற்றச் செயலில் ஈடுபட்டு, தமிழ்நாடு அரசின் லஞ்ச ஒழிப்புத் துறை காவல்துறையால் கைது செய்யப்பட்டுள்ளார். தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது.

அரசியலமைப்பு சட்டப்படி தற்சார்பு அதிகாரம் கொண்ட அமலாக்கத்துறை, வருமான வரித்துறை, மத்திய புள்ளியியல் துறை, மத்திய புலனாய்வுத் துறை, கணக்கு மற்றும் தணிக்கை துறை, தேர்தல் ஆணையம், ஆளுநர் மாளிகைகள் உள்ளிட்ட அமைப்புகளை பாஜக ஒன்றிய அரசு அரசியல் ஆதாயம் தேடும் மலிவான செயலுக்கு பயன்படுத்தி வருவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

சென்ற மாதம் ராஜஸ்தானில், சொத்துக் குவிப்பு வழக்கில் சேர்த்து விடுவதாக ஒருவரை மிரட்டி ரூ.17 லட்சம் பணம் பறித்த அமலாக்கத்துறை அலுவலர் நாவல் கிஷோர் உட்பட இரண்டு நபர்களை ராஜஸ்தான் மாநில அரசின் ஊழல் தடுப்புப் பிரிவு காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

01.12.2023 திண்டுக்கல் அருகே, அமலாக்கத்துறை வழக்கில் விடுதலை பெற்றிருக்கும் மருத்துவர் ஒருவரை மிரட்டி ரூ.3 கோடி பணம் கேட்டதும், ரூ.51 லட்சம் பெற ஒப்புக் கொண்டு, அதன் இரண்டாவது தவணைத் தொகையை அமலாக்கத்துறை அதிகாரி அன்கித் திவாரி வாங்கி சென்ற போது தமிழ்நாடு அரசின் லஞ்ச ஊழல் ஒழிப்புத்துறை காவல்துறையால் கையும், களவுமாக பிடிபட்டுள்ளனர்.

நாடு முழுவதும் அரசியல் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி பணம் பறிப்பது, எதிர்கட்சிகளின் ஜனநாயக உரிமைகளை மறுப்பது, பொது வாழ்வில் உள்ளவர்கள் மீது வழக்குகள் போட்டு, அவர்களது செயல்பாடுகளை முடக்குவது என அதிகார அத்துமீறலில் ஈடுபட்டு வரும் பாஜக ஒன்றிய அரசின் ஜனநாயக விரோதச் செயல்களை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது. இவ்வாறு இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# அரைவேக்காடு அண்ணாமலைக்குத் தெரியுமா?



அ.பாஸ்கர்

**பாரதிய ஜனதா கட்சியின் மாநிலத் தலைவர் அண்ணாமலை சகல வசதி கொண்ட வாகனத்தில் நடத்தி வரும் பாதயாத்திரை எனும் கேலிக்கூத்து நாடகத்தில் ஊடகங்களின் தீனிக்காக பொய் மூட்டைகளை அவிழ்த்துவிட்டு உளறி வருகிறார்.**

எங்கெங்கு செல்கிறாரோ, அந்த பகுதியின் வரலாற்றைத் தெரிந்து கொள்ளாமல், தவறான செய்திகளை அள்ளி விட்டு வருகிறார்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு திருவாரூர் மாவட்டத்திற்கு அவரது 'வாகன வழி பாதயாத்திரை' வருகை தந்தது. அங்கு திருவாய் மலர்ந்த அண்ணாமலை, திருத்துறைப்பூண்டியில் ' கம்யூனிஸ்டுகளின் மக்கள் பணிகள் குறித்து தனது அறியாமையை வெளிப்படுத்தியுள்ளார். குறிப்பாக 'கம்யூனிஸ்டுகள் வளர்ச்சிக்கு எதிரானவர்கள்' என்று விஷம விதை தூவியுள்ளார்.

அண்ணாமலை அரசியலுக்கு வந்து மூன்று ஆண்டுகள் தான் ஆகின்றன. கட்சியில் நுழையும் முன்பே பேரம் பேசியபடி, மாநிலத் தலைவராக நியமனம் பெற்றவர். பாஜகவில் அரசியல் அனுபவம் இல்லாதவர்கள், நிரம்பி வழிகிறார்கள்.

கம்யூனிஸ்டுகளைப் பற்றி எதிர்மறை உணர்வுகளில் பழக்கப்பட்ட, பயிற்சி பெற்ற முன்னாள் காக்கிச் சட்டை அண்ணாமலை, கம்யூனிஸ்டுகள் பற்றி பேசுவதற்கு எந்த அடிப்படைத் தகுதியும் அற்றவர் என்பதை தமிழ்நாடு நன்கறியும்.

வளர்ச்சிக்கு எதிரான ஒரே கட்சி கம்யூனிஸ்ட் கட்சி தான். அவர்களால் எங்கும் வளர்ச்சியைக் கொண்டுவர முடியாது என கிளிப் பேச்சு பேசும் அண்ணாமலையாரே. வரலாற்று ஏடுகளை திருப்பிப் பாருங்கள். தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியிலும், பொருளாதார முன்னேற்றத்திலும் கம்யூனிஸ்டுகளின் பங்களிப்பை மறுக்க முடியாது.

ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில் நிலப்பிரபுக்களுக்கும், பண்ணையார்கள் மற்றும் ஜமீன்தார்களுக்கு உழைக்கும் மக்கள் பண்ணை அடிமைகளாக அடக்கி வைக்கப்பட்டனர். பண்ணையாட்களை சாட்டையால் அடிப்பதும், சாணிப்பால் கொடுப்பதும், மனிதர்களை மிருகமாக நடத்தி, அவர்களுக்கு விலங்கு போட்டு கொட்டடியில் அடைத்து வைப்பதும் உரிமை என்று கருதிய நிலப்பிரபுத்துவக் கொடுமைகளை அண்ணாமலை அறிவாரா?

மனிதர்களை, பேசும் விலங்குகளாக கருதி, நடத்திய நிலபிரபுக்கள் "அடித்தால் திருப்பி அடி" கற்றுக் கொடுத்தவர்கள் கம்யூனிஸ்டுகள்.



பச்சைக் கம்பளம் விரிக்கப்பட்டது போல எங்கு நோக்கினும் பசுமையாக காட்சியளிக்கும் தஞ்சைத் தரணியில் ஊர்கள் தோறும் செங்கொடி உயர்ந்த பிறகு, மதக் கலவரம், சாதி மோதல் இல்லாத நல்லிணக்க பூமியாக திருத்துறைப்பூண்டி விளங்கி வருவது அண்ணாமலைக்கு தெரியுமா?

சங் பரிவார் கும்பல் நிலப்பிரபுகளுக்கு ஆதரவாக ஆர்பரித்து நின்ற போது, நிலச்சீர்திருத்தம் கேட்டு போராடி, நில உச்சரவம்பு சட்டம் கொண்டு வந்தது கம்யூனிஸ்டுகள் என்பதை அண்ணாமலை அறிய வேண்டும் திருவாரூரில் அரசு கல்லூரி கல்லூரி, வேதாரண்யத்தில் அரசு கல்லூரி, மன்னார்குடியில் அரசு கல்லூரி, நன்னிலத்தில் அரசுக் கல்லூரி, திருத்துறைப்பூண்டியில் அரசு கல்லூரி, கொருக்கையில் பல்தொழில் நுட்பக் கல்லூரி, கோட்டூரில் தொழிற்பயிற்சி நிறுவனம் என கல்வி வளர்ச்சிக்கு உயிர்நாடியாக மந்த இயக்கம் அமைந்த செங்கொடி இயக்கம் என்பதை கேட்டு அறிந்து கொள்வது நல்லது.

திருவாரூரில் மருத்துவக் கல்லூரியும், மத்திய பல்கலைக்கழகமும் இருக்கின்றன. இவைகளும் செங்கொடி இயக்கத்தின் முயற்சியாலும் திமுக ஆட்சியில் கலைஞரால் கொண்டு வரப்பட்டது என்பதும் வரலாற்று சூனியத்துக்கு தெரியவில்லை.

வங்கக் கடலில் ஏற்படும் காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக மாறுவதும், அது கரையை கடப்பதும், வேதாரண்யம் பகுதியில் புயல் பேரிடர் காலங்களில் மக்களை பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டு மக்களின் முன்களப்பணியில் இருப்பவர்கள் எப்போதும் கம்யூனிஸ்ட்டுகள். கஜா புயல் நாகை, திருவாரூர், தஞ்சை, புதுக்கோட்டை மாவட்டங்களில் மக்களின் உயிரை மட்டும் விட்டு. விட்டு, வாழ்வாதாரம் முழுவதையும் அழித்தொழித்துச் சென்றது. மறுவாழ்வுக்காக மக்கள் கதறி அழுத போது எங்கே போனது பாஜக? என்ன செய்தது பாஜக ஆட்சி? அண்ணாமலை பதில் சொல்லமுடியுமா?

கஜா புயலிலும் மக்களைக் காக்கும் பணியில் நின்றவர்கள் கம்யூனிஸ்ட்டுகள். இப்படி ஆயிரம் ஆயிரம் செய்திகளை சொல்லலாம்.

**தொடர்புக்கு: 9488488339**

# 6 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி மாநிலந்தழுவிய பணிமனை பிரச்சார இயக்கம்!

*தஞ்சாவூர்:* போக்குவரத்து கழக தொழிலாளர்களின் 15 ஆவது ஊதிய ஒப்பந்தம், ஓய்வு பெற்றவர்கள் அகவிலைப்படி உயர்வு உள்ளிட்ட 6 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி மாநிலந்தழுவிய பணிமனை தோறும் பிரச்சார இயக்கம்! அனைத்து தொழிற்சங்க சார்பில் தஞ்சையில் மூன்று இடங்களில் நடைபெற்றது.



தஞ்சாவூர் கோட்ட அலுவலகம் போக்குவரத்துக் கழக கரந்தை புறநகர் கிளை முன்பு தொழிலாளர்களிடம் துண்டு பிரசுரம் விநியோகித்து பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. இதே போல் தஞ்சாவூர் ஜெபமாலைபுரம் நகர்கிளை முன்பு தொழிலாளர்கள், அலுவலர்கள், பாதுகாவலர்கள் உள்ளிட்ட அனைவரிடமும் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையம் பின்புறம் உள்ள அரசு விரைவு போக்குவரத்து கழக பணிமனை முன்பு தொழிலாளர்களிடம் பிரசுரம் விநியோகித்து பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

தஞ்சாவூர் நகர் முன்பு நடைபெற்ற பிரச்சார இயக்கத்திற்கு சிஐடியூ பொருளாளர் எஸ். ராமசாமி, ஏ ஐ டி யூ சி பொதுச் செயலாளர் எஸ். தாமரைச்செல்வன், ஐஎன்டியூசி பொதுச்செயலாளர் க. சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அதிகாரிகள் நலச்சங்க நிர்வாகி ஜெ.சந்திரமோகன் பி.இ, ஓய்வு பெற்றோர் நலச்சங்க தலைவர் ஏ.கணேசன், ரிவா சங்க தலைவர் பாஸ்கர் ஆகியோர் தலைமை வகித்தனர். கரந்தை புறநகர் கிளை முன்பு நடைபெற்ற பிரச்சார இயக்கத்திற்கு பொறியாளர் சங்க நிர்வாகி க.அசோகன், சி ஐ டி யூ துணை பொதுச் செயலாளர் முருகானந்தம், ரிவா சங்க நிர்வாகி ஜீவா ஆகியோர் தலைமை வகித்தனர். அரசு விரைவு போக்குவரத்துக் கழக பணி முன்பு நடைபெற்ற பிரச்சார இயக்கத்திற்கு சிஐடியூ துணை பொது செயலாளர் ஜெ வெங்கடேசன், எஸ். செங்குட்டுவன், எஸ். ஞானசேகரன் மாரியப்பன் ஆகியோர் தலைமை வகித்தனர்.

*மணப்பாறை:* மணப்பாறை அரசு போக்குவரத்து கழக பணி மனை முன்பு ஏ.ஐ.டி.யூ.சி, சி.ஐ.டி.யூ, ஐ.என். டி.யூ.சி. உட்பட எட்டு தொழிற்சங்கள் ஓய்வு பெற்ற தொழிலாளர்கள் அனைத்து சங்கங்கள் சார்பில் டிசம்பர் 19 வேலை நிறுத்தம் கோரிக்கையை தொழிலாளர்களிடம் துண்டு பிரசுரம் கொடுத்து பிரச்சார இயக்கம் நடைபெற்றது ஏ.ஐ.டி.யூ.சி, மாநில துணைப் பொதுச் செயலாள் சுப்ரமணியன் திருச்சி மண்டல பொதுச் செயலாளர், சுந்தர்ராஜ் கிளைச் செயலாளர், மாசிமலை சி.ஐ.டி.யூ, மண்டல துணைப் பொறு செயலாளர் முருகேன், ஐ.என்.டி.யூ.சி. கிளைத்தலைவர் ஆசாத் ஓய்வு பெற்றோர் நலச்சங்கம் சேகர் செல்லமுத்து பிரன்சிஸ் உட்பட சங்க நிர்வாகிகள் ஓய்வு பெற்ற தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

5 ஆம் பக்கத் தொடர்ச்சி

தன்மை முற்றிலும் வேறுபட்டது என்பது தான்.

மேலும், சட்டசபையில் இருந்து நேரடியாக மக்களவை பற்றிய முடிவுகளை எடுப்பது தவறானது. கடந்த காலங்களில் பா.ஜ.க.வால் இந்தப் போக்கை மாற்ற முடியும் என்றால், காங்கிரஸால் ஏன் முடியாது?

அப்படியே எடுத்துக் கொண்டால் கூட இந்த தேர்தல் வாக்குகளின் அடிப்படையில் மக்களவை இடங்களை எடுத்து கொண்டால் ராஜஸ்தான்: பாஜக 14 இடங்கள், காங்கிரஸ் 11, சத்தீஸ்கர்: பாஜக 8 இடங்கள், காங்கிரஸ் 3, மத்தியப் பிரதேசம்: பாஜக 25 இடங்கள், காங்கிரஸ் 4, தெலுங்கானா: காங்கிரஸ் 9 இடங்கள், பாஜக 0, பிஆர்எஸ் 7 மற்றும் ஏஐஎம்ஐஎம் 1, மிசோரம்: ஜேஎம்பி 1 இடம் என்ற எண்ணிக்கையின் அடிப்படையில் தான் வெற்றி வந்திருக்கும்.

கடந்த முறை 2019 நடைபெற்ற தேர்தலில் இந்த மாநிலங்களில் வெறும் 6 இடங்களை மட்டுமே கைப்பற்றிய காங்கிரஸ் இந்த சட்டசபை தேர்தல்களில் மக்களவையில் உள்ள 83 இடங்களில், பா.ஜ., 46 இடங்களையும், காங்கிரசுக்கு 28 இடங்களும் கிடைக்கும். அதாவது, இந்த சட்டமன்ற முடிவுகளின்படி, பாஜக 19 இடங்களை இழக்க நேரிடும், காங்கிரஸ் 22 இடங்களை கூடுதலாக பெறலாம்.

சட்டசபை தேர்தலில் பெற்ற ஓட்டுகளை, மக்களவைத் தேர்தலிலும் பெறுவதை காங்கிரஸ் உறுதி செய்வதோடு இந்தியா கூட்டணியில் அங்கம் பெற்ற அனைத்து கட்சிகளுடனும் இடதுசாரிகளுடனும் ஒரு இணக்கமான சூழலை ஏற்படுத்தி வலிமையான கூட்டணியை அமைப்பதன் மூலம் மிகப்பெரும் வெற்றியை பெறுவதற்கான வாய்ப்பு பிரகாசமாக இருப்பதை எவராலும் மறுக்க இயலாது.

சாதிவாரி கணக்கெடுப்பால் தேர்தல் தோல்வியா?

மக்களவை தேர்தல் நெருங்கி வரும் நிலையில், புதிய தேசிய சாதிவாரிக் கணக்கெடுப்பின் அடிப்படையில் மண்டல் 2.0 எப்படி வெளிவரும் என்பதை இந்தியா கூட்டணி ஒரு சரியான உத்தியை உருவாக்க வேண்டும் இந்தி பேசும் இதயப் பிரதேச மாநிலங்களில் காங்கிரஸின் செயல்திறனை தீர்மானிக்கும் மிக முக்கியமான கேள்வி இது, ராகுல் காந்தியின் சாதிவாரி கணக்கெடுப்பு கோரிக்கை இதர பிற்படுத்தப்பட்டவர்கள் மத்தியில் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. என்பது ஓர் வடிகட்டிய பொய். வேண்டுமென்றால் அந்த செய்தியை காங்கிரஸ் கட்சியின் பிரச்சாரகர்கள் மக்களிடம் முறையாக எடுத்துச் செல்லவில்லை என்பதைத்தான் அது காட்டுகிறது.

சமீபத்தில், பிஹார் முன்னாள் துணை முதல்வரான பிஜேபியின் சுஷில் மோடி, ஏற்கனவே ஓபிசி சமூகத்தினருக்கு போதுமான அளவு மோடி செய்து வருகிறார் என்றும், அவரது தகுதியை நிரூபிக்க சாதி வாரி மக்கள் தொகை கணக்கெடுப்பைச் சார்ந்திருக்க வேண்டிய அவசியமில்லை என்று கூறியதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஒட்டுமொத்த இந்தியாவின் சமூக பொருளாதார பகுப்பாய்வுகளுக்கும் இந்திய ஜனநாயகத்தின் அவர்களுக்கு உரிய அதிகார பங்களிப்புக்கும் சாதி வாரி கணக்கெடுப்பு என்பது மிகவும் அவசியம். அதனை இந்த தேர்தல் கலவரத்தில் அமிழ்த்துவிட ஆர்எஸ்எஸும் பாஜகவும் துடிக்கிறது.

அத்தோடு காங்கிரசும் ராகுலும் இந்த முழக்கத்தை முன் வைத்ததால் தான் தலித்துகளும் பழங்குடியினரும் காங்கிரசை விட்டு விலகியதாக ஒரு கம்பி கட்டும் கதையையும் இணைத்தே பேசி வருகின்றனர். சில அறிவு பகுதியினரை பயன்படுத்தி இப்படி பேசவும் வைக்கிறது. ஆனால் அதையும் மீறி வரும் 2024 மக்களவைத் தேர்தலில் இதுதான் பிரதான பேசுபொருளாக மாறப்போகிறது என்பது மட்டும் உண்மை!

காங்கிரஸ் தனது கடந்தகால தவறுகளில் இருந்து விடுபட்டு ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற வார்த்தைக்கு இணங்க இந்தியா கூட்டணி கட்சியினரோடு விட்டுக் கொடுக்கும் போக்கை அது மேற்கொள்ள வேண்டும். என்பதை மனதில் நிறுத்தி பாஜக பீடை அரசை அகற்ற மதச்சார்பற்ற, சமநீதி, சமூகநீதி சக்திகள் அனைவரும் ஒன்றிணைவோம்! வெற்றியை உறுதிப்படுத்துவோம்!

**தொடர்புக்கு 9444481703**

# அண்ணாமலையின் அவ

# வளர்ச்சிக்காக போராடுப



வ. மணிமாறன்

தமிழ்நாடு பாஜக தலைவராக நியமிக்கப்பட்டுள்ள அண்ணாமலை, பொய்களை சரளமாகப் பேசுவதில் புகழ் பெற்று வருகிறார். அவர் நடத்தி வரும் சொகுசு யாத்திரை பரப்புரையில் தரவுகளோ விவரங்களோ இல்லாமல், பொய்யான குற்றச்சாட்டுகளை அள்ளி வீசுகிறார்.

திட்டியோ வாழ்த்தியோ எதை வேண்டுமானாலும் பேசுங்கள். ஆனால், அது தன்னைப் பற்றியதாக இருக்க வேண்டும் என்பதுதான் முக்கியம். அப்பொழுதுதான் ஊடக வெளிச்சம் தன் மீது எப்பொழுதும் இருக்கும். இதுதான் திருவாளர் அண்ணாமலையின் கொள்கை. அவர் மேற்கொண்டு வரும் சொகுசு யாத்திரையில், செல்லும் இடங்களில் எல்லாம் இதைத்தான் அவர் செயல்படுத்தி வருகிறார்.

இப்படித்தான் நாகை, திருவாரூர் மாவட்டங்களில் சொகுசு யாத்திரை சென்ற போது, கம்யூனிஸ்ட்டுகள் மீது சரமாரியான அவதூறுகளை அள்ளிவிட்டுள்ளார்.

### வளர்ச்சிக்கானது கம்யூனிசம்

“வளர்ச்சிக்கு எதிரான ஒரே கட்சி கம்யூனிஸ்ட் கட்சி. அவர்களால் எங்கும் வளர்ச்சியை கொண்டு வர முடியாது” இது திருவாளர் அண்ணாமலை திருவாய் மலர்ந்தருளியது. அரசியல் அரிச்சுவடி தெரியாதவர்கள் கூட இப்படி பேச மாட்டார்கள்.

கம்யூனிச கொள்கையே மனித குலத்தின் வளர்ச்சிக்கானது. அனைத்துத் தளைகளில் இருந்தும் மனிதன் விடுதலை பெற வேண்டும் என்பதுதான் கம்யூனிசம். பிறகு எப்படி வளர்ச்சிக்கு எதிராக இருக்க முடியும்?

கம்யூனிஸ்ட் கட்சி உருவான



காலத்திலேயே பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் அடக்குமுறைகளை எதிர்கொண்டு நடைபோட்டது. நாட்டின் விடுதலைக்கு கருத்துருவம் தந்து, உயிர் மூச்சு கொடுத்தவர்கள் கம்யூனிஸ்டுகள்.

“இந்தியாவுக்கு தேவை குடியேற்ற நாட்டுத் தகுதி அல்ல. அந்நிய ஆட்சியுடன் அதிகாரப் பங்கீடல்ல. நம்மை நாமே ஆளும் முழுமையான சுதந்திரமே நமது இலட்சியம்” என்று 1923ல் கயாவில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில் முதலில் முழங்கியவர் தோழர் சிங்காரவேலர். இவர் தென்னிந்தியாவின் முதல் கம்யூனிஸ்ட்.

அண்ணாமலையை களமிறக்கி விட்டிருக்கும் ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் நிறுவனர்கள் அப்பொழுது பிரிட்டிசாருக்கு பெட்டிசன் போட்டுக் கொண்டும், மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொண்டும் இருந்தனர். அவர்களின் வாரிசுகள் தான் இன்று ஏகடியம் பேசுகின்றனர்.

நாடு விடுதலை அடைந்தவுடன் அதன் வளர்ச்சிக்குத் தடையாக இருந்த மன்னர்களின் சமஸ்தானங்களையும் ஜமீன்தார்களையும் அகற்ற வேண்டும் என்பதில் உறுதியுடன் இருந்து அதனை நிறைவேற்றச் செய்தவர்கள் கம்யூனிஸ்டுகள்.

வேளாண் உற்பத்தி வளர்ச்சிக்கும் தொழில்கள் தொடங்குவதற்கான மூலப்பொருள்கள் கிடைப்பதற்கும் பெரும் தடையாக இருந்த நிலப்பிரபுத்துவ ஒழிப்புக்காக நாடெங்கும் இயக்கம் நடத்தியது கம்யூனிஸ்ட் கட்சி.

காலனிய அடிமைத்தனத்தில் இருந்து நாடு விடுதலை பெற்றால் தான் முன்னேற முடியும் என்பதற்காக உறுதியுடன் போராடியவர்கள் கம்யூனிஸ்டுகள்.

நாடு விடுதலை பெற்ற பிறகும், மக்களின் முன்னேற்றத்திற்காகவும் நாட்டின் வளர்ச்சிக்காகவும் கம்யூனிஸ்டுகளின் போராட்டம் தொடர்கிறது. நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கம், அனல் மின் நிலையம், சேலம் உருக்காலை, பாரத் மிகுமின் நிறுவனம் (பி.எச்.இ.எல்) போன்றவற்றின் உருவாக்கத்தில் கம்யூனிஸ்டுகளின் உழைப்பு அளப்பரியது.

### நெய்வேலி நிலக்கரி சுரங்கம்

பழுப்பு நிலக்கரியால் (லிக்னைட்) எந்தப் பயனும் இல்லை என ஏகாதிபத்திய நாடுகள் புரளிகளைக் கிளப்பிவிட்டன. அதை உண்மை என நம்பி இந்திய ஆட்சியாளர்களும் தயங்கினர். கம்யூனிஸ்ட் கட்சி விடவில்லை. நெய்வேலி பழுப்பு நிலக்கரியையும் சேலம் இரும்புத் தாதுவையும் ஆய்வு செய்திட கிழக்கு ஜெர்மனிக்கு அனுப்புமாறு வலியுறுத்தினர். இதற்காக சட்டப் பேரவையிலும் நாடாளுமன்றத்திலும் குரல் கொடுத்தனர்.

அதன் பிறகு தான் தமிழ்நாடு அரசு வாதாட முன்வந்தது. அவற்றை ஆய்வு செய்ய கிழக்கு ஜெர்மனிக்கு அனுப்பப்பட்டது. அங்கு பழுப்பு நிலக்கரியும் இரும்பு தாதுவும் பயன்படும் என ஆய்வாளர்கள் உறுதி செய்தனர்.

இப்படித்தான் நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கம், அனல் மின் நிலையம், சேலம் உருக்காலை, பாரத் மிகுமின் நிறுவனம் (பி.எச்.இ.எல்) போன்றவை உருவாயின. அவை காங்கிரஸ் ஆட்சியில் கொண்டுவரப்பட்டாலும் அன்றைக்கு எதிர்க்கட்சியாக இருந்த கம்யூனிஸ்டுகளுக்கு பெரும் பங்கு உண்டு.

இந்தியாவிலிருந்து பொறியாளர்களை அழைத்துச் சென்று பயிற்சியையும் தொழில்நுட்பத்தையும் சோவியத் ஒன்றியம் கற்றுக் கொடுத்தது. இதற்காக எந்த நிதியையும் சோவியத் ஒன்றியம் பெறவில்லை.

இப்படி இந்தியாவினுடைய வளர்ச்சிக்காக கம்யூனிஸ்டுகள் வாதாடிய, போராடிய, நிறைவேற்றச் செய்த திட்டங்கள் ஏராளம்.



அந்தத் திட்டங்களை நிறைவேற்றவும் செயல்படுத்தவும் உறுதுணையாக இருந்த கிழக்கு ஜெர்மனியும் சோவியத் ஒன்றியமும் கம்யூனிஸ்ட் நாடுகள்.

இவை பற்றி எல்லாம் எதுவும் தெரியாத, இந்தியாவின் வரலாற்றை அறியாத அண்ணாமலை போன்றவர்கள், போகிற போக்கில் புழுதி வாரி தூற்றுகிறார்கள். அதன் மூலம் தங்கள் மீது ஊடக வெளிச்சம் படாதா என கனவு காண்கிறார்கள்.

கம்யூனிசமும் கம்யூனிஸ்டுகளும் மனித சமூகத்தின் வளர்ச்சிக்கானவர்கள். எந்த காலத்திலும் மனித சமூகத்தை பின்னுக்கு தள்ளும் பிற்போக்குகளை எதிர்த்துப் போராடுபவர்கள். வெறுமனே பேசிக் கொண்டிருப்பவர்கள் அல்ல செயல்படுத்திக் காட்டியவர்கள்.

### வழிகாட்டிய சோவியத் ஒன்றியம்

மன்னர் ஆட்சியின் கீழ் முடைநாற்றமெடுத்து முடங்கிக் கிடந்த ரஷ்யா, சோவியத் ஒன்றியமாய் உலகுக்கே சுடர்விட்டு வழிகாட்டியது. இதற்கு காரணம் கம்யூனிஸ்டுகளும் கம்யூனிசமும்தான்.

ஜார் மன்னன் காலத்தில், ரஷ்யா உட்பட அந்த சாம்ராஜ்யமே பின்தங்கி இருந்தது. கொடூரமான அடக்குமுறை ஆட்சி. அதனைத் தகர்த்து 1917 அக்டோபரில் புரட்சி வெற்றி பெற்றது. சோவியத் சோசலிஸ்ட் குடியரசுகளின் ஒன்றியம் (ஹிஷிஷிஸி) உருவானது.

அப்போது.. தொழில் துறை, வேளாண் உற்பத்தி, மின்சாரம், போக்குவரத்து என அத்தனை துறைகளிலும் ரஷ்யா பின்தங்கிய நிலையிலேயே இருந்தது. எழுத்தறிவு பெற்றவர்கள் 30 விழுக்காடுதான் இருந்தனர். அமெரிக்காவிலோ எழுத்தறிவு பெற்றவர்கள் 95 விழுக்காடு. அமெரிக்கர்களின் அன்றைய சராசரி வாழ்நாள் 47.3 ஆண்டுகள்; ரஷ்யாவில் 32 ஆண்டுகள். இவை அனைத்தையும் புரட்டிப் போட்டது புரட்சி.

அடுத்த 25 ஆண்டுகளில், ரஷ்யாவில் 80 லட்சமாக இருந்த பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை, 2 கோடியே 5 லட்சமாக அதிகரித்தது. 56.6% இருந்த ரஷ்யாவின் எழுத்தறிவு 87.4% ஆக உயர்ந்தது. உஸ்பெகிஸ்தானில் 11.6%, கஸகஸ்தானில் 25.2% இருந்த எழுத்தறிவு, 78.7% மற்றும் 83.6 % ஆக அதிகரித்தது. 40 ஆண்டுகளில் சோவியத் ஒன்றியத்தின் எழுத்தறிவு 98.5 விழுக்காடாக உயர்ந்தது.

வேலையின்மை என்ற பெருங்கொடுமை துடைத்து எறியப்பட்டது. அனைவருக்கும் வேலை உத்தரவாதம் அளிக்கப்பட்டது. விண்வெளியில் பெரும் சாதனைகள் நிகழ்த்தப்பட்டன. அறிவியல் தொழில் நுட்பம், ஆற்றல், மருத்துவம், பொறியியல் என அத்தனை துறைகளிலும் சாதனைகள் நிகழ்த்தப்பட்டன. தொழில் உற்பத்தி மூன்று மடங்கு அதிகரித்து, அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக தொழில் வளர்ச்சி அடைந்த நாடாக சோவியத் ஒன்றியம் உயர்ந்தது. வேளாண் உற்பத்தி திறன் பல மடங்கு அதிகரித்தது.

அமெரிக்கா 100 ஆண்டுகளில் அடைந்த வளர்ச்சியை, சோவியத் ரஷ்யா 25 ஆண்டுகளில் எட்டியது. இவை அனைத்தும் கம்யூனிஸ்டுகளால் நிகழ்த்தப்பட்ட சாதனைகள். அண்ணாமலை போன்ற ஆர்.எஸ்.எஸ் வார்ப்புகளுக்கு இந்த வரலாறு தெரிந்திருக்க வாய்ப்பில்லை. தெரிந்தாலும் உண்மையைப் பேச மாட்டார்கள்.

### பொருளாதார வல்லரசான சீனம்

ஆசியாவின் நோயாளி என ஏளனம்



# தூறுகளுக்குப் பதிலடி!

# வர்கள் கம்யூனிஸ்டுகளே



செய்யப்பட்ட சீனா, இன்றைக்கு அமெரிக்காவுக்கு அடுத்த பொருளாதார வல்லரசாக இருக்கிறது. இந்தியா விடுதலை பெற்றதற்கு இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் தான் மக்கள் சீன குடியரசு உருவானது. ஏழ்மையும் வறுமையும் முதலீடுகள் இன்மையும் துரத்தின. அவற்றையெல்லாம் வென்று பெரும் சாதனைகளை நிகழ்த்தி காட்டியது மக்கள் சீன குடியரசு. குறுகிய காலத்தில் பெரும் வளர்ச்சியை அடைந்தது.

கொரோனா பெருந்தொற்று காலத்தில் உலகமே முடங்கி கிடந்தது. எங்கே தங்களுக்கும் பரவி விடுமோ என அஞ்சி நடுங்கினர். அவற்றையும் மீறி உதவிகள் செய்வதற்கு பெரும் தொகைகளை கட்டணமாக பல நாடுகள் பெற்றுக் கொண்டன. இப்படி எதுவுமின்றி பாதிக்கப்பட்ட நாடுகள், கொரோனா தொற்றால் முடங்கிக் கிடக்கும் மக்கள் எங்கு இருக்கிறார்களோ அவர்களை தேடிச் சென்றனர் கியூபா மருத்துவர்கள். அச்சமின்றி சிகிச்சை அளித்துக் காப்பாற்றினார். அவர்களை வார்த்தெடுத்தது கம்யூனிசம்.

அண்ணாமலை போன்றவர்களை வார்த்தெடுத்தது ஆர்எஸ்எஸ். அந்த அமைப்பின் வரலாறு என்ன? வளர்ச்சிக்காக என்ன செய்தது? அதனிடம் பழமையை பாதுகாப்பதைத் தவிர வேறு என்ன கொள்கை உள்ளது?

**பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம்**

“கம்யூனிஸ்டுகளின் கோட்டை என்று சொல்லியே திருவாரூர் மாவட்டத்திற்கு எந்தத் தொழிலையும் கொண்டுவரவில்லை. எந்த வளர்ச்சியும் ஏற்படவில்லை” என்று அங்கலாய்க்கிறார் திருவாளர் அண்ணாமலை.

காவிரி பாசன மாவட்டங்களின் பசுமையையும் சுற்றுச்சூழலையும் மாசுபடுத்தக்கூடாது. வேளாண் உற்பத்தியை தடுக்கக் கூடாது என்பதற்காகத் தான் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதுவும் காவிரிப் பாசன விவசாயிகள் நடத்திய தொடர் போராட்டங்களின் விளைவாக கொண்டுவரப்பட்டது தான் பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலச் சட்டம்.

காவிரி பாசன விளைநிலங்களின் கீழ், ஆழத்தில் ஹைட்ரோ கார்பன் இருக்கிறது. மீத்தேன் நிறைந்துள்ளது. அவற்றை எடுக்க வேண்டும் என கார்ப்பரேட்டுகளுக்கு ஏலம் விட முயன்றது ஒன்றிய பாஜக அரசு. விளைநிலங்களும் விவசாயிகளும் அழிந்தாலும் பரவாயில்லை, ஹைட்ரோ கார்பன் எடுத்தாக வேண்டும். கார்ப்பரேட்டுகள் லாபம் பெற்றாக வேண்டும் என முனைப்புடன் செயல்பட்டது மோடி அரசு. அதனை விவசாயிகளின் போராட்டம் தான் முறியடித்தது. வேறு வழியின்றி பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்கப்பட்டது. அங்கு எப்படி தொழிற்சாலைகளை கொண்டுவர முடியும்?

அண்ணாமலை இதனை அறியாமல் பேசுகிறாரா? கார்ப்பரேட்டுகள் ஹைட்ரோ கார்பன் எடுத்து, விளைநிலங்களை அழிக்க கம்யூனிஸ்டுகள் உதவவில்லை என குற்றம் சாட்டுகிறாரா?

**வாக்குறுதிகள் என்ன ஆயின?**

விவசாயிகளின் வருமானம் இரண்டு மடங்கு உயர்த்தப்படும் என்று பிரதமர் மோடி வாக்குறுதி அளித்தாரே, அது என்ன ஆயிற்று? அதனை நிறைவேற்றுவதற்காக ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன? விவசாயிகளை உயிரோடு புதைக்கும் வேளாண் சட்டங்களுக்கு எதிராக ஓராண்டுக்கு மேல் போராடித் தானே அவர்களால் முறியடிக்க முடிந்தது. வேளாண் வளர்ச்சிக்கு, விவசாயிகளின் முன்னேற்றத்திற்கு மோடி அரசு செய்த சாதனைகள் என்ன? பட்டியலிட முடியுமா?

தமிழ்நாட்டிலேயே தொழில் வளர்ச்சியில் முன்னணியில் இருப்பது கோவை. தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று போற்றப்படும் அளவுக்கு பஞ்சாலைகள் டெக்ஸ்டைல் மில்கள் நிறைந்திருந்தன. இன்று எஞ்சினியரிங், பம்ப்செட், ஆயத்த ஆடை உற்பத்தி என வளர்ச்சியும் மாற்றமும் அடைந்திருக்கிறது. இப்பகுதியில் இருந்து நாடாளுமன்றத்திற்கு தொடர்ந்து கம்யூனிஸ்டுகள் தானே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பார்வதி கிருஷ்ணன், கே.சுப்பராயன், பி.ஆர். நடராஜன் ஆகிய கம்யூனிஸ்டுகள் தலா இரண்டு முறை நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு முன்பு ரமணி, பாலதண்டாயுதம் ஆகியோர் நாடாளுமன்ற உறுப்பினர்களாக வெற்றி பெற்றவர்கள். வளர்ச்சிக்கு எதிரானவர்களாக கம்யூனிஸ்டுகள்



இருந்தால், இங்கு தொடர்ந்து வெற்றி பெற்றிருக்க முடியுமா?

நூல் விலையை குறையுங்கள். பஞ்சு நூலுக்கு விதிக்கும் ஜிஎஸ்டி வரியை குறையுங்கள் என்று திருப்பூர் கோவை தொழிலதிபர்கள் கெஞ்சினார்கள். போராடினார்கள். ஒன்றிய பாஜக அரசின் செவிகளுக்கு கேட்டதா?

அதானிகளுக்கு தாரைவார்ப்பது தான் வளர்ச்சியா?

“இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) அதிகரித்துவிட்டது. பொருளாதாரம் உயர்ந்து விட்டது” என்று அண்ணாமலை பீற்றுகிறார். இந்தியாவில் பெரும் உழைப்பில் உருவான பொதுத்துறை நிறுவனங்களை எல்லாம் அம்பானிகளுக்கும் அதானிகளுக்கும் தாரைவார்ப்பது தான் வளர்ச்சியா?

வரலாற்றில் இல்லாத அளவுக்கு டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு 83.36 காசுகளாக அதிகரித்துள்ளது. இதனால் ஏற்றுமதி தொழில்கள் பெரும் பின்னடைவை சந்தித்துள்ளன. உலகப் பொருளாதாரத்தில் 10 விழுக்காடு இருந்த இந்தியாவின் பங்களிப்பு, 3 விழுக்காடாக சரிந்து விட்டது. கார்ப்பரேட்டுகளுக்கு வரி சலுகை, 12 லட்சம் கோடி ரூபாய் கடன் தள்ளுபடி என வாரி வழங்கிஞ் அதானிகளும் அம்பானிகளும் வீங்கிப் போய் உள்ளனர். வேலையில்லா திண்டாட்டம் இதுவரை இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளது. தனிநபர் வருமானம், குடும்ப சேமிப்பு இதுவரை இல்லாத அளவுக்கு சரிந்துள்ளது. இதைத்தான் அண்ணாமலை வளர்ச்சி என்கிறாரா? கார்ப்பரேட்டுகளும் அதானிகளும் ஊதிப் பெருப்பது வளர்ச்சி அல்ல. பெரும் சுரண்டல். கம்யூனிஸ்டுகளால் இந்த வளர்ச்சியை ஒருபோதும் ஆதரிக்க முடியாது.

சமூகம் முன்னேற வேண்டும். மனித குலம் விடுதலை பெற வேண்டும். இதற்காக கம்யூனிஸ்டுகள் போராடிக் கொண்டே இருப்பார்கள். அவதூறுகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் ஒருபோதும் அஞ்ச மாட்டார்கள்.

தொடர்புக்கு: 9600001224




## டிச.11 உடல் உழைப்பு தொழிலாளர்கள் மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம்

- நலவாரியத்தில் பதிவு செய்யும் வழிமுறைகளை எளிமைப்படுத்திடு.
- தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு வழங்கி வரும் கல்வி,திருமண உதவித் தொகையை உயர்த்தி வழங்கு.
- தற்போது வழங்கி வரும் ஓய்வூதியத்தை மாதம் ரூ.3000 ஆக உயர்த்தி வழங்கு.
- இயற்கை மரணத்திற்கு வழங்கி வரும் உதவி தொகையினை ரூ.50000 ஆக உயர்த்தி வழங்கு.
- விபத்து மரண உதவி தொகையினை ரூபாய் ஐந்து லட்சமாக உயர்த்தி வழங்கு.
- தொழிலாளர்களுக்கு வழங்கி வரும் பணப்பலன்களை விரைந்து வழங்க நடவடிக்கை எடு.
- அமைப்பு சாரா துறைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் நிரந்தரமாக ஒரே தொழிலில் பணி புரியும் வாய்ப்பு இல்லை என்பதால் வேறு தொழிலில் பணி புரிய நேரும்போது வாரியத்தில் எளிதாக மாற்றம் செய்திட தக்க வழிவகை செய்திடு
- வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களுக்கு தைப்பொங்கலுக்கு சிறப்பு போனஸ் ரூ.5000/ வழங்கு.
- ஓய்வூதியம் கேட்டு விண்ணப்பிக்கும் தொழிலாளர்களுக்கு விண்ணப்பித்த தேதியிலிருந்து ஓய்வூதியம் வழங்கிட நடவடிக்கை எடு
- மாதாமாதம் 10 ஆம் தேதிக்குள் ஓய்வூதியம் கிடைப்பதை உறுதி செய்திடு.
- அமைப்பு சாரா தொழிலாளர் வாரியங்களுக்கு நிதி ஆதாரத்தை உருவாக்க தக்க வழிமுறையை கண்டறிந்து, செஸ் வரி வசூலிக்க நடவடிக்கை எடு
- தமிழ்நாடு உடல் உழைப்பு தொழிலாளர் நல வாரியத்தில் பணிபுரிந்து வரும் தினக்கூலி தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்திடு

ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு ஏஐடியுசி உடலுழைப்பு தொழிலாளர் சம்மேளனம் முடிவு செய்த அடிப்படையில் 11.12.2023 ஆம் தேதி அன்று தமிழ்நாடு முழுமையும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்பாட்டம் நடைபெறுகிறது.

## தமிழ்நாடு விவசாய சங்கம் முதல்வருக்கு கோரிக்கை

தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் வட்டம் செங்கிப்பட்டி வருவாய் கோட்டத்திற்கு உட்பட்ட ஏரிகள், குளங்கள், குட்டைகள், வாரிகள் உள்ளிட்ட இடங்களில் அனுமதி பெற்றும், அனுமதி பெறாமலும், விதிகளை மீறி, சட்டத்துக்கு புறமாக பல கோடி ரூபாய்க்கு பல்வேறு தனியார் நிறுவனங்கள் சவடு மண் எடுத்துள்ளனர். இந்நிறுவனங்கள் மீதும், நடவடிக்கை எடுக்காத அரசு அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்க கோரி இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினரும், தமிழ்நாடு விவசாய சங்கத்தின் மாவட்ட தலைவருமான ஆர்.ராமச்சந்திரன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பி உள்ள மனுவில் தெரிவித்துள்ளார்.

# கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் முதலமைச்சர் சந்திப்பு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் முதலமைச்சர் அவர்களை சந்தித்து பல்வேறு பிரச்சினைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களை அறிவாலயத்தில் இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், துணைச் செயலாளர்கள் நா.பெரியசாமி, மு.வீரபாண்டியன், நாகபட்டினம் மக்களவைத் தொகுதி உறுப்பினர் எம்.செல்வராசு, மாநில செயற்குழு உறுப்பினர் வை.சிவபுண்ணியம் முன். எம்.எல்.ஏ. தமிழ்நாடு ஏஐடியுசி பொதுச் செயலாளர் எம்.ராதாகிருஷ்ணன் ஆகியோர் நேரில் சந்தித்து சில முன்னுரிமை கோரிக்கைகளை முன் வைத்துப் பேசினர்.

### கோயில் மனையில் குடியிருப்போர் உரிமை

தமிழ்நாடு முழுவதும் பல்லாயிரம் குடும்பங்கள் கோயில்கள், மடங்களுக்கு சொந்தமான நிலங்களில், சொந்த செலவில் வீடு கட்டி குடியிருந்து வருகின்றனர் வழிவழியாக குடியிருந்து வரும் குடும்பங்களிடம் கோயில் நிர்வாகம் “பகுதி” (ஆண்டு குத்தகை) வசூலித்து வந்தது. இந்த “பகுதி” வசூல் முறையை மாற்றி, நிலத்தின் சந்தை விலை மதிப்பில் சதுர அடிக்கணக்கில் மாத வாடகை நிர்ணயிக்கப்பட்டதால் குடியிருப்பவர்களால் செலுத்த முடியாத நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதன் மீது அரசு தலையிட்டு கோயில் மனையில் குடியிருப்போர் வசிப்பிட உரிமையை பாதுகாக்க வேண்டும்.

### விவசாயத் தொழிலாளர் நல வாரியம்

தமிழ்நாட்டில் உள்ள ஒரு கோடிக்கும் அதிகமான விவசாயத் தொழிலாளர்களின் சமூக, பொருளாதார வாழ்க்கை நிலைகளில் தொடர்ந்து மேம்பாடு காணும் வகையில் சமூக பாதுகாப்புத் திட்டம் உருவாக்கி செயல்படுத்தும் வகையில், 1999 ஆம் ஆண்டில் கலைஞர் ஆட்சியில் இருந்ததைப் போன்று தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் நல வாரியம் அமைக்க வேண்டும்.

### குறு, சிறு தொழில் பிரச்சினைகள்

கோவை, மதுரை, ஈரோடு, திருப்பூர், சென்னை, அம்பத்தூர் கிருஷ்ணகிரி உள்ளிட்ட பகுதிகளில் குறு, சிறு தொழில்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றன. இது தொடர்பான கோரிக்கைகளை முன்வைத்து தொழில் துறையினர் போராடி வருகின்றனர். இதன் மீது தலையிட்டு, தொழில்துறை அமைப்புகளின் பிரதிநிதிகளை அழைத்துப் பேசி தீர்வு காண வேண்டும்.

### மலைப் பகுதி பெண்களுக்கு கட்டணமில்லா பேருந்து பயணம் வழங்க வேண்டும்.

தமிழ்நாடு முழுவதும் அரசு இயக்கும் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் லட்சக்கணக்கான பெண்கள் கட்டணமில்லா பயணம் செய்து வருகின்றனர். ஆனால், நகரப் பேருந்துகள் இயக்கப்படாத மலைப் பகுதிகளில் வசித்து வரும் ஆதிவாசிகள், பழங்குடியினர் மற்றும் மலைவாழ் பெண்களுக்கு கட்டணமில்லா பேருந்து பயணம் செய்யும் வாய்ப்பு இதுவரை கிடைக்கவில்லை. இதனைக் கருத்தில் கொண்டு மலைப் பகுதிகளில் இயக்கப்படும் புறநகர் பேருந்துகளில் பெண்கள் கட்டணமில்லா பயணம் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

### போராட்ட வழக்குகளை திரும்பப் பெறுக

விவசாயிகள், தொழிலாளர்கள், மாணவர், இளைஞர்கள் மக்கள் நலக் கோரிக்கைகள் மீது போராட்டங்களில் ஈடுபடும் போது பல்வேறு சட்டப் பிரிவுகளில் வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. இதன் மூலம் பல்லாயிரக்கணக்கானோர் அலைக்கழிக்கப்படுகின்றனர். வெளிநாடு செல்வோர், கடவுச்சீட்டு பெறுவோர் மற்றும் புதுப்பிக்க செல்வோர், ஓட்டுநர் உரிமம் புதுப்பித்தல் போன்ற சேவைகள் பெறும் உரிமைகள் மறுக்கப்படுகின்றன. இதனைக் கருத்தில் கொண்டு போராட்டங்களில் போடப்பட்ட வழக்குகள் அனைத்தையும் திரும்பப் பெற வேண்டும்

### விருதுநகர் - தேனி மாவட்ட இணைப்புச் சாலை

விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம், திருவில்லிப்புத்தூர், வத்திராயிருப்பு, வருசநாடு, காமராசபுரம் வழியாக தேனி மாவட்டத்தை இணைக்கும் வகையில் சாலை அமைக்க வேண்டும். இவை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் முதலமைச்சரிடம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.



# தஓவாஇ கையெழுத்து இயக்க பட்டியல் டெல்லியில் ஒப்படைப்பு

புதுடில்லி: ஜந்தர்மந்தரில் நடைபெற்ற தலித் மற்றும் விவசாய தொழிலாளர்களின் பாராளுமன்ற முற்றுகை போராட்டம் நடைபெற்றது.

அதில் தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் சார்பில் தலித் மக்களின் உரிமை சாசனத்தில் கையெழுத்து பெறப்பட்ட பட்டியலை நா.பெரியசாமி, புதுவை ராமமூர்த்தி ,வி.எஸ்.நிர்மல் ஆகியோரிடம் தமிழக தலைமைக்குழு உறுப்பினர்கள் உதயகுமார் ,எஸ்.பழனிக்குமார், சுகுமார் ஆகியோர் ஒப்படைத்தார்கள்.

இந்தியா முழுவதும் பெறப்பட்ட கையெழுத்துபட்டியல் முறைப்படி இந்திய குடியரசுத் தலைவரிடம் கொடுக்கப்படும்.

# அயோத்திதாசர் நினைவு மண்டபம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பு

சாதிய அடுக்கு முறை சமூகத்தை மாற்றியமைக்கும் முயற்சியில் ஈடுபட்ட தலைசிறந்த சிந்தனையாளர்களில் அயோத்திதாச பண்டிதர் குறிப்பிடத் தக்கவர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்திய காலத்தில் தொடங்கி, இருபதாம் நூற்றாண்டு தொடக்கம் வரை, பௌத்த சமய வழியில் தீண்டாமைக்கு எதிரான சிந்தனைகளை வளர்த்தெடுத்து, சுயமரியாதை, சமதர்ம கருத்துக்களில் விழிப்புணர்வு ஏற்படுத்தியவர். ஏடுகள் தொடங்கி வாசிப்பு வழி பரப்புரைத் தளம் அமைத்தவர். பன்முகத் திறன் கொண்ட அறிஞர் அயோத்திதாசர் பண்டிதர் அவர்களுக்கு, திருவுருவச் சிலையுடன் நினைவு மண்டபம் அமைத்து, திறப்பு விழா செய்துள்ள தமிழ்நாடு அரசுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு நன்றி, பாராட்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது. இவ்வாறு இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# சுரங்கப்பாதை வேலையை துரிதப்படுத்தக் கோரி ஆர்ப்பாட்டம்



இளையரசனேந்தல் ரோடு சுரங்கபாதை பாலம் சர்வீஸ் ரோடு வேலையை துரிதப்படுத்த கோரி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆர்ப்பாட்டம் நகரச் செயலாளர் ஏ.சரோஜா எம்.சி. தலைமையில் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட செயலாளர் ஜி.பாபு, மாவட்ட குழு பரமராஜ், செல்லையா, கண்ணம்மா, மாவட்ட நிர்வாக குழு ஜி.சேது ராமலிங்கம், நகர துணைச் செயலாளர் டி.முனியசாமி, ஜி.அலாவுதீன், மாதர் சங்க பொறுப்பாளர் ஏ.விஜயலெட்சுமி, ராமகிருஷ்ணன், ரெங்கநாதன், இன்னாசிமுத்து, ராஜீ, செந்தில் ஆறுமுகம், குருசாமி மற்றும் பல தோழர்கள் கலந்து கொண்டனர்.

நெல் விலை 67%, கொப்பரை விலை 100% உயர்வு என ஏமாற்றும்

# அண்ணாமலையே இடுபொருட்கள் 300% விலை உயர்வை மறைத்தது ஏன்?

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநில செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

நெல் விலை 67 சதம்.. கொப்பரை விலை 100 சதம் உயர்வு என ஏமாற்றும் அண்ணாமலையே... இடுப்பொருட்கள் 300 சதம் விலை உயர்வை மறைத்தது ஏன்?

பாஜகவின் மாநில தலைவர் அண்ணாமலை அவர்கள் டெல்டா மாவட்டங்களில் நடைபயணம் மேற்கண்டு வருகிற போது.. ஒன்றிய பாஜக ஆட்சியில் தான், பிரதமர் நரேந்திரமோடி நெல் விலையை 67 சதம் உயர்த்தி உள்ளதாகவும்; தேங்காய் கொப்பரை ஆதார விலையை 107 சதம் உயர்த்தி உள்ளதாகவும்.. நடைபயணம் செல்லுகிற இடமெல்லாம் பொய்யுரை பேசியுள்ளார்.

ஒன்றிய அரசு கடந்த 9 ஆண்டுகளில் விவசாயிகள் உள்ளிட்ட சாதாரண மற்றும் நடுத்தர மக்கள் மீது வலுக்கட்டாயமாக தன் புதிய திட்டங்களை திணித்து .. அதுவரை பொது மக்களுக்கு கிடைத்த வந்த சலுகைகளை பறித்துக்கொண்டதுடன்.. பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய்களை ஜி.எஸ்.டி: மூலம் வசூலித்த நிலையை தமிழகமக்கள் மறந்திருப்பார்கள் என கருதுகிறார் அண்ணாமலை.

மோடி அவர்கள் 2014 ஆம் ஆண்டு பொறுப்பேற்கும் முன்... ஒன்றிய அரசு விதித்திருந்த கலால் வரி ஒரு லிட்டர் பெட்ரோலுக்கு ரூ.9.20; டீசல் ஒரு லிட்டருக்கு ரூபாய் 3.46 ஆகும். ஆனால் ஆட்சிக்கு வந்தபின்.. ஒரு லிட்டர் பெட்ரோலுக்குரூ 21.90; ஒரு லிட்டர் டீசலுக்கு ரூ21.80 என உயர்த்தியது.. இதன் மூலம் 2016 முதல் 2022 ஆம் ஆண்டு வரை 8 ஆண்டுகளில் ஒன்றிய அரசு விவசாயிகள் உள்ளிட்ட பொது மக்களிடம் பறித்திருப்பது 26 லட்சம் கோடி ரூபாய் ஆகும்.

வேளாண்மைக்கான ஆயில் இஞ்சின் இயக்கத்திற்கும்; விளைபொருள் போக்குவரத்திற்குமான டீசல் விலை உயர்வால் விவசாயிகளுக்கு பன்மடங்கு கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டில் யூரியா 50 கிலோமூட்டை விலை ரூ.258, டி.ஏ.பி. ரூ.687 என விற்பனை செய்து வந்த நிலையில், தற்பொழுது 45 கிலோ யூரியா மூட்டை ரூ.256, 50 கிலோ டி.ஏ.பி, மூட்டை ரூ.1350 ஆகும். கடந்த சில ஆண்டுகளாக இன்றுவரை இவைகள் தட்டுப்பாடு ஏற்படும் பொழுது இன்னும் கூடுதல் விலையில் விவசாயிகள் வாங்க வேண்டிய நிலை உள்ளது.

இதுபோல் பூச்சிக்கொல்லி, களைக்கொல்லி, ஊட்டச்சத்து என பிற வேளாண் இடுப்பொருட்களின் விலை ஏற்றம் என்பதும் பலமடங்காகும்.

இந்நிலையில்... டீசலுக்கான கலால்வரி 650 சதம் டி.ஏ.பி.. விலை.. 200 சதமாக உயர்த்தப்பட்டுள்ளது. ஆனால் நெல் விலை 62 சதம்; கொப்பரைத் தேங்காய் 103 சதம் மட்டும் தான் உயர்த்தப்பட்டுள்ளது.

அண்ணாமலை வேளாண் இடுப்பொருட்களின் விலை உயர்வை சௌவுகரியமாக மறைத்து விட்டு.. நெல் மற்றும் கொப்பரை விலை உயர்வு சதவிகிதத்தை மட்டும் அறிவித்திருப்பது விவசாயிகளை ஏமாற்றுகிற செயலாகும்.

வேளாண் இடுப்பொருட்கள்; கூலி; இயந்திர வாடகை மற்றும் விவசாயிகளின் வாழ்க்கைச் செலவுகள் கூடுதலை கணக்கிட்டால்..ஒருகுவிண்டால்நெல்ரூபாய் ரூபாய் 3800.. கொப்பரை கிலோ ரூபாய் 180 எனவும்.. அது போல் கரும்பு; பருத்தி உள்ளிட்ட பயிர்களுக்கும் ஒன்றிய அரசு விலை நிர்ணயம் செய்திருக்க வேண்டும். இதைச் செய்திருந்தால் அண்ணாமலை பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

இந்த நிலையில் தான் விவசாயிகள் இந்தியா முழுவதும் 13 மாதங்கள் போராடி 740 க்கும் மேற்பட்ட விவசாயிகள் இறந்தநிலையில்.. பிரதமரின் எழுத்து பூர்வமான கோரிக்கைகளை ஏற்று, போராட்டம் விலக்கி கொள்ளப்பட்டது. ஆனால் போராட்டம் முடிந்து ஓராண்டு கடந்தும், உற்பத்திக்கான செலவு இரண்டு டன், 50 சதம் சேர்த்து விலை நிர்ணயம் செய்து அறிவிக்காமல் பிரதமர் உள்ளார். இந்நிலையில் அண்ணாமலை இப்படி பேசுவது விவசாயிகளை வஞ்சிக்கிற.. ஏமாற்றுகிற செயலாகும். இவ்வாறு பி.எஸ்.மாசிலாமணி தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# ஜென்னி மார்க்ஸ் எனும் ஒளிவிளக்கு



ஆர்.பாலசந்திரன்

**காரல் மார்க்ஸ் என்ற மேதை தன் வாழ்நாளில் தனது லட்சியத்தை மக்களிடம் விளக்கி அதை முன்னெடுத்துச்செல்ல அவர் பட்ட கஷ்டங்கள் எண்ணிலடங்காதது அதை எவ்வாறு நீந்தி லட்சியத்தை அடைந்தார் என்பதற்கு விடை அவருடைய மனைவி ஜென்னி மார்க்ஸ் என்னும் ஒளிவிளக்கே என்றால் மிகையாகாது.**

ஜென்னி 1814ஆம் ஆண்டு பிப்ரவரி 12ஆம் நாள் பிறந்தார். இவரது தந்தையார் லட்விக் வான் வெஸ்ட்பாலன் ஜெர்மன் அரசாங்கத்தின் முக்கிய அதிகாரிகளில் ஒருவர். ஜென்னியின் பெற்றோரும் மார்க்ஸின் பெற்றோரும் பக்கத்து பக்கத்து வீட்டில் வசித்துவந்தனர். மார்க்ஸ் மாணவராக இருந்தகாலத்திலேயே இருவரும் மண உறுதி ஒப்பந்தம் செய்துகொண்டிருந்தனர். இவர்களது திருமணம் 1843 ஜூன் மாதம் 19ஆம் நாளன்று நடைபெற்றது.

காரல் மார்க்ஸ் பெர்லின் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் ஆவதற்கு விண்ணப்பித்திருந்தார் கிடைக்கவில்லை. மார்க்ஸும் ஜென்னியும் அக்டோபர் மாதம் பாரீஸை வந்தடைந்தனர். ஜென்னி அவர் வாழ்க்கைத்துணைவியாக மட்டுமல்லாது அவருக்குச் சுமைதாங்கியாகவும், கவசமாகவும் இருந்தார்.



மார்க்ஸின் உற்ற தோழனாக பிரடெரிக் எங்கெல்ஸ் விளங்கினார். 1844ஆம் ஆண்டு தாயகம் திரும்பும் வழியில் பாரீஸில் இறங்கி காரல் மார்க்ஸைச் சந்தித்தார். புரட்சிகரக் கோட்பாட்டையும் அதன்.நடைமுறை உத்திகளையும் தொழிலாளி வர்க்கத்திற்கு ஆயுதமாக வழங்கிய இந்த மாபெரும் அறிவுக்கடல்கள் இரண்டும் சந்தித்தன மார்க்ஸும் எங்கெல்ஸும் போராட்டத்தில் வரலாறு காணாதபடி ஐக்கியப்படவும் ஒரு தொடக்கமாக விளங்கியவை இருவரும் பாரீஸில் ஒன்றாகக் கழித்த இந்தப் பத்து நாட்கள்தாம். எங்கெல்ஸ் அவர்கள் மார்க்ஸின் அரசியல் வாழ்வோடு அனைத்து இன்ப துன்பங்களில் உற்ற நண்பனாக விளங்கினார்.

ஜென்னியின் மணவாழ்க்கைக்குப்பின் அவர் பட்ட துன்பங்கள் எண்ணிலடங்காதவை. 1845இன் துவக்கத்தில் ஒருநாள் பிரெஞ்சு அரசாங்க அதிகாரி மார்க்ஸை பாரீஸைவிட்டு 24 மணி நேரத்துக்குள் வெளியேறவேண்டுமென உத்தரவைக்காட்டினார்.. ஜென்னியின் சொல்லாடல்படி "பின்னர் எங்கள் நாற்காலி மேஜை முதலியவற்றையும் துணிகள் சிலவற்றையும் விற்பனை செய்தேன். நோயுடனும் கடுங்குளிருடனும் பிப்ரவரி மாதத்துவக்கத்தில் கார்லைப்பின்பற்றி பிரஸ்ஸெல்ஸ் சென்றேன். இங்கு நாங்கள் குடிவந்ததுதான் தாமதம் உடனே எங்கெல்ஸ் பின் தொடர்ந்து உதவினார்.

புரட்சியின் மேகம் மேலும் அடுக்கடுக்காக உயர்ந்தது. பெல்ஜிய வானும் இருண்டிருந்தது.. நடு இரவில் இருவர் திடீரென எங்கள் வீட்டுக்குள்ளே வந்தனர். அவரைக்கைது செய்ய வாரண்ட் இருப்பதாகக் கூறி கைது செய்து கொண்டு போயினர். அவர் பின்னால் மிகக்கவலையுடன் விரைந்து போனேன். திடீரென ஒரு காவல் அதிகாரி என்னைப் பிடித்து கைதுசெய்து இருட்டான ஒரு சிறைக்குள் தள்ளிவிட்டார். இது வீடற்ற, பிச்சைக்காரர்கள், நாடோடிகள், நீசத்தனமான தீய ஒழுக்கப்பெண்கள் முதலியோர் காவலில் வைக்கப்படும் இடம்."

பிரஸெல்ஸைவிட்டு வெளியேறும்படி கார்ல்மார்க்ஸ் உதரவிடப்பட்டார். பிரெஞ்சு அரசாங்கம் மார்க்ஸின் வெளியேற்ற உத்தரவை ரத்து செய்தது. எனவே 1848ல் பிரெஸ்ஸெல்ஸை விட்டு வெளியேறி மார்க்ஸ் மீண்டும் பாரீஸில் குடிபுகுந்தார். தொழிலாளர் எழுச்சிகள் பல நாட்டில் இடம்பெற்றன. 1849ஆம் ஆண்டில் மீண்டும் பாரீஸைவிட்டு வெளியேற்றப்பட்டார். நாடு கடத்தப்பட்ட மார்க்ஸ் லண்டனுக்குச் சென்று பணிகளைத்தொடர்ந்தார். ஜென்னி அவ்வப்போது கிடைக்கும் பணத்தைக்கொண்டு குடும்ப வாழ்க்கையைச் சிக்கனமாக நடத்தினார்.

மார்க்ஸ் தன் ஆராய்ச்சிப்பணிகளை எவ்வித இடையூறுமின்றிநடத்தவேண்டும் என்பதற்காக குடும்பச்சுமையை தானே ஏற்றுக்கொண்டார். தன் இல்லம் தேடிவரும் நண்பர்களையும், தோழர்களையும் இன்முகத்துடன் வரவேற்று உபசரித்தார். தனது குடும்பத்திலிருந்து கிடைத்த பணத்தையும் மார்க்ஸின் விருப்பத்திற்கிணங்க ஜென்னி பாட்டாளிவர்க்க லட்சியப் பணிகளுக்காக செலவிட்டார். வசதிமிக்க கோமானின் மகளான ஜென்னி பசியும் பட்டினியும் நிறைந்த ஏழ்மை வாழ்க்கையை மார்க்ஸுக்காக ஏற்றுக்கொண்டார்.

மார்க்ஸ் மற்றும் எங்கெல்ஸ் அவர்களின் கடுமையான உழைப்பால் மூலதனம் முதல் பகுதி 1869ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

1880ஆம் ஆண்டு ஜென்னியின் உடல்நலம் கடுமையாகப்பாதிக்கப்பட்டு 1881 ஆம் ஆண்டு டிசம்பர் இரண்டாம் நாள் ஜென்னி மறைந்தார். மாதர்குலத்தின் ஒளிவிளக்கு **ஜென்னியின் நினைவுநாள் டிசம்பர் 2.** அவரது நினைவு நாளன்று அவருக்கு செவ்வணக்கம் செய்வோம்..

# சிறப்புமிக்க தோழர் கங்காதர அதிகாரி

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைக் கட்டி யமைத்த சிறப்புமிக்க தலைவர்களாக விளங்கியவர்களில் ஒருவர் கங்காதர அதிகாரி ஆவார்.**

ஜி.அதிகாரி என கட்சியினரால் அன்புடன் அழைக்கப்படும் கங்காதர அதிகாரி அவர்கள் பம்பாய்க்கு அருகில் பன்வெல் என்னுமிடத்தில் 1898 ஆம் ஆண்டு டிசம்பர் எட்டாம் நாள் பிறந்தார். ஆரம்பகாலக் கல்விக்குப்பின். 1918ஆம் ஆண்டு இண்டர்மீடியட் சயன்ஸ் தேர்வில் மாநிலத்திலேயே முதல் மாணவராகத்தேர்வு பெற்றார். பின்னர் பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் கழகத்தில் சேர்ந்து முதுநிலைப்பட்டம் பெற்றார். .

அக்காலத்தில் ஜெர்மானியர்களின் அறிவியல் கண்டுபிடிப்புகள் இவரை வெகுவாய் கவர்ந்தன. ஜெர்மனி சென்று மேற்கல்வி கற்க விரும்பினார். எனவே ஜெர்மனி மொழி கற்றார்.. 1922 ஆம் ஆண்டு ஜெர்மனியில் பெர்லின் நகரில் வால்ஹிம் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து பயின்றார்.. டாக்டரேட் (பி எச்.டி ) பட்டம் வென்றார்.

பலபிரபலமான அறிவியல் அறிஞர்களின் தொடர்பு கிடைத்தது. இவர் பல்கலைக்கழக ஆய்வகத்தில் பணியாற்றியபோது அறிவியல்மேதை ஐன்ஸ்டீன் இவரைச் சந்தித்தார். அப்பொழுது அவர் அதிகாரி அவர்களை சிறந்த இளம் இந்திய விஞ்ஞானியாக விளங்குவார் எனப் பாராட்டினார். இவருடைய அறிவியல் அறிவாற்றல் ஐன்ஸ்டீனை வெகுவாகக் கவர்ந்தது.

இவர் ஜெர்மனியில் பிரபல புரட்சியாளரும் கம்யூனிஸ்ட் என்று அறியப்பட்டவருமான வீரேந்திரநாத் சட்டோபாத்தியாயாவைச் சந்தித்தார். அவர் இந்தியாவில் புகழ்மிக்க கவிஞரான கவிக்குயில் சரோஜினிநாயுடுவின் சகோதரர் ஆவார். இவருடைய தொடர்பால் ஜெர்மன் கம்யூனிஸ்ட்கட்சியின் தலைமையகத்தில் உள்ள நூலகத்தில் மார்க்ஸீய நூல்கலைக்கற்றுத்தேர்ந்தார்.

வீரேந்திரநாத் அவர்கள் அதிகாரியை ஜெர்மன் கம்யூனிஸ்கட்சித் தலைமையிடம் அறிமுகம் செய்தார் கங்காதர அதிகாரி 1928ல் ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் ஆனார். அங்கிருந்தே இந்தியாவில் வெளியான மராத்தி இதழான கிராந்தி இதழுக்குக் கட்டுரைகள் எழுதினார். பிரெடரிக் எங்கெல்ஸின் "கம்யூனிசம் ரூ கேள்விபதில்' என்றநூலை மராத்திய மொழியில் மொழிபெயர்த்து வெளியிட்டார்.

1928ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இந்தியா திரும்பினார்.. சர்வதேச 6வது காமின்டர்ன் மாநாட்டு ஆவணங்களை ரகசியமாக இந்தியா கொண்டுவந்தார். துறைமுகத்திலேயே இந்திய வெள்ளை அரசின் சி.ஐ.டி கள் இவரை வெகுவாகச் சோதித்தனர். மார்க்ஸீய இலக்கியங்கள் தவிர அவர்களுக்கு ஒன்றும் கிடைக்கவில்லை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியுடன் தொடர்புகொண்டு கல்கத்தாவில் நடந்த கட்சியின் மத்தியக்குழுக்கூட்டத்தில் உறுப்பினர் என்ற முறையில் அனுமதிக்கப்பட்டு கலந்துகொண்டார். பம்பாயில் தொழிலாளர் குடியிருப்பில் வசித்துக்கொண்டு அவர்களுக்கு மார்க்ஸீயக் கல்வியை போதித்தார். .


இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சியின் வளர்ச்சி பிரிட்டீஷ் ஆட்சிக்கு ஆபத்து என எண்ணிக் கட்சியை ஒடுக்க முற்பட்டனர். எனவே மாட்சிமை தங்கிய மன்னராட்சியை கவிழ்க்க திட்டமிட்டனர் எனக்கூறி மீரத் சதிவழக்கு ஜோடிக்கப்பட்டது. பி.சி.ஜோஷி, மிசாபர் அஹமது, எஸ்.ஏ.டாங்கே, எஸ்.வி.காட்டே, எஸ்.எஸ்.மிராஜ்கர், ஜி. அதிகாரி உள்ளிட்ட 31 பேர்களைக்கைது செய்து மீரத் சிறையில் அடைத்தது. இவர்களுக்கு ஆதரவாக வாதிட மோதிலால் நேரு உள்ளிட்ட பலர் இவர்களை சிறையில் சந்தித்தனர். கடைசியில் 1933 மார்ச்மாதம் விடுதலை செய்தனர்.

ஏகாதிபத்திய அரசின் கொடுந் தாக்குதல்களால் கட்சியின் அணிகள் மிகவும் நிலைகுலைந்து போயிருந்தன. செயல்பட்ட அனைத்துக் கட்சி அணிகளையும் திரட்டி கட்சியின் மத்தியக் கமிட்டி கூடியது. அணிகளை ஒன்றுதிரட்டியதில் ஜி.அதிகாரி முக்கியப் பங்குவகித்தார். டாக்டர் ஜி.அதிகாரி பொதுச்செயலாளராகத்தேர்வு செய்யப்பட்டார். ஜி.அதிகாரி 1934 மே மாதம் கைது செய்யப்பட்டு பைகுல்லா சிறையிலும் அடுத்து பிஜப்பூர் சிறையிலும் அடைக்கப்பட்டார். 1936ஆம் ஆண்டு தலைமறைவாக இருந்த கம்யூனிஸ்ட் கட்சி, பி.சி.ஜோஷியைப் பொதுச்செயலாளராகத் தேர்ந்தெடுத்தது.

1943ல் பம்பாயில் நடந்த முதல் கட்சிக்காங்கிரஸில் இவர் பொலிட்பீரோ உறுப்பினரானார். 1946 பிப்ரவரியில் நடைபெற்ற கப்பற்படையினர் எழுச்சியின்போது பம்பாயில் தொழிலாளர், மற்றும் பொதுமக்களை அவர்களுக்கு ஆதரவாக திரட்டி செயலூக்கமிக்க பணியை ஆற்றினார். 1947 பிப்ரவரி ரூ மார்ச் மாதம் லண்டனில் நடந்த பிரிட்டீஷ் காலனி ஆதிக்கம் குறித்த பிரிட்டன் கம்யூனிஸ்ட்கட்சி மகாநாட்டில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதிநிதியாகக் கலந்துகொண்டார்.

இவர் கட்சியின் தோற்றம், வளர்ச்சி செயல்பாடுகள் பற்றிய வரலாற்று ஆவணங்களை மிக்க கவனமாகத் தொகுத்து கட்சிக்கு வழங்கினார். கடைசி காலத்தில் இவர் கட்சின் மத்திய கட்டுப்பாட்டுக்குழுவின் தலைவராக தேர்வு செய்யப்பட்டார். டாக்டர் கங்காதர அதிகாரி அவர்கள்1981 நவம்பர் 21ம் நாள் காலமானார். **டிசம்பர் 8ஆம் நாள் அவர் பிறந்தநாள்.** அவருக்கு செவ்வணக்கம் செய்வோம்.

-ஆர்.பாலசந்திரன்
தொடர்புக்கு: 9486207060



## ஏஐடியுசி தூய்மைப் பணியாளர்கள் ஊர்வலம் ஆர்ப்பாட்டம்




சாத்தூரில் ஏஐடியுசி தூய்மை பணியாளர்கள் ஊர்வலமாக சென்று மனு அளித்தனர்

விருதுநகர் மாவட்டம் சாத்தூரில் ஏஐடியுசி தூய்மைக் காவலர் மற்றும் உள்ளாட்சி பணியாளர்கள் சங்கம் சார்பில் படந்தால் விலக்கிலிருந்து மாவட்ட செயலாளர் மாரியப்பன் தலைமையில் ஊர்வலமாகச் சென்று ஆர்ப்பாட்டம் செய்து வட்டார வளர்ச்சி அலுவலரிடம் கோரிக்கை மனுவை அளித்தனர். பணிநிரந்தரம், கொரோனா நிவாரண நிதி, குறைந்தபட்ச சம்பளம் ரூ.16,000 உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி சிபிஐ மாவட்ட பொருளாளர் எஸ்.பழனிக்குமார், வட்ட செயலாளர் சுவாமிநாதன், நகர செயலாளர் ஜான்ராஜா, போக்குவரத்து செயலாளர் பிச்சைக்கனி ஆகியோர் பேசினார்கள்.

## ஏஐடியூசி ஆட்டோ தொழிலாளர் சங்க 23வது ஆண்டு பேரவை

மதுரை மாவட்ட ஏஐடியூசி ஆட்டோ தொழிலாளர் சங்கத்தின் பேரவை கூட்டம் மதுரையில் நடைபெற்றது. தமிழ்நாடு ஏஐடியூசி மாநில தலைவர் எஸ்.காசிவிஸ்வநாதன் கொடியேற்றி துவக்கி வைத்தார். மதுரை மாவட்ட ஆட்டோ தொழிலாளர் சங்க பொதுச்செயலாளர் எஸ்.சித்திக் தலைமை வகித்தார்.

தமிழ்நாடு ஏஐடியூசி ஆட்டோ தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளர் எம்.மாரியப்பன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் பா.காளிதாஸ், மதுரை மாவட்ட ஏஐடியூசி பொதுச்செயலாளர் கே.சேது, மற்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் எம்.எஸ்.முருகன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## அரசு குடியிருப்பு புதிய கட்டிடம் கட்டிக் கொடுக்க கோரிக்கை

மணப்பாறையில் சி.பி.ஐ.நகர குழு கூட்டம் நடைபெற்றது. நகரக் குழு உறுப்பினர் துரைசாமி தலைமை வகித்தார் நடைபெற்ற வேலைகள் குறித்து நகர செயலாளர் ஜனசக்தி உசேனும் புறநகர் மாவட்ட செயலாளர் ராஜ்குமார் அரசியல் நிலை குறித்தும் மாவட்ட துணைச் செயலாளர் பழனிச்சாமி மாவட்ட குழு முடிவுகள் குறித்தும் உரை நிகழ்த்தினார்கள்.

மணப்பாறை நகரில் உள்ள அரசு குடியிருப்பு அடுக்குமாடி கட்டடம் 50 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது, தங்குவதற்கு தகுதி அற்ற நிலையில் இடித்துவிட்டு புதிய அடுக்குமாடி குடியிருப்பை கட்டிக் கொடுப்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நகர்மன்ற உறுப்பினர்கள் தங்கமணி, மனோன்மணி, சவுக்கத் அலி, சுப்ரமணியன், நல்லுச்சாமி, ரஹ்மத்துனிஷா, கவிதா செல்வம், ஜெயலட்சுமி, மரியராஜ், தங்கராஜ், லாரன்ஸ், மைக்கேல், கண்ணன், ராஜா, சரவணன் உட்பட நகர குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## கிளைச் செயலாளர்கள் கூட்டம்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திருச்சி மாநகர் மாவட்டத்தில் உள்ள கட்சி கிளை செயலாளர்கள் கூட்டம் திருச்சி மாவட்ட அலுவலகத்தில் மாவட்ட துணைச் செயலாளர் சி. செல்வகுமார் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மத்திய கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் எம்.செல்வராஜ், ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் க. சுரேஷ் ஆகியோர் கலந்து கொண்டு விரிவாக உரையாற்றினார்கள். கூட்டத்தில் மாநகர் மாவட்ட செயலாளர் எஸ்.சிவா, மாவட்ட பொருளாளர் எஸ். சண்முகம் மற்றும் பகுதி குழு, இடைக்குழு செயலாளர்கள், 34 கிளை செயலாளர்கள் உள்ளிட்ட 42 தோழர்கள் பங்கேற்றனர்.

### வினாடி - வினா விடைகள்

1. 5 லட்சம் கிலோ
2. 910 மீட்டர் / நொடி (910 mps)
3. மின்னலால் வெப்பமடையும் காற்றின் விரைவான ஏற்ற இறக்கத்தால் ஏற்படும் ஒலி
4. வளிமண்டல மாசுபாட்டால் மழைப் பொழிவு அமிலமாகிறது.
5. அமேசான் மழைக்காடு
6. அமெரிக்கா

# ஆடை கட்டுப்பாட்டை எதிர்த்து கண்டன ஆர்ப்பாட்டம்




உலகின் பாரம்பரிய சின்னமான தஞ்சாவூர் பெரிய கோயிலில் ஆடை கட்டுப்பாடு அறிவித்ததை அறநிலையத்துறை திரும்ப பெற வேண்டும்! தஞ்சையில் இடதுசாரிகள் பொது மேடை கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்து சமய அறநிலையதுறையும், தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானமும் இணைந்து தஞ்சாவூர் பெரிய கோயிலில் நுழைவதற்கு ஆடை கட்டுப்பாடு குறித்து அறிவிப்பு பலகை ஒன்றை டிரஸ் கோடு என்ற பெயரில் வைக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பில் ஆண்கள் வேட்டி சட்டை, பேண்ட் சட்டை அணிந்து தான் வர வேண்டும், பெண்கள் புடவை ஜாக்கெட், பாவாடை தாவணி, துப்பட்டா சுடிதார் அணிந்து வரவேண்டும் என குறிப்பிட்டு அறிவிப்பு பலகை வைக்கப்பட்டுள்ளது. அறிவிப்பை திரும்ப பெற வேண்டும் என வலியுறுத்தி இடதுசாரிகள் பொதுமேடை சார்பில் தஞ்சாவூர் ரெயிலடி முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் வெ.சேவையா தலைமை வகித்தார். மக்கள் அதிகாரத்தின் மாநில பொருளாளர் காளியப்பன் ஆர்ப்பாட்டத்தினை துவக்கி வைத்து பேசினார். ஆர்ப்பாட்டத்தில் இடதுசாரிகள் பொது மேடை ஒருங்கிணைப்பாளர் துரை.மதிவாணன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநகர செயலாளர் எம்.வடிவேலன், நிர்வாகிகள் குருசாமி, அன்பு, கரிகாலன், ராஜா, விடுதலை சிறுத்தைகள் கட்சி நிர்வாகிகள் தமிழ்முதல்வன், சாமி, கோதண்டராமன், வெற்றி,சி பி எம் எல் மக்கள் விடுதலை மாவட்ட செயலாளர் இரா.அருணாச்சலம், தமிழ்த்தேச மக்கள் முன்னணி மாவட்ட செயலாளர் அருண் சோரி, விடுதலைதமிழ்ப் புலிகள் கட்சியின் மாநகர செயலாளர் தமிழ் ,ஆதித்தமிழர் பேரவை மாநில துணைத்தலைவர் எம்.பி நாத்திகன், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்க மாவட்ட தலைவர் வி.கல்யாண சுந்தரம், உள்ளிட்டோர் பங்கேற்றனர். உலகத் தமிழர் பேரமைப்பின் துணைத் தலைவர் அயனாபுரம் சி.முருகேசன் முடித்து வைத்தார். மக்கள் அதிகாரம் மாவட்ட செயலாளர் தேவா நன்றி கூறினார்.

# 39 வது தேசிய புத்தக கண்காட்சி



நேஷனல் புக் ட்ரஸ்ட் புதுடெல்லி, மாவட்ட நூலக ஆணை குழு கோவை, நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் கோவை ஆகிய அமைப்புகள் இணைந்து நடத்தும் 38 வது தேசிய புத்தக கண்காட்சி தொடக்க விழா, கோவை டவுன்ஹால் மாவட்ட நூலக ஆணைக்குழு வளாகத்தில் துவங்கப்பட்டது.

கோயமுத்தூர் மாநகராட்சி மாண்புமிகு துணை மேயர் ஆர்.வெற்றிச்செல்வன் ரிப்பன்வெட்டி நிகழ்ச்சிகளை துவக்கி வைத்தார். தமிழ்நாடு கலைஇலக்கியப் பெருமன்றத்தின் மாவட்ட பொதுச் செயலாளர் ப.பா. ரமணி தலைமை தாங்கினார்.

மாவட்ட நூலக அலுவலர் கே.ராஜேந்திரன், தமிழ்நாடு கலைஇலக்கியப் பெருமன்றத்தின் மாவட்டத் துணைத் தலைவர் கே.புருஷோத்தமன், பாரதியார் பல்கலைக்கழகம் வாசகர் வட்டம் பி.மகேஸ்வரி, மாவட்ட நூலக ஆணைக்குழு கண்காணிப்பாளர் பா.ஜெயகாந்தி, எழுத்தாளர் பா.மீனாட்சிசுந்தரம், நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் மண்டல மேலாளர் ஆர்.ரங்கராஜன், கோவை கிளை மேலாளர் எஸ்.குணசேகர், மாமன்ற உறுப்பினர்கள் மல்லிகா புருஷோத்தமன், சாந்தி சந்திரன், எம்.டி.மோகன், கே.ஜி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி தமிழ் துறை பேராசிரியர் கோ.ஜெகதீஸ்வரி, கே.பி.ஆர். கலை அறிவியல் கல்லூரி தமிழ் துறை தலைவர் பி.அனுராதா மற்றும் எழுத்தாளர்கள், கலைஞர்கள், கவிஞர்கள் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

இந்த புத்தகக் கண்காட்சியில் வாசகர்களுக்கு 10 சதம் முதல் 20 சதம் வரை கழிவு வழங்கப்படுகிறது. கொங்கு மண்டல எழுத்தாளர்கள் வாசகர்கள் இந்த புத்தக கண்காட்சியில் பங்கேற்று சிறப்பித்தனர். இதில் கலை இலக்கியம், பண்பாடு, வரலாறு, திறனாய்வு, அரசியல், அறிவியல், சூழலியல், வேளாண்மை மருத்துவம், கல்வியியல், மார்க்சியம், பெரியாரியம், அம்பேத்கரியம் நூல்கள் மற்றும் பொது அறிவு, பாரதியார், பாரதிதாசன், திருக்குறள், சுய முன்னேற்றம் மற்றும் சிறார் நூல்கள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான தலைப்புகளில் ஆயிரக்கணக்கான தமிழ் மற்றும் ஆங்கில நூல்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

# ஸ்ரீரங்கம் கிழக்கு வாசல் கோபுரத்தை சரிசெய்ய அகல் விளக்கு ஏந்தி ஆர்ப்பாட்டம்!




ஸ்ரீரங்கம் கோவிலினுடைய கிழக்கு வாசல் கோபுரம் இடிந்து விழுந்து 6 மாதம் ஆகியும் சரி செய்யப்படாததைக் கண்டித்தும், உடனடியாகசரிசெய்ய வலியுறுத்தியும், மக்கள் மற்றும் போக்குவரத்துக்கு இடையூறை ஏற்படுத்தும் சாத்தாரா வீதி பூ மார்க்கெட்டை புதிதாக கட்டி முடிக்கப்பட்ட இடத்திற்கு மாற்ற வலியுறுத்தியும், மேலும் ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனையில் மருத்துவர்கள், செவிலியர்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்தக் கோரியும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்ரீரங்கம் பகுதி குழு சார்பில் பகுதி செயலாளர் ச.பார்வதி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் எஸ். சிவா, ஏஐடியுசி பொதுச் செயலாளர் க.சுரேஷ், பொருளாளர் ராமராஜ், மாணவர் பெருமன்ற மாநில பொருளாளர் க.இப்ராகிம், பொன்மலை பகுதிச் செயலாளர் ராஜா, மாவட்ட குழு உறுப்பினர் கருணாகரன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். இறுதியாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டப் பொருளாளர் சொக்கி.சண்முகம் நன்றி கூறினார். மேலும் விவசாய சங்க நிர்வாகி மணி மற்றும் மாதர் சங்க நிர்வாகிகள் உள்ளிட்ட 80க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

# அம்பேத்கர் 67வது நினைவு நாள் நிகழ்ச்சிகள்

அண்ணல் அம்பேத்கரின் 67வது நினைவு நாளை முன்னிட்டு தமிழ்நாடு முழுவதும் அவருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது



**திருவள்ளூர்:** அண்ணல் அம்பேத்கர் நினைவு நாளை முன்னிட்டு செங்குன்றம் பேருந்து நிலையம் அருகில் உள்ள சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. இதில் தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் திருவள்ளூர் மாவட்ட செயலாளர் என். எஸ். பிரதாப் சந்திரன், செங்குன்றம் சிறுகடை வியாபாரி சங்கத்தினுடைய செயலாளர் ஆதம், ஒடுக்கப்பட்டோர் வாழ்வு இயக்கத்தின் தலைவர் யோவான், ஞாயிறு எஸ். உதயன், ஊமைகளின் குரல் ஆசிரியர் ஆர். சக்கரபாணி, முனுசாமி ஆசிரியர் உள்ளிட்ட ஏராளமான பங்கேற்றனர்.

**அரியலூர்:** மாவட்டத் தலைநகர் அரியலூர் நகராட்சி அலுவலக வளாகத்திலிருந்து ஏஐடியுசி சுகாதார தொழிலாளர்கள் அம்பேத்கர் திருவுருவ படத்துடன் சங்கத் தலைவரும் உள்ளாட்சி தொழிலாளர் சம்மேளன மாநில செயலாளருமான த.தண்டபாணி தலைமையில் ஊர்வலமாக வந்து பேருந்து நிலையம் அருகேயுள்ள அம்பேத்கர் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். நிகழ்ச்சியில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அரியலூர் ஒன்றிய செயலாளர் டி. ராயதுரை, நகராட்சி டி.விஜி, நாகராஜ், வேல்முருகன் மேஸ்திரி கு.சிவஞானம், ஐ. உஷா, ரா. ராணி, ரா.தனலெட்சுமி, வி.செல்வராணி, எஸ். கலா, ஜெ. வாலாம்பாள், ஏ. செல்வி, நீ.சூர்யா, பெ.அஞ்சலை, உட்பட 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

**திருவாரூர்:** திருவாரூர் தலைமை அஞ்சலக ஊழியர்களால் கடைபிடிக்கப்பட்ட நினைவஞ்சலி கூட்டத்திற்கு திருவாரூர் தலைமை அஞ்சலக அதிகாரி ஆர்.சரஸ்வதி தலைமை தாங்கினார். உதவி அஞ்சலக அதிகாரி கே.மாரியம்மாள் மற்றும் கணக்கு பிரிவு அதிகாரி எம்.தியாகராஜன் முன்னிலை வகித்தார்கள். ஓய்வுபெற்ற அஞ்சலக காப்பாள அதிகாரி வீ.தர்மதாஸ் "இந்திய மக்களின் இதயங்களில் அம்பேத்கர்" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் அஞ்சலக எழுத்தா;கள் பி.நதிஸ்குமார், எஸ்.நித்தியா, எம்.மகாலட்சுமி, எஸ்.பானுமதி, எஸ்.விஷ்ணுபிரியா மற்றும் ஏராளமான தபால்காரர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

**மங்களூர்:** இன்று புரட்சியாளர் அண்ணல் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு மங்களூர் ஒன்றியம் எழுத்தூர் கிராமத்தில் உள்ள அவரது திரு உருவ சிலைக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கிளை செயலாளர் என். பெரியசாமி தலைமையில் மங்களூர் ஒன்றிய செயலாளர் எம் நிதிஉலகநாதன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் ஆர் சுப்பிரமணியன் எழுத்தூர் கிளை தோழர்கள் எம்.சிவப்பிரகாஷ்,எழிலரசன்,துரை. செந்தில்,துரை. பாஸ்கர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**கோவை:** வடகோவை மத்திய உணவுக் கழகம் வளாகத்தில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில பொருளாளர் எம்.ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் சட்ட மேதை பி.ஆர்.அம்பேத்கருக்கு கோவை மாநகரில் பொது இடத்தில் சிலை இல்லை. எனவே, ஒவ்வொரு ஆண்டும் அம்பேத்கரின் நினைவு நாள் மற்றும் பிறந்தநாள் வருகிற போது மத்திய உணவு கழகம் வளாகத்திற்கு வந்து அங்குள்ள சிலைக்கு மாலை அணிவிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆண்டுதோறும் உணவுக் கழக நிர்வாகத்தினருடன் பிரச்சனைகள் ஏற்படுகின்றன.

எனவே, அம்பேத்கருக்கு கோவையில் நீதிமன்றங்கள் வளாகத்தில் அல்லது அதற்கு அருகில் சிலை அமைக்கப்பட வேண்டும்.

இந்த நிகழ்ச்சியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கோவை மாவட்ட செயலாளர் சி.சிவசாமி ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் கோவை மாவட்ட செயலாளர் ஏ.அசரப் அலி, மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் கே எம் செல்வராஜ், மாவட்டத் துணைச் செயலாளர்கள் ஜே.ஜேம்ஸ், எம்.குணசேகர், மாவட்ட பொருளாளர் சி.தங்கவேல், வழக்கறிஞர் கே.சுப்பிரமணியம், மாமன்ற உறுப்பினர் சாந்தி சந்திரன், மேற்கு மண்டல செயலாளர் என்.சந்திரன், கே.ஆர்.தங்கராஜ், ஜீவா, மத்திய மண்டல துணை செயலாளர் ஏ.பி.மணிபாரதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

சூலூர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகம், இருகூர் மற்றும் வெங்கடாபுரம் பூபேஷ் குப்தா படிப்பகம் ஆகிய இடங்களிலும் ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் சார்பில் அம்பேத்கர் படங்கள் வைத்து மாலை அணிவித்து புகழ் அஞ்சலி செலுத்தப்பட்டது.

**தர்மபுரி:** தமிழ்மாநில விவசாய தொழிலாளர் சங்க தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி ஒன்றியம் இலளிகம் கிராம சங்கம் அண்ணல் அம்பேத்கார் நினைவு தினத்தினை சட்ட பாதுகாப்பு நாளாக கடைப்பிடித்தது,

சங்க இலளிகம் கிளை செயலாளரும் மாநில பொதுக்குழு உறுப்பினர் அலமேலுஎத்துராஜ் தலைமையில் சங்க ஒன்றிய தலைவர் எல் சி கிருஷ்ணன் இவிதொ கொடியை ஏற்றி வைத்தார். சங்க மாநில செயலாளரும் தேசியக்குழு உறுப்பினருமான ஜெ பிரதாபன் சிறப்புரையாற்றினார் நிகழ்சியில் மாவட்டக்குழு உறுப்பினர்கள் காளியம்மாள்,கோவிந்தம்மாள்,ராணி மற்றும் எல் பி நாகராஜன் , வடிவேல்,பொண்னுசாமி ஆகியவர்கள் கலந்துக் கொண்டனர் இறுதியில் எல் ஆர் அபிமன்னன் நன்றியுரையாற்றினார்,

**திண்டுக்கல்:** அண்ணல் அம்பேத்கரின் நினைவு நாளை முன்னிட்டு வேடசந்தூரில் அமைந்துள்ள அண்ணலின் உருவச்சிலைக்கு வேடசந்தூர் ஒன்றிய செயலாளர் சி. எஸ். முத்துச்சாமி மாலை அணிவித்தார். இதில் மாவட்ட செயற்குழு உறுப்பினர் எம். சந்திரசேகரன், ஒன்றிய குழு உறுப்பினர்கள் எம். எம். பொன்னுசாமி எம்.பி., கனிவேல், எஸ். பழனிச்சாமி, நகர் கிளைச் செயலாளர் ரேஜிஸ், பிச்சை இஸ்மாயில் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**மதுரை:** மதுரையில் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் நினைவுகளை போற்றும் வகையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, ஏஐடியூசி சார்பாக அம்பேத்கர் உருவச்சிலைக்கு கட்சியின் சார்பாக மாநில கட்டுப்பாட்டு குழுவின் ப.காளிதாஸ், புறநகர் மாவட்ட செயலாளர் முத்துவேல், மாநகர் மாவட்ட செயலாளர் எம்.எஸ்.முருகன், மாநகர் மாவட்ட துணை செயலாளர் சி.தாமஸ், ஏஐடியூசியின் சார்பாக மாவட்ட தலைவர் எம்.நந்தாசிங், மாவட்ட செயலாளர் கே.சேது , மாதர் சம்மேளன மாவட்ட செயலாளர் பா.ராஜலெட்சுமி, கட்சியின் மதுரை மாநகர பகுதி செயலாளர்கள் எம்.இருளாண்டி, ரவிச்சந்திரன், ஜனசக்தி என்.ஜீவா, சமாதான ஒருமைப்பாட்டு கழகத்தின் சார்பாக வீரணசிங்கம், விவசாயிகள் சங்கத்தின் சார்பாக சந்தானம் பீபீகுளம் கணேசன், வீரமாகாளி உட்பட பலர் கலந்து கொண்டனர்.



## நகராட்சியுடன் சுகாதார தொழிலாளர்கள் பேச்சுவார்த்தை

அரியலூர் நகராட்சியில் துப்புரவு பணி செய்யும் நிரந்தர மற்றும் ஒப்பந்த துப்புரவு தொழிலாளர்களின் கோரிக்கைகள் மீது பல கட்டங்களில் நகராட்சி நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தை, போராட்ட நடவடிக்கைகள் காரணமாக 29.11.2023 அரியலூர் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற பேச்சு வார்த்தையில், நகராட்சி ஆணையர் (கூ. பொ ) ர. அசோக்குமார், துப்புரவு ஆய்வாளர் தர்மராஜன், கிளர்க் மகாராஜன், தொழிற்சங்கம் சார்பாக சங்கத் தலைவரும் தமிழ்நாடு ஏஐடியுசி உள்ளாட்சித்துறை பணியாளர் சம்மேளன மாநில செயலாளர் த.தண்டபாணி, சங்க செயலாளர் ரெ.நல்லுசாமி, துணைத் தலைவர் செ.மாரியப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பல்வேறு கோரிக்கைகளை தீர்வு காணுமாறு பேச்சுவார்த்தையில் வலியுறுத்தப்பட்டது. விரைந்து நடவடிக்கை மேற்கொள்வதாக திரு நகராட்சி ஆணையர் கூறினார். கோரிக்கைகள் தீர்வு காணும் வரை தொழிலாளர்களின் போராட்டம் ஓயாது என்று தெரிவிக்கப்பட்டது.

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் இராமநாதபுரம் மாவட்ட குழு கூட்டம்.




பரமக்குடியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் இராமநாதபுரம் மாவட்ட குழு கூட்டம் மாவட்ட குழு உறுப்பினர் ஜிலோகநாதன் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் என் எஸ் பெருமாள் வேலை அறிக்கையினை முன்வைத்து பேசினார்.

தேசிய கவுன்சில் உறுப்பினர் மேனாள் சட்டமன்ற உறுப்பினர் தோழர் டி ராமசாமி அவர்கள் மாநில நிர்வாகக் குழு முடிவினை விளக்கிப் பேசினார். 2024 கட்சி உறுப்பினர் பதிவு மற்றும் புதுப்பித்தல், சேர்த்தல் பணிகளை வருகிற டிசம்பர் 31 க்குள் நிறைவு செய்ய வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பயிர் காப்பீடு திட்டத்தை முறையாக ஆராய்ந்து அதற்கான இழப்பீட்டுத் தொகையினை வழங்க வேண்டும். கமுதி தாலுகாவில் 100 நாள் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தில் முறைகேடுகள் கலையப்படவேண்டும்.

பரமக்குடி நகராட்சி பகுதிகளில் சாலைகள் மிக மோசமான பாதிக்கப் பட்டு இருப்பதால் சரி செய்திட வேண்டும். சேதமடைந்துள்ள புறவழிச்சாலையை சீர்படுத்த வேண்டும்.

கைத்தறி நெசவாளர்களுக்கான ஓய்வூதிய உயர்வுத் தொகையினை முன் தேதி இட்டு வழங்க வேண்டும்.

உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### மக்கள் சிந்தனைப் பேரவையின் சார்பில்

## 26 ஆவது பாரதி விழா

மக்கள் சிந்தனைப் பேரவையின் சார்பில் 26 ஆம் ஆண்டு பாரதி விழா டிசம்பர் 11 ஆம் தேதி திங்கள்கிழமை மாலை 6 மணிக்கு ஈரோடு கொங்கு கலையரங்கில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் பாரதியியல் ஆய்வாளரும் வரலாற்றியல் வல்லுனருமான பேராசிரியர் ஆ.இரா. வெங்கடாசலபதிக்கு 'பாரதி விருது' வழங்கப்படவுள்ளது. இவர் சமூக வரலாறு, பண்பாட்டு வரலாறு , அறிவாண்மை வரலாறு, இலக்கிய வரலாறுபோன்ற பன்முக வரலாற்று ஆய்வுகளை மேற்கொண்டு தமிழ் வரலாற்றுக் களத்திற்கு வலு சேர்த்தவர். பாரதி குறித்த இவரது புதிய தேடலும் கண்டுபிடிப்புகளும் பாரதியியலுக்கு பெரும் பங்களிப்பாக விளங்குகிறது. இந்நிகழ்வுக்கு அக்னி ஸ்டீல்ஸ் நிறுவனத்தின் இயக்குனர் கே. தங்கவேலு தலைமை வகிக்கிறார்.

மக்கள் சிந்தனைப் பேரவையின் தலைவர் த. ஸ்டாலின் குணசேகரன் விழா அறிமுகவுரை நிகழ்த்துகிறார். கருங்கல்பாளையம் நூலகத்திலிருந்து புறப்படும் பாரதி ஜோதியை வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் பேராளர் கொழந்தவேல் இராமசாமி ஏற்றி வைத்து அணிவகுப்பைத் தொடங்கி வைக்கிறார். சொற்பொழிவாளர் பேராசிரியர் த. ராஜாராம் புதுமைப்பித்தன் படத்தைத் திறந்து வைத்து இலக்கியவுரையாற்றுகிறார். பேராசிரியர் சிற்பி பாலசுப்பிரமணியம் பாரதி விருதை வழங்கி விழாச் சிறப்புரையாற்றுகிறார். விருதாளர் ஆ.இரா. வெங்காடசலபதி ஏற்புரை வழங்குகிறார். பேரவையின் செயலாளர் ந. அன்பரசு நன்றியுரையாற்றுகிறார். முன்னதாக விழாவன்று மாலை 4 மணிக்கு கருங்கல்பாளையம் நூலகத்திலிருந்து ' பாரதி ஜோதி ' யை ஏந்தியவாறு அணிவகுப்பு நகரில் முக்கிய வீதிகளை வலம் வந்து விழா அரங்கம் வந்தடையவுள்ளது. இந்நிகழ்வு மாநிலம் தழுவிய ஒன்றாக நடைபெறுவதால் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் பாரதி அன்பர்கள், இலக்கியவாணர்கள் , படைப்பாளிகள், ஆர்வலர்கள் என அனைத்துத் தரப்பினரும் பங்கேற்று சிறப்பிக்குமாறு மக்கள் சிந்தனைப் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

## இந்த வார தம்பிக்குறள்

### 142. அறிவுக்கடி அறிந்தேன்

**அறிவுக் கடிநான் அறிந்துகொண்டேன் அ:து
பொருண்மை முதன்மை அறம்.**

பொருள்முதல் கொள்கைதான், முதன்மையான நல்லறம், இது அறிவுக்கு ஆணிவேர் என்பதனை நான் அறிந்து கொண்டேன்.

**இருளி லிருந்தெழுந்து வந்தேன் பொருண்மை
ஒளியால் புவியில் புரிந்து.**

பொருள் முதல் கொள்கை என்ற ஒளிவெளிச்சத்தில் தான், அறியாமை இருளில் இருந்து மீண்டெழுந்து வந்தேன்.

# நூல் நயம்

## கம்யூனிசம் தோற்றுவிட்டதா?



சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னால், உலகத்தில் கம்யூனிசம் தோற்றுவிட்டது என்று முதலாளித்துவ சிந்தனையாளர்கள் ஓங்கி முழங்கத் தொடங்கினர். உலகத்தை உய்விக்க வந்த ஒரு தத்துவமே மார்க்சியம்.

மார்க்சியம் என்பது சமூக விஞ்ஞானம். மற்ற ஏனைய விஞ்ஞானங்களை போலவே மார்சியம் ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டது. இயற்கை விஞ்ஞானத்தை ஏற்றுக் கொள்ளும் முதலாளித்துவவாதிகள். அதை ஆதாரமாக வைத்து எழுதப்பட்ட மார்க்சியத்தை தோற்றுப் போன தத்துவம் என்று கூறுவது நகைப்புக்குரியது அல்லவா?

உலகத்தில் இன்று சோஸலிச முகாம்கள் ஏதும் இல்லை என்பது உண்மைதான். ஆனால் இந்த பின்னடைவானது மார்சியம் அடுத்த கட்டத்திற்கு செல்வதற்கான ஒரு தேவையாய் அமைந்துள்ளது என்பதே உண்மை. மார்க்சியம் குறுகிய தேசிய வெறியை தவிர்த்து, பரந்த சர்வதேச பார்வையை நமக்கு வழங்குகிறது. மார்க்சியத்தை நடைமுறைப்படுத்துவதில் அதன் இயக்கவியல் பொருள் முதல்வாத கண்ணோட்டம் அவசியம் தேவை.

சோவியத் ஆட்சியை முறியடிப்பதில் உலகில் உள்ள அனைத்து ஏகபோக நாடுகளும் ஒன்று சேர்ந்து நின்றன. இவற்றையெல்லாம் முறியடித்துத் தான் சோவியத் யூனியன் நிலைத்தது. இந்த சமயத்தில் தான் செஞ்சீன புரட்சியும் நடைபெற்றது. சீனமும் கம்யூனிஸ்ட்களின் ஆட்சிக்கு வந்தது.


இரண்டாம் உலக மகா யுத்தத்தில் பாசிச சக்திகளின் அதிகாரத்திற்கு உலகம் செல்லாமல் தடுத்தது சோவியத் யூனியனின் செம்படையே. எனவே உலகம் பாதுகாக்கப்பட வேண்டும் என்றால் கம்யூனிசம் பாதுகாக்கப்பட வேண்டும். சோஸலிச முகாம்களான சோவியத் யூனியன் முதலான சோஸலிச நாடுகள் தற்காலிக பின்னடைவை சந்தித்தாலும், வெகு விரைவில் அவை மீண்டு எழும். கம்யூனிசம் ஒருபோதும் தோற்காது. ஏனெனில் அது சமூக விஞ்ஞானம் என்கிற கருத்தை மிக அழுத்தமாக வலியுறுத்தி இந்நூலில் எழுதியுள்ளார் எழுத்தாளர் இரா.பாரதிநாதன். அனைவரும் இந்நூலை வாங்கி படிக்கவும்.

– இன்சுவை பாரதி

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : இரா. பாரதிநாதன் | |
| பக்கம் | : 104 | விலை: 120 |
| வெளியீடு | : புரட்சி பாரதி பதிப்பகம், மோரை, நாகூர் ஆண்டவர் நகர், ஆவடி, சென்னை –55 | |

## ஆக்காட்டி

எளிய மக்களின் பிரச்சனைகளை தொடர்ச்சியாக உரத்து பேசி வரும் எழுத்தாளர் இரா. பாரதிநாதன். காவிரிபடுகை இன்று சந்தித்து வரும் பிரச்சனைகளை ஆக்காட்டி என்கிற இந்த நாவலில் விவரித்துள்ளார்.



ஏழை விவசாயிகளுக்கும், எளிய விவசாய தொழிலாளர்களுக்கும் வாழ்வின் அடிப்படை ஆதாரமாக விளங்கும் காவிரி டெல்டா இன்று கடும் நீர் நெருக்கடியில் சிக்கி தவிக்கிறது. நீதிமன்றங்களால் விசாரித்து தீர்ப்பளிக்கப்பட்ட நமக்கு உரிய பாங்கான காவிரி நீரை வழங்க வேண்டிய கர்நாடகா அரசு. உரிய நேரத்தில், உரிய அளவிற்கு வழங்காமல் அடம்பிடித்து காவிரி பாசனப்பகுதிகளை பாலைவனமாக போவதற்கு ஒரு காரணமாக இருந்து கொண்டிருக்கிறது. காவிரி நீருக்காக ஆண்டுதோறும் காவேரி பாசன விவசாயிகள் போராட வேண்டிய சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளனர். கர்நாடகாவின் காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில் அடை மழை பொழிந்து வெள்ளம் கரை புரண்டு ஓடுகிற சமயங்களில் தான் காவிரியில் உரிய நீர் திறந்து விடப்படுகிறது. காவிரியின் கடைமடை பகுதி வெள்ள வடிகால் பகுதியாக தான் கர்நாடகாவால் பாவிக்கப்படுகிறது. தண்ணீர் இல்லாமலும் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். வெள்ளை நீராலும் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள்.

இந்த சூழ்நிலைகள் ஒருபுறம் என்றால், காவிரி பாசனப் பகுதியை பாலைவனமாக்கும் மேலும் பல்வேறு திட்டங்களை நம்மை ஆளும் முதலாளித்து அரசாங்கங்கள் தீட்டிக் கொண்டிருக்கின்றன. அவற்றில் ஒன்றுதான் மீத்தேன், ஹைட்ரோ கார்பன் உள்ளிட்ட எரிவாயு படுக்கைகள் அமைப்பதற்கான திட்டங்கள் மற்றும் நிலக்கரி சுரங்கம் தோண்டும் ரகசிய முயற்சிகள் போன்ற கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு ஆதரவான இந்த திட்டங்களால் காவிரி விவசாயிகளின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி இருக்கிறது.

இவையெல்லாம் சோறுடைத்த சோழவள நாட்டிற்கு வந்த சோதனைகள். இவற்றை எதிர்த்தும் விவசாயிகள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அற்ற குளத்து அருநீர் பறவையாய் இல்லாமல், இந்த மண்ணோடு ஒட்டிய ஆம்பல் போல் ஒட்டி இருக்கும் விவசாயியின் தவிப்பே இந்த நாவல். நாகரிக மோகத்தால் நகர்புறங்களை நோக்கி செல்பவர்களுக்கு மத்தியில். நமது மண்ணையும், அதன் வளத்தையும். இயற்கையும், விவசாயத்தையும், விவசாய நிலத்தையும் காப்பதற்காக போராடுகிற எளிய மனிதர்களின் கதை இது.

–சமரன்

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : இரா. பாரதிநாதன் | |
| பக்கம் | : 280 | விலை: 360 |
| வெளியீடு | : புரட்சி பாரதி பதிப்பகம், மோரை, நாகூர் ஆண்டவர் நகர், ஆவடி, சென்னை –55 | |

# மார்க்சீய இலக்கியப் பேராசிரியர் நா.வானமாமலை

**நாட்டுப்புறவியல், நாட்டார் வழக்காற்றியல் என்ற வார்த்தைகளைக் கேட்டவுடனே நம் நினைவுக்கு உடன் வருவது பேராசிரியர் நா. வானமாமலை.**



ந.சேகரன்

நாட்டார் வழக்காற்றியல் துறையில் நா. வானமாமலை மகத்தான பங்களிப்பு செய்த, தூண்டுகோலாக இருந்தவர், அப்போதைய இந்திய கம்யூ.கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் பி.சி.ஜோசி என்பது குறிப்பிடத்தக்கதாகும். நாட்டார் வழக்காற்றியல் இலக்கியத் துறையில் அபாரமான முத்துக்களை சேகரித்து தொகுத்து என்றும் மணக்கும் மாலையாக வழங்கியவர் பேரா. நா.வானமாமலை.

1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் முதன் மாநில மாநாட்டின் முடிவுக்கிணங்க, முதன்முதலாக உருவாக்கப்பட்ட நாட்டார் இலக்கியக்குழுவின் பொறுப்பை நா. வானமாமலை ஆர்வத்துடன் ஏற்றுக் கொண்டார். இந்தப் பொறுப்பை செவ்வனே செய்யும் வகையில, அப்போதைய திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் அயராது பயணம் செய்து கிராம மக்களைச் சந்தித்து நாட்டார் பாடல்களைச் சேகரிக்க ஆரம்பித்தார். அதன் விளைவாக நா.வானமாமலை படைத்த இரு நூல்கள் தான். 1) தமிழ்நாட்டுப் பாமரர் பாடல்கள் 2) தமிழர் நாட்டுப் பாடல்கள்.



கிராமியப் பாடல்கள், பாமரர் வழக்காற்றுக் கதைகள் மீது அதிக நாட்டம் கொண்ட நா.வானமாமலை, '' சரஸ்வதி'' இலக்கிய இதழில் முத்துப்பட்டன் என்ற கதையையும், தாமரை இதழில் சின்னத்தம்பி என்ற ''வில்லுப்பாட்டையும் வெளியிட்டார். இந்த கட்டுரையில் வில்லுப்பாட்டு என்பதன் விளக்கம். அதன் வரலாறு, கையாளப்பட்ட பண்பாட்டுக்கூறுகள் ஆகியவை விரிவாக எடுத்துரைத்துள்ளார்.

பேரா.நா.வானமாமலை தனது வாழ்க்கையினை தத்துவார்த்த பணி, இலக்கியப் பணி, அரசியல் பணி என அயராது மானுட நேயத்தை மையமாகக் கொண்டே பயணித்தார்.

### நா.வானமாமலை பிறப்பும் படிப்பும்

திருநெல்வேலி மாவட்டம் நாங்குனேரியில் நாராயணன் தாதர், திருவேங்கடத்தம்மாள் தம்பதியருக்கு மூத்த மகனாக 1917 ஆண்டு டிசம்பர் 7 ந்தேதி பிறந்தவர்தான் நம் நா.வானமாமலை.

### கம்யூ. கட்சி போராட்டங்களில் பங்கேற்பு

பொதுவுடைமைக்கருத்துக்களால் பெரிதும் ஈர்க்கப்பட்ட நா.வானமாமலை, அப்போதுகம்யூ. ளோடு இயங்கிய காங். சோஷலிஸ்ட் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார். 1948,1970 இருமுறை கம்யூ. இயக்கப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை ஏகியுள்ளார். 1950 ஆண்டில் இந்திய கம்யூ.கட்சியினர் மீது தொடுக்கப்பட்ட அடக்குமுறைக்கு எதிராக நடைபெற்ற போராட்டத்தின் விளைவாக தூத்துக்குடி மீளவிட்டானில் சரக்கு ரயில் கவிழ்க்கப்பட்டது. நெல்லை சதி வழக்கு என அழைக்கப்பட்ட இந்த வழக்கில் கம்யூ. தலைவர் பாலதண்டாயுதம், நல்லகண்ணு, உள்ளிட்ட தலைவர்கள் கைதாயினர். விசாரணை என்ற பெயரில் பேரா நா.வா. கைது செய்யப்பட்டு பின் விடுதலையானார்.

நிலமீட்சிப் போராட்டத்தில் பங்கேற்ற நா.வா. ஒரு மாதத்திற்கு மேல் சிறையிலிருந்தார். அந்தகாலத்தில்தான் திவான் ஜர்மன்தாஸின் ''மகாராஜ'' என்ற இந்திய சமஸ்தான மன்னர்களைப்பற்றிய நூலை மொழி பெயர்த்தார்.

### இலக்கியப் பணிகள்

நா.வானமாமலையின் இலக்கியப்பணிகளை 7 வகைகளில் கூறுபடுத்தலாம்.

1)படைப்பாக்கப் பணி. 2) தமிழ்நாட்டு வரலாறு பண்பாடு பற்றிய ஆராய்ச்சிப் பணி. 3) மொழிபெயர்ப்புப் பணி 4) நாட்டுப்புறப் பாடல் தொகுப்பும் ஆராய்ச்சியும் 5) இலக்கிய விமர்சனப் பணி.6) பதிப்புப் பணி. 7) இதழாசிரியப் பணி

1962 ஆண்டில் சிறுவர் நூல்களை எழுதும் பணியினை மேற்கோண்டார். இவரது முதல் சிறுவர் நூல் ''ரப்பரின் கதை'' என்ற சிறு நூலாகும். இந்த நூல்1962 ஆம் ஆண்டு ஜவஹர்லால் நேரு பரிசைப் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. இதுதவிர, இரும்பின் கதை, காகிதத்தின் கதை, பெட்ரோலியத்தின் கதை போன்ற நூல்களை எழுதி வெளியிட்டார்.

''விண்வெளி ரசாயனம்'' ''விஞ்ஞானத் தொழிற்புரட்சியும் அதன் விளைவும்'' போன்ற அறிவியல் நூல்களை எழுதியுள்ளார் பேரா.நா.வா.

தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் விளைவாக ஆங்கிலமே அனைத்தும் என்ற கட்டமைக்கப்பட்ட பிம்பத்தை உடைக்கும் வகையில்'' ''தமிழில் முடியும்'' என்ற நூலை வெளியிட்டார். இன்றும் அதன் பொருத்தப்பாடு நீடிக்கிறது.

### மார்க்சிய நூல்கள்

இலக்கியத்தை மார்க்சிய பார்வையில் நா.வானமாமலை எழுதி வெளியிட்ட முக்கிய நூல்களில் '' பண்டைய வேத தத்துவங்களும் வேத மறுப்பு பௌத்தமும்'' என்ற நூல், குறிப்பிடத்தக்கது. இதில், இந்திய தத்துவமரபையும் பண்பாட்டின் வளர்ச்சியையும் விளக்கியிருப்பார். ''இந்திய நாத்திகமும் மார்க்சிய தத்துவமும்'', ''மார்க்சீய சமூகவியல் கொள்கை'', ''மார்க்சீய தத்துவம் இயக்கவியல் பொருள்முதல் வாதம்'', ''மார்க்சீய அழகியல்''

ஆகியன நா.வானமாமலையின் மார்க்சீய பார்வை நூல்களாகும். இதில் ''மார்க்சீய அழகியல்'' என்ற நூல் தமிழ் இலக்கிய சூழ்நிலைக்கேற்ப, மார்க்சீய அழகியலின் சில அம்சங்களை விளக்கும் நூலாக அமைந்துள்ளது.

### கதைப்பாடல் பதிப்புகள்

சமூக, வரலாற்றுக் கதை, இதிகாசம், புராணம், காவியம் ஆகியன பற்றிய பாடல்களை பதிப்பித்துள்ளார். குறிப்பிடத்தக்கவை எனில், 1960ல் கட்டபொம்மு கதை 2)1967 ல் வீணாதிவீணன் கதை 3) 1971 ல் வீரபாண்டிய கட்டபொம்மு கதை 4) 1971 ல் முதுதுப்பட்டன் கதை 5) 1971ல் காத்தவராயன் கதைப் பாடல். 6)1972 ல் கட்டபொம்மு கூத்து 7) 1972ல் கான்சாகிபு சண்டை 8) 1974ல் ஐவர் ராசாக்கள் கதை போன்ற நூல்களை மதுரை பல்கலைக்கழக உதவியுடன் வெளியிட்டுள்ளார்.

தமிழர் வரலாறும் பண்பாடும் தத்துவமும், தமிழர் வரலாறும் பண்பாடும் பழங்கதைகளும் பழமொழிகளும், புதுக்கவிதை முற்போக்கும் பிற்போக்கும், மக்களும் மரபுகளும், வ.உ.சி முற்போக்கு இயக்கங்களின் முன்னோடி, ஆகிய நூல்களை எழுதியுள்ள பேரா நா. வானமாமலை, ''Studies in Tamil Folk Literature'' என்ற ஆங்கில நூலை எழுதியுள்ளார்.

### ஆராய்ச்சி இதழ்

தமிழ் ஆராய்ச்சியின் எல்லையை ஆய்வு ரீதியில் விரிவுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டு பாமரர் முதல் கற்றறிந்த அறிஞர் வரை பங்கெடுக்கும் வகையிலான '' நெல்லை ஆய்வுக்குழு'' என்ற அமைப்பினை 1967இல் தொடங்கினார். பத்து பேரைக் கொண்டு தொடங்கப்பட்ட இந்த அமைப்பு, நாளடைவில் பாளையங்கோட்டை மட்டுமின்றி, தென்மாவட்டங்களிலும் பரவலாக ஆய்வுக் கூட்டங்களை நடத்தியது.

பின், 1969 ல் ஆராய்ச்சி இதழைத் துவக்கினார். தேவி பிரசாந்த் சட்டோபாத்தியாயா, தொ.மு.சி.ரகுநாதன், இராமசுந்தரம், போன்ற ஆய்வாளர்களின் கட்டுரைகளை வெளியிட்டுவந்தார். பண்பாடு, தத்துவம், மானுடவியல், நாட்டார் வழக்காறுகள், மொழிபெயர்ப்பு போன்ற பல்துறைக் கட்டுரைகளுடன் ஆராய்ச்சிக் குழுவினரின் கட்டுரைகளும் இந்த இதழில் வெளிவந்தன. க. கைலாசபதி, கார்த்திகேசு சிவத்தம்பி உள்ளிட்ட மார்க்சிய அறிஞர்களது பாராட்டுதல்களைப் பெற்றது ஆராய்ச்சி இதழ் என்பது குறிப்பிடத்தக்கது.

197576 ஆண்டுகளில் திராவிட மொழியியல் குறித்த ஆய்வினைமுடித்தாலும், நா.வா. மறைவுக்குப் பின்தான் இது நூலாக வெளிவந்தது. இந்தநூலுக்காக பேரா. நா.வா க்கு யாழ்ப்பாண பல்கலைக்கழகம்'' இலக்கிய கலாநிதி '' பட்டம் வழங்கி பெருமை கொண்டது.

நெல்லை ஆய்வுக்குழு மற்றும் ஆராய்ச்சி இதழ் மூலம் பல ஆராய்ச்சியாளர்களை உருவாக்கினார் ஊக்குவித்தார்.

(பேரா. நா.வானமாமலையின் பிறந்த நாள் டிசம்பர்.7 நினைவாக)

தொடர்புக்கு: 9443120051

16 ஆம் பக்க தொடர்ச்சி

உறுப்பினர் திரு. ரங்கநாதன் 2015 வெள்ள பாதிப்பின் போது கூறியதாவது,

“அடையாறு ஆற்றின் குறுக்காக கட்டப்பட்டுள்ள இப்பாலமானது, ஆற்று நீர் போக்கிற்கு பெரும் தடையை ஏற்படுத்தியுள்ளது. இது வெறும் சுற்றுச்சூழல் பிரச்சனை எனப் புறந்தள்ள முடியாது. இது பெரும் ஆபத்தை ஏற்படுத்துகிற செயலாகும்”

“முதல் ஓடுதளம் கடல் மட்டத்திலிருந்து 13 மீட்டர் உயரத்திலும் இரண்டாவது ஓடுதளம் கடல் மட்டத்திலிருந்து வெறும் 2 மீட்டர் உயரத்திலும் அமைந்துள்ளது. வானூர்தி பாதுகாப்புத் துறையிடம் இப்பிரச்சனையை புகைப்படங்களுடன் சுட்டிக்காட்டி எத்தனை முறை கடிதம் எழுதினாலும், அது செவிடன் காதில் ஊதிய சங்கு கதையாகவே உள்ளது” என்கிறார்.



2015 ஆம் ஆண்டு மழை வெள்ளத்தில் சென்னை விமான நிலையம் மூடப்படுவதற்கான காரணமும் தற்போது 2023 ஆம் ஆண்டில் மீண்டும் சென்னை விமான நிலையம் மூடப்படுவதற்காண காரணமும் ஒன்றுதான்!

சதுப்புநிலப்பகுதிகள், தனித்தன்மையான பல்லுயிரியச் சூழலை கொண்டுள்ள சிறப்பான சூழல் மண்டலமாகும். சிற்றுயிர் முதல் பறவைகள் வரை எண்ணிலடங்கா உயிரினங்களுக்கு வாழ்விடமாகக் இந்த சதுப்பு நிலங்கள் திகழ்கின்றன. அந்த வகையில் சென்னையில் உள்ள பள்ளிக்கரணை சதுப்புநிலப் பரப்பானது இயற்கையாளர்களின் பெரு விருப்பத்திற்கான இடமாக உள்ளது. சுமார் 5,000 ஹெக்டேர் பரப்பளவில் பரந்து விரிந்திருந்த பள்ளிக்கரணை சதுப்பு நிலப்பகுதி இன்று பத்தில் ஒரு பங்கு மட்டுமே எஞ்சியுள்ளது. மேலும், சென்னை மாநகராட்சியின் குப்பை கொட்டும் கிடங்காக இந்த சதுப்பு நிலம் திகழ்கிறது.

“நமக்கு நினைவு தெரிந்த காலத்தில் சென்னையின் தெற்குப் பகுதியில் 50 சதுர கிலோ மீட்டர் பரப்புக்குத் தண்ணீருடன் அது விரிந்திருந்தது. இன்றைக்கு அதில் எஞ்சியிருப்பது எவ்வளவு தெரியுமா? வெறும் 4.3 சதுர கி.மீ. மட்டுமே. அதன் நிஜப் பரப்பில் பத்தில் ஒரு பங்குகூட இல்லை. இந்தச் சதுப்புநிலப் பகுதியின் வடக்குப் பகுதியில் புற்றுக்கட்டிபோல, பெரும் மலையாகத் துருத்திக்கொண்டு வளர்ந்து நிற்கிறது குப்பைக்கூளம்.

இந்தச் சதுப்புநிலத்தை இரண்டு முக்கிய சாலைகள் பிளந்து செல்கின்றன. அவற்றுக்கு இடையில் இருக்கும் சின்னச் சின்ன மதகுகள் பெரும் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் சேரும் மழைநீரைச் சதுப்பு நிலத்தின் ஒரு பக்கத்திலிருந்து இன்னொரு பக்கம் கொண்டுவந்து சேர்ப்பதற்கு நிச்சயம் போதுமானவை அல்ல. இந்தச் சதுப்பு நிலத்தின் விளிம்புகளைத் தேசியக் கடல் தொழில்நுட்ப நிறுவனம் (ழிமிளிஜி) போன்ற நிறுவனங்கள் கரைத்துவிட்டன.

| 2015 | |
|---|---|
| நுங்கம்பாக்கம் | |
| நாள் | செ.மீ. |
| டிசம்பர் 1 | 4 |
| டிசம்பர் 2 | 29 |
| டிசம்பர் 3 | 1 |
| மீனம்பாக்கம் | |
| டிசம்பர் 1 | 6 |
| டிசம்பர் 2 | 35 |
| டிசம்பர் 3 | 3 |

| 2023 | |
|---|---|
| நுங்கம்பாக்கம் | |
| நாள் | செ.மீ. |
| டிசம்பர் 2 | 6 |
| டிசம்பர் 3 | 23 |
| டிசம்பர் 4 | 24 |
| மீனம்பாக்கம் | |
| டிசம்பர் 2 | 8 |
| டிசம்பர் 3 | 25 |
| டிசம்பர் 4 | 19 |

நீர்நிலைகளின் மீது கட்டுமானங்களை ஏற்படுத்துவதால் ஏற்படும் தாக்கங்கள் உள்ளிட்ட பல்வேறு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டைச் செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனம் ழிமிளிஜி என்பதுதான் இதில் வேடிக்கை! இந்தச் சதுப்புநிலத்தின் மற்றப் பகுதிகள் ஐ.டி. வழிப்பாதைக்காகப் பலி கொடுக்கப்பட்டு விட்டன” என்கிறார் சூழலியலாளர் திரு.நித்தியானந்த் ஜெயராமன்.

## ஆக்கிரமிப்புகள் குறித்து இப்பகுதி மக்கள்

“தகவல் தொழில்நுட்ப வழிப்பாதையின் பெரும்பாலான கட்டுமானங்கள் பள்ளிக்கரணை சதுப்புநிலம், அத்துடன் இணைந்த நீர்நிலைகளின் மீது கட்டப்பட்டுள்ளன. பள்ளிக்கரணை சதுப்புநிலத்தின் வடகிழக்குப் பகுதியில் இருந்த பெருங்குடியில் பிரச்சினைகளை மோசமாக்கும் வகையில் சென்னை மாநகராட்சி குப்பைகளைக் கொட்ட ஆரம்பித்தது. மாநகராட்சி தரும் புள்ளிவிவரத்தின்படி சென்னை மாநகரில் ஒரு நாளைக்கு 45 லட்சம் கிலோ குப்பையும், 70 ஆயிரம் கிலோ கட்டிடக் கழிவும் உற்பத்தியாகின்றன. இதில் பாதிக்கு மேல் பெருங்குடியில் கொட்டப்படுகின்றன.

சுற்றுச்சூழல் அமைப்புகளின் நீண்ட போராட்டத்துக்குப் பிறகு 2007 ஆம் ஆண்டு பள்ளிக்கரணை சதுப்புநிலத்தின் 317 ஹெக்டேர் பரப்பைப் பாதுகாக்கப்பட்ட காடாகத் தமிழக அரசு அறிவித்ததால், அந்தப் பகுதி மட்டும் கட்டுமானங்களிலிருந்து தப்பித்து இருக்கிறது”

பள்ளிக்கரணை சதுப்புநில ஆக்கிரமிப்பால் கடந்த 2015 ஆம் ஆண்டில் பள்ளிக்கரணை சுற்றுவட்டாரப் பகுதிகள் தீவிரமான வெள்ள பாதிப்புக்கு உள்ளாயின. தற்போதும் இந்தப் பாதிப்புகள் தொடர்கின்றன. மேலும்..





வேளச்சேரி பறக்கும் ரயில் முனையமானது, நீர்ப்பிடிப்பு பகுதியின் மேல்தான் கட்டப்பட்டுள்ளன.

கிடப்பிலுள்ள சென்னை துறைமுகம் மதுரவாயில் பறக்கும் சாலைக்கான தூண்கள் கூவத்தின் மேல்தான் நிறுவப்பட்டுள்ளன. பக்கிங்காம் கால்வாயில்தான் பறக்கும் ரயிலின் தூண்கள் நிறுவப்பட்டுள்ளன.

மதுரவாயல் முதல் பெருங்களத்தூர் வரை செல்கிற புறநகர தேசிய நெடுஞ் சாலைகள் போரூர் ஏரியை ஊடறுத்தும் எண்ணிலடங்கா உபரி நீர் கால்வாய்களை தடுத்தும் செல்கின்றன.

அதேபோல வண்டலூர், நெமிழிச்சேரி, மீஞ்சூர் மார்க்க வெளிவட்ட சாலை கட்டமைப்புகள் செம்பரம்பாக்கத்திற்கு வருகிற கால்வாய்களை தடுத்து மூடிவிட்டன.

வில்லிவாக்கம் ஏரி, நுங்கம்பாக்கம் ஏரி போன்றவை இருந்ததற்கான தடமே இல்லை. “கல்வித்தந்தைகளின்” நீர்நிலை ஆக்கிரமிப்புகள் தனி நூல் போடுவதற்கு உரித்தானவை.

இவற்றுடன், அம்பத்தூர், மதுரவாயல், பாடி ஏரிகள், எண்ணூர் அலையாத்திக் காடுகள் என எண்ணற்ற நீர்நிலைகள் குற்றுயிரும் கொலை உயிருமாக உள்ளன.

இபப்டி சென்னை மாநகராட்சியின் நீர்நிலை ஆக்கிரமிப்புகளையும் அடுக்கிக் கொண்டே போகலாம்.

171 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் இருந்த சென்னை நகரம், இன்று சுற்றியுள்ள திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டப் பஞ்சாயத்து, நகராட்சிகளை இணைத்துக்கொண்டு 1,189 சதுர கி.மீ. பரப்பளவில் பிரம்மாண்ட மாநகராக விரிவடைந்துள்ளது. இன்னும் விரிவடைந்துகொண்டே செல்கிறது.

சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், சேவைத் துறை முதலீடுகள் என சென்னை நகரை மையமாகக் கொண்ட சர்வதேச மூலதனக் குவிப்புகள் கடந்த கால் நூற்றாண்டில் தீவிரமடைந்தன. நகரங்களுக்கு இடையிலான தேசிய நெடுஞ் சாலைகள், துறைமுக விரிவாக்கங்கள், விமானப் போக்குவரத்து விரிவாக்கங்கள் என நகர்ப்புற பொருளாதாரம் சார்ந்தும் முதலாளிய நலனுக்கான உட்கட்டமைப்பு வளர்ச்சிகளுமே மாநிலத்தின் வளர்ச்சியாக ஆளும் அரசால் மேற்கொள்ளப்பட்டன.

வேகமான இந்த முதலாளிய வளர்ச்சிக்கு முதலில் பலியிடப்பட்டது இயற்கை நில அமைப்புகள் தான். அதற்கான விலையைத்தான் இன்று கொடுத்துக் கொண்டிருக்கிறோம். முதலாளித்துவம் உபரி உழைப்பை மட்டும் சுரண்டவில்லை. நமது சுற்றுச்சூழலையும் சேர்த்தே சுரண்டி வருகிறது. கூடவே நாம் வாழும் நகரத்தை நரகமாகவும் மாற்றி விட்டது.

-அருண் நெடுஞ்செழியன்
(தொடர்புக்கு: 9842391963)



சைதாப்பேட்டை அடையாறு ஆறு

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 09.12.2023 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

1 ஆம் பக்க தொடர்ச்சி

சமூக ஊடங்களில் தீவிரமாக பரப்பியது குறிப்பிடத்தக்கது.

### வடகிழக்கு பருவமழையும் சென்னை வெள்ளமும்:

வடகிழக்கு பருவமழை காலத்தில் பெய்யும் மழையானது புயலோடு வருவது இயல்பு. சென்னையின் புவி அமைப்பு அதன் வரலாற்றில் இப்படியான பல புயல்களையும் கனமழைகளையும் எதிர்கொண்டு வருவதைப் பார்க்கலாம். சென்னையின் புவியியல் அமைப்பானது கடலும் கடல் சார்ந்த நிலப்பரப்புமாகும். இப்படியான ஒரு நகரத்தில் கடந்த நூறாண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட திட்டமிடப்படாத நகரமயமாக்கலின் விளைவை ஒவ்வொரு கனமழையும் அம்பலப்படுத்துகிறது. நீர்நிலைகளை ஆக்கிரமித்து கட்டப்பட்ட கட்டிடங்களை மழை நீர் சூழ்ந்துகொண்டுள்ளது. கால்வாய்களில் கொட்டப்பட்ட குப்பைகள் மீண்டும் கரைக்கே வீசி எறியப்படுகின்றன. முதலைகள் சாலைகளைக் கடக்கின்றன. இவையெல்லாம் சொல்கிற செய்தி ஒன்றுதான்.

சென்னை சுற்றுவட்டாரப் பகுதிகள் இத்தகையே இயற்கை சூழ்நிலைகளை எதிர்கொள்ளக்கூடிய இயற்கை கட்டமைப்பை கொண்ட நிலப்பரப்பாகும். அடையாறு, கூவம், பக்கிங்காம் கால்வாய் என ஆறுகளும் முகத்துவாரங்களும் கால்வாய்களும் பள்ளிக்கரணை போன்ற சதுப்பு நிலங்களும் கொண்ட அற்புதமான நிலவியல் அமைப்பாகும்.

ஆனால் இந்தியாவின் டெட்ராய்ட் என்ற சிறப்பு பெயருக்காகவும், இந்தியாவின் இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலம் என்ற பெயருக்காகவும் சென்னை மாநகரம் மிகப்பெரிய விலையை கொடுத்து வருகிறது. இயற்கை கட்டமைப்பை புரிந்து கொள்ளாத அப்பட்டமான முதலாளித்துவ மையவாத வளர்ச்சியானது சென்னையின் வடிகால் அமைப்பையும் நீர்நிலைகளையும் கிட்டத்தட்ட அழித்துவிட்டது. ஒவ்வொரு வெள்ளத்தின் போதும் பேசப்படும் இந்தப் பிரச்சனைகளை மழை வெள்ளம் வடிந்த பின்னர் கண்டுகொள்ளப்படாமல் போகிறது. 2015 வெள்ள பாதிப்பின் போது, அதற்கு முந்தைய வெள்ளங்களில் இருந்து பாடங்களை கற்கவில்லை. தற்போது 2015 வெள்ள பாதிப்பின் பாடங்களை கற்றிருக்க வேண்டும்.

மாறாக, மீண்டும் மழை பாதிப்பு, அதி கனமழை, போக்குவரத்து பாதிப்பு, அத்தியாவசிய வாழ்க்கை முடக்கம் போன்ற சொல்லாடல்கள் ஊடகங்களில் தெளிவின்றி பரப்பப்படுகிறது. இத்தகைய அதீத மனித மையவாதப் போக்கை மாற்றிக்கொள்ளாவிட்டால், நமது இயற்கை அறிவியல் பார்வையை சற்று மேம்படுத்திக் கொள்ளாவிட்டால் எதிர்வரும் ஒவ்வொரு பருவமழையும் சிக்கல் மிகுந்தவையாகத்தான் தெரியும்.







### ஆக்கிரமிப்பு அரசியல்:

ஒவ்வொரு பருவமழை வெள்ளப் பாதிப்பின் போதும் ஆக்கிரமிப்பு என்ற சொல்லாடலைப் பயன்படுத்துவது வாடிக்கையாகிவிட்டது. ஆனால் இந்த ஆக்கிரமிப்பு அரசியலின் வர்க்க கண்ணோட்டத்தை வசதியாக மறந்துவிட்டுத்தான் இந்த சொல்லாடல் பயன்படுத்தப்படுகிறது.

மனிதனால் ஏற்படுத்தப்பட்ட செயற்கை வெள்ளம் என்று கூறும்போது, யார் அந்த "மனிதன்" என்பது பற்றி விரிவாக ஆய்வு செய்யவேண்டியது அவசியம்.

பள்ளிக்கரணை, செம்பரம்பாக்கம், வில்லிவாக்கம் ஏரி போன்ற நீர்நிலைகளில் தமிழக ஆட்சியாளர்களும் அவர்களுடைய சகாக்களின் ரியல் எஸ்ட்டேட் லாபியாலும் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்புகளையும், எண்ணற்ற வரத்து மற்றும் வெளியேற்று கால்வாய்கள், நீர்ப்பிடிப்பு பகுதிகள், வெள்ள வடிகால் பகுதிகள் போன்றவற்றில் மேற்கொள்ளப்பட்ட மாநகராட்சியின் ஆக்கிரமிப்புகளையும், வெளிவட்ட சாலைகள், புறநகரச் சாலைகளை நீர்வழித்தடங்கள் மற்றும் கால்வாய்களின் குறுக்காக கட்டிய நெடுஞ்சாலை துறையினரின் சாலை ஆக்கிரமிப்புகளையும், கூவம், அடையாறு, பக்கிங்காம் கால்வாய் கரையோரம் வசிக்கும் மக்களின் ஓலைக் குடிசைகளையும் ஒரே தட்டில் வைத்து ஆக்கிரமிப்பாளர்கள் என "பொதுமைப்படுத்தி" பார்க்க இயலாது அல்லவா!



கழிவுநீர் வடிகால்கள், மழை வெள்ள நீர் வடிகால்கள், திடக்கழிவு நீர் மேலாண்மை போன்ற அடிப்படை நகர்ப்புற உள்கட்டமைப்புகள் தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள திட்டங்களைக் கண்காணித்து செயல்படுத்துவதில் ஆட்சியாளர்கள் காட்டும் அலட்சியம் மற்றும் நகர்மயமாக்கலின் பேரால் ஒழுங்கற்ற வகையில் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற நகர விரிவாக்கத்திற்குப் பின்னாலுள்ள அரசியல் பொருளாதாரக் காரணிகள் போன்றவை குறித்தும் பரிசீலிக்க வேண்டிய அவசியத் தேவை இன்று எழுந்துள்ளது.

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம், சென்னை மாநகராட்சி, சென்னை நகர குடிநீர் மற்றும் கழிவுநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், பொதுப்பணித் துறை என நகர வளர்ச்சியில், பராமரிப்பில் முக்கிய அங்கம் வகிக்கும் அரசு எந்திரங்களின் அரசியல் சார்பு நிலை, ரியல் எஸ்டேட் தரகர்களின் லாபி மற்றும் நிர்வாகப் போதாமை, துறைகளுக்கு இடையிலான ஒருங்கினைப்புக் குறைபாடுகள், மாற்றுப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் உள்ள போதாமை போன்றவை குறித்தும் ஆழமாக விவாதிக்க வேண்டிய தேவையை ஒவ்வொரு மழை வெள்ளமும் உணர்த்துகிறது.

நகரக் கட்டுமானமும் நீர்நிலைகளும்;

சென்னை விமான நிலையம், இந்தியாவின் நான்காவது பெரிய விமான நிலையமாகும். இந்த விமான நிலையத்தில் உள்ள இரு விமான ஓடுதளங்களில் இரண்டாவது ஓடுதளம் அடையாறு ஆற்றுக்கு குறுக்குவெட்டாக கட்டப்பட்டுள்ளது. குறைவான உயரத்தில், ஆற்று நீரின் போக்கை மறித்துக் கட்டப்பட்டுள்ள இப்பாலத்தின் மேல்தான் ஆபத்தான வகையில் விமான ஓடுதளம் கட்டப்பட்டுள்ளது. இது குறித்து வானூர்தி பாதுகாப்புத் துறையின் முன்னாள்

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்

Janasakthi Tamil Weekly Published by R. Mutharasan and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: T.M.Murthi, Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by A.Sivakumar at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.